விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 23 புதன்கிழமை (09.11.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 325

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கையில் ஏழு இரகசிய முகாம்கள்

## அம்பலப்படுத்தியது அம்னெஸ்டி

(கொழும்பு)

இலங்கையில் ஏழு இரகசிய முகாம்கள் இன்னமும் இருப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. இவற்றில் சித்திரவதைகள் இன்னமும் இடம் பெறுவதாகவும் அவ் அமைப்பு கூறியுள்ளது. சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நாவின் கூட்டத் தொடரின் போது இலங்கையில் நிலவும் மனித உரிமை மீறல் குறித்து ஆராயும் போதே இத்தகவல் வெளியாகியுள்ளன.

(20ஆம் பக்கம் பார்க்க)

## நாம் குற்றமே செய்யவில்லை என்பதை நான் கூறவில்லை

### அமெரிக்காவிடம் பசில் தெரிவிப்பு

(நியூயோர்க்)

நாம் குற்றமே செய்யவில்லை என நான் கூறவில்லை என ஜனாதிபதியின் ஆலோசகரும், சகோதரருமான பசில் ராஜபக்ஷ அமெரிக்க அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.


அமெரிக்காவுடன் சிறந்த இருதரப்பு உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.


அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகார பிரிவு உறுப்பினர் ஒருவருடன் நடைபெற்ற சந்திப்பின் போது பசில் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி

(19ஆம் பக்கம் பார்க்க)

## சார்க்கில் ஜனாதிபதிக்கு நெருக்கடி மாலைதீவு விரைகிறார் பிளேக்!





(மாலைதீவு)

மாலைதீவில் நடைபெறவுள்ள உச்சி மாநாட்டில் தெற்கு, மத்திய ஆசியப் பிராந்தியங்களுக்கான அமெரிக்க உதவி ராஜாங்க செயலர் றொபோர்ட் ஓ பிளேக் தலைமையிலான குழுவொன்று பங்கேற்கவுள்ளது. அட்டு நகரில் எதிர்வரும் 10ஆம், 11ஆம் திகதிகளில் 17ஆவது சார்க் உச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி மகிந்த உள்ளிட்ட சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், மாலைதீவு ஆகிய 8 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த மாநாட்டில் பார்வையாளராக கலந்து கொள்ளவுள்ள அமெரிக்க குழுவிற்கு அமெரிக்காவின்

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோ.ஒன்றியம் கவலை வெளியீடு

(கொழும்பு)

இலங்கையில் இணையத்தளங்கள் பல தடை செய்யப்பட்டுள்ளதற்கு ஐரோப்பிய ஒன்றியம் கவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், இலங்கை அதிகாரிகள் ஊடக சுதந்திரத்தை உறுதி செய்யுமாறும், மதித்து நடக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஊடகங்களினால் வழங்கப்படும் தகவல்களை

(20ஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாத திடீர்க் காய்ச்சல் ஒன்றரை வயதுப் பாலகன் பலி!

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத திடீர்க் காய்ச்சலில் சங்கானையில் ஒன்றரைவயதுக்குழந்தை உயிரிழந்துள்ளது. இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

சங்கானை ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த அருளேந்திரகுமார் கஜரூபன் (வயது 18 மாதங்கள்) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார். நேற்று முன்தினம் இரவு திடீரென ஏற்பட்ட காய்ச்சலையடுத்து, நேற்றுக்காலை சங்கானை வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர்.

அங்கு சிகிச்சை பெற்றுவரும் நிலையில் குழந்தை உயிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது. (எ-6)

## புலிகளிடம் மீட்கப்பட்ட தங்கம் எங்கு உள்ளது?

### கேள்வி எழுப்பினார் அனுர எம்.பி.

(கொழும்பு)

புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட தங்கம் மத்திய வங்கியில் வைக்கப்பட்டுள்ளதா? என ஜனநாயக தேசியக் கூட்டணியின்பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க கேள்வியெழுப்பினார்.

இலங்கை மத்திய வங்கியில் கையிருப்பில் இருக்கும் தங்கங்களுக்குள் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட தங்கமும் சேர்க்கப்பட்டிருக் கின்றதா என்று ஜனநாயக தேசியக் கூட்டணி எம்.பி. அனுர குமார திசாநாயக்க நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் மத்திய வங்கியின் இருப்பிலுள்ள

(19ஆம் பக்கம் பார்க்க)

## தப்பியோடிய படையினரின் பதிவுகளை நீக்க முடிபு

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் பல்லாயிரம் பேரை பிடித்து தண்டிப்பது என்று திட்டமிடப்பட்டிருந்த ஒரு நடவடிக்கையை கைவிட்டு அவர்களை இராணுவத்தில் இருந்து நீக்குவது அல்லது பதிவுகளில் இருந்து அகற்றிவிடுவது என்ற மாற்று நடவடிக்கையை முன்னெடுக்கப்போவதாக இராணுவம் அறிவித்துள்ளது.

இவ்வகையில் தப்பியோடியவர்கள் கிட்டத்தட்ட 60 ஆயிரம்பேர் உள்ளனர் என்று இராணுவம் கூறுகிறது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்த்துக் குரல் கொடுப்போர் இலங்கையில் நசுக்கப்படுகின்றனர்

### பி.பி.சி. தெரிவிப்பு

(லண்டன்)

எதிர்த்துக் குரல் கொடுப்பவர்களை நசுக்குவதில் இலங்கை அரசாங்கம் தீவிரம் காட்டி வருவதாக பி.பி.சி. சந்தேசிய தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அரசாங்கத்தை விமர்சிக்கும் சில இணையத்தளத்தை தடைசெய்வது தொடர்பாக அரசாங்கத்தால் இறுதியாக எடுக்கப்பட்டுள்ள நகர்வை ஊடக கண்காணிப்பு அமைப்பு வன்மையாக கண்டித்துள்ளது.

ஊடகங்கள் மீது அச்சுறுத்தல் விடுக்கப்படுதல் மற்றும் அவற்றின் நடவடிக்கைகளில் தலையீடு செய்தல் போன்றவற்றால் இலங்கை அரசாங்கம் மீது அனைத்துலக சமூகத்தின் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ள போதிலும் அரசாங்கம் புதிதாக ஊடகங்களை இலக்கு வைத்துள்ளதாக சுதந்திர ஊடக அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையுடன் தொடர்புபட்ட எந்தவொரு செய்திகளையும் வெளியிடும் இணையத்தளங்கள், வெகுசன ஊடகம் மற்றும் தகவல்துறை அமைச்சிடம் தம்மை பதிவுசெய்து கொள்ள வேண்டும் என அந்த அமைச்சால் சனியன்று வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின்

(20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தனியார் பாடசாலையில் வேலைவாய்ப்பு

# பண மோசடியில் ஈடுபட்ட மூவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

தனியார் பாடசாலையொன்றை யாழில் ஆரம்பிக்கப் போவதாகவும் அதன் மூலம் வேலைவாய்ப்பை வழங்குவதாகவும் கூறி பண மோசடி செய்ததாக கூறப்படும், மூன்று பேர் விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலொன்றையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

பத்திரிகை விளம்பரம் ஒன்றின் மூலம் கோரப்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பித்த சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்களிடம் இம் மோசடி மேற்கொள்ளப்பட்டது.

நேர்முகத்தேர்வுக்கு தோற்றிய இளைஞர், யுவதிகளிடம் விண்ணப்ப படிவத்திற்காக 100 ரூபாயும் வேலை செய்வதற்கான அனுமதிக் கடிதத்திற்காக 2 ஆயிரத்து 500 ரூபாயும் அறவிட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

இதில் பாதிக்கப்பட்ட இளைஞர், யுவதிகள் யாழ். பொலிஸ் நிலையத்தில் தற்போது தமது முறைப்பாடுகளை பதிவு செய்து வருவதால் பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (எ-6)

## பஸ் மோதி பெண் காயம்

யாழ்.பஸ் நிலையத்திற்குள் வைத்து பெண் ஒருவர் மீது பஸ் மோதியதில் அவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் திருநெல்வேலியைச் சேர்ந்த பா.குணவதி என்பவரே காயமடைந்தவராவார். காயமடைந்தவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-6)

## பொதுக் கூட்டம்

தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய பழைய மாணவர் சங்க 14-வது வருடாந்த பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் சங்கத் தலைவர் ச.திருச்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ)

## 7 ஆம் அறிவால் குழப்பம்

# தென்னிந்திய தமிழ்ப் படங்களை இலங்கையில் வெளியிடத் தடை?

தீபாவளி வெளியீடான சூர்யாவின் 7ஆம் அறிவு திரைப்படத்தில் இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் கூறப்பட்ட வசனங்கள் இலங்கையில் நீக்கப்பட்டமைக்கு எதிராக இனிவரும் காலங்களில் இலங்கையில் தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்களை வெளியிடக் கூடாது என இந்தியாவில் போராட்டம் வெடித்துள்ளது.

இலங்கைத் தமிழர்கள் மீது பல நாடுகள் இணைந்து தாக்குதல் நடத்தியதாலேயே தமிழீழ விடுதலைப் போராட்டம் வீழ்ச்சியை அடைந்ததாக ஏழாம் அறிவு படத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இந்த வசனங்கள் நீக்கப்பட்ட நிலையிலேயே இத்திரைப்படம் இலங்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

இதனால் இந்தியாவின் தமிழ்த் திரையுலகில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இந்நிலையில் இனிவரும் காலங்களில் இலங்கையில் எனது திரைப்படங்களை திரையிடமாட்டேன் என்று இயக்குநர் சசிக்குமார் அறிவித்துள்ளார். 7ஆம் அறிவு திரைப்படத்தின் தயாரிப்பாளர் உதயநிதி ஸ்டாலின் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தயாரிப்பாளர்கள் அனைவரும் இலங்கையில் தமிழ்ப் படங்கள் திரையிடுவதை தவிர்க்க வேண்டும் என்று இந்து மக்கள் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அக்கட்சி சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் தமிழ்ப்படங்களை திரையிட அனுப்பமாட்டோம் என்று உதயநிதி ஸ்டாலின், இயக்குநர் சசிக்குமார் ஆகியோர் அறிவித்து இருப்பதை வரவேற்கின்றோம் என்றுள்ளது.

உலகம் முழுவதும் இலங்கைத் தமிழர்கள் தான் தமிழ்ப் படங்களை பார்க்கின்றனர். இலங்கையில் தமி ழர்கள் படுகொலை செய்யப்பட்டதை உலகமே கண்டித்து வருகிறது. அந்நாட்டுக்கு நடிகர்-நடிகைகள் செல்லக் கூடாது என்று ஏற்கெனவே தடை விதிக்கப் பட்டுள்ளது. அதுபோல தமிழ்ப் படங்களையும் அனுப்புவதில்லை என்று தயாரிப்பாளர்கள் முடிபு செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இதேவேளை 7ஆம் அறிவு திரைப்படத்தின் வெற்றி குறித்து ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தியுள்ள நடிகர் சூர்யா, இலங்கை தொடர்பிலும் சில கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

இலங்கையில் 7ஆம் அறிவு திரைப்படத்தில் முக்கியமான வசனங்களை நீக்கியுள்ளார்கள். ஆனால் நாம் ஒரு விடயத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். இலங்கை அரசை எதிர்த்து நாம் இத் திரைப்படத்தின் மூலம் சண்டை போடவில்லை. இந்த வசனங்களை நீக்கினாலும் நாங்கள் சொல்ல நினைத்தவை மக்களை சென்று சேர்ந்து விட்டன என்று கூறியுள்ளார். (எ-5)

## வன்னித் தொண்டராசிரியர்கள்

# ஆளுநர் அலுவலகம் முன் போராட்டம்



நிரந்தர நியமனம் வழங்கக் கோரி வன்னித் தொண்டர் ஆசிரியர்கள் நேற்று வட மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்தோடு வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திரசிறிக்கு ஆளுநரின் செயலாளர் ஊடாக மகஜர் ஒன்றையும் கையளித்தனர். இதன் பிரதி, வட மாகாண ஆளுநரின் செயலாளரும், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளருமான இ. இளங்கோவனிடமும் ஆளுநர் அலுவலகத்தில் வைத்து கையளித்தனர்.

இதேவேளை வன்னித் தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் சி. நகுலேஸ்வரன் உள்ளிட்ட 6பேர் ஆளுநரின் செயலாளரை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலையடுத்து ஆளுநரின் செயலாளரினால் பத்திரிகையாளர் சந்திப்பொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தச்சந்திப்பின்போது, வன்னித் தொண்டர் ஆசிரியர்கள் தம்க்கென நிரந்தர நியமனம் பெற்றத்தரக் கோரி அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் போராட்டம் தொடர்பாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவிடமும், வடமாகாண ஆளுநரிடமும் தெரிவித்தேன்.

இதற்கமைய இன்று பாராளுமன்றத்தில் வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவது தொடர்பான விசேட அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொலைபேசியில் தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆகியோரும் வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பாக பாராளுமன்றத்தில் பேசவுள்ளதாகவும் ஆளுநரின் செயலாளர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் பேசி உரிய தீர்வினைப் பெற்றுத் தருவதாக அமைச்சர்கள் வாக்குறுதியளித்ததையடுத்து தமது உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடுவதாகவும் உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாவிட்டால் தாம் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் வன்னி தொண்டர் ஆசிரியர்கள் தெரிவித்தனர். நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை இந்தப் போராட்டம் ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பு நடைபெற்றது.

இதேவேளை இந்த உண்ணாவிரதப்போராட்டத்தில் முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மடு, கிளிநொச்சி, மருதங்கேணி ஆகிய வலயங்களைச் சேர்ந்த 100இற்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் ஈடுபட்டனர். (ச-6)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

# ஆண்கள் விடுதியின் உதவிக் காப்பாளர் மாணவன் ஒருவரால் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆண்கள் விடுதியின் உதவிக் காப்பாளர் நேற்று மாணவர் ஒருவரால் தாக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து தாக்குதலுக்கு உள்ளான உதவிக் காப்பாளர் பல்கலைக்கழக நிர்வாகத்திடமும், கோப்பாய் பொலிஸ் நிலையத்திலும் முறையிட்டுள்ளார்.

இதனையடுத்து யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரின் அறிவுறுத்தலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த விடுதிக் காப்பாளர் மற்றும் சிரேஷ்ட மாணவ ஆலோசகர் ஆகியோர் நிலைமை தொடர்பில் ஆராய்ந்தனர்.

இதன்போது பிரஸ்தாப மாணவன் மது போதையில் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இந்நிலையில் பிரஸ்தாப மாணவனை மறு அறிவித்தல் வரை பல்கலைக்கழகத்துக்குள் நுழைய பல்கலைக்கழக நிர்வாகத்தால் தடை விதிக்கப்பட்டது.

இதேவேளை விடுதியின் உப காப்பாளரின் முறைப்பாட்டுக்கு அமைய துணைவேந்தரின் அனுமதியுடன் மாணவர் விடுதிக்குச் சென்ற கோப்பாய் பொலிஸார் சம்பந்தப்பட்ட மாணவனை கைது செய்ய முயன்றபோதும், மாணவர் மன்ற பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு இணங்க தனது முறைப்பாட்டை உதவிக் காப்பாளர் வாபஸ் பெற்றுக் கொண்டதன் அடிப்படையில் மாணவனின் கைது தடுக்கப்பட்டதுடன் நிலைமையும் சுமுகமாக்கப்பட்டது. (எ)

## வள்ளி சிலை மீட்பு



ஐம்பொன்னாலான வள்ளிசிலை ஒன்று கொக்குவில் மேற்கு பகுதியில் நேற்று காலை மீட்கப்பட்டு அப் பகுதி கிராம சேவையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

கொக்குவிலில் நீதிராசா வீதியும் ஜனா வீதியும் இணையும் பகுதியிலேயே இச்சிலை மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் அப்பகுதி வர்த்தகர் ஒருவர் சாக்கினால் சுற்றப்பட்ட நிலையில் இச்சிலையைக் கண்டுள்ளார். எனினும் பிற்பகல் 2.30 மணியளவில் சாக்கைப் பிரித்துப் பார்த்தபோது சுமார் ஒரு அடி உயரமும் 5 கிலோ நிறையுமுடைய அம்மன் சிலை காணப்பட்டது.

இதுதொடர்பாக யாழ்ப்பாண பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9 ,11)


**காணி விற்பனைக்கு**

அல்வாய் உப தபாற் கந்தோர் முன்பாக 6 பரப்பு காணியுடன் பனைகளும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- T.P. No.:
021 3735658
071 4324805
(க-4931)

**காணி விற்பனைக்கு**

அல்வாய் உப தபாற் கந்தோர் முன்பாக 7 பரப்பு 2 குளி காணியும் பனைகளும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- T.P. No.:
021 3735658
071 4324805
(க-4932)

**1-ம் ஆண்டு நினைவஞ்சலி**

“ஆலமரமாய் நீயிருக்க அதன்கீழ்
காலமெல்லாம் இளைப்பாறக் காத்திருந்தோம்”

**அமரர் (திருமதி) இராஜேஸ்வரி சிறீராஜபுலேந்திரன்**

(சரவணா அச்சக உரிமையாளரின் அன்பு மனைவி)



பெற்ற தனால் தாயாகி உற்ற துணையாகி
மற்றைய பொழுதுகளில் மனந்திறந்து பேசும்
தோழியாய் மதிவுரை மந்திரியாய்
உலகமே நீயாகி உயர் தெய்வமாகி
அனைத்துமாய் ஆனவளே எம்முயிரே
நினைத்தோமா உனைப் பிரிவோமென்று
ஆலமரமாய் நீயிருக்க அதன் கீழ்
காலமெல்லாம் இளைப்பாறக் காத்திருந்தோம்
பாதிவழியினிலே உன் பயணம் முடிந்ததென்ன
சாய்ந்து அழத் தோளுமில்லை – இங்கே
மடி தாங்க நீயுமில்லை
நீ யில்லா வெற்றிடங்கள் என்றும் வெறுமை தானம்மா
எம் ஜீவன் ஓயும் வரை

தோற்றம் 29.07.1956 | மறைவு 21.10.2010

திதி: 09.11.2011

உன் ஆத்மா சாந்தி பெற தினம் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்
தகவல்: சி. சாரூபன் (மகன்)
உரிமையாளர் பூஜா மொபைல்ஸ்
தொ.பே. 021 221 9020

29, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (க)

## இன்று ஒரு தகவல்

# முதல் வணக்கம்

கம்பர் தாம் எழுதிய இராமாயணத்தில் குறிப்பிட்டிருக்கும் ஒரு செய்தியை வைத்துக் கொண்டு, அங்கே என்ன நடந்திருக்கும் என்று பெரியவர்கள் ஊகித்து சொல்லியிருக்கிறார்கள். அதை இப்போது பார்ப்போம்.

சீதா கல்யாணம் முடிந்தது.மண்டபத்தில் ஏகப்பட்ட கூட்டம். கல்யாணம் முடிந்தவுடனே மணமேடையிலிருந்து இராமரும் அவரைத் தொடர்ந்து சீதா பிராட்டியும் வந்து கொண்டிருந்தனர். கூட்டத்தில், இருந்த "சீதையை திருமணம் செய்து கொண்ட இராமர் யாரை முதலில் வணங்கப் போகிறார்?'' என்பதைத் தெரிந்து கொள்வதில் அதிக ஆர்வமுடையவராய் இருந்தனர்.

சீதை பின் தொடர இராமர் திருமண மண்டபத்தைச் சுற்றி வந்த போது, தூரத்தில் தசரதர் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் அருகே இருவரும் சென்றனர். அதைப் பார்த்ததும்,' சரி... தசரதருக்கு தான் முதல் நமஸ்காரம்' என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால், அவர்கள் எதிர்பார்த்தது நடக்கவில்லை. இருவரும் தசரதரைத் தாண்டி அப்பால் சென்றனர்.

அடுத்ததாக கௌசல்யை அமர்ந்திருக்கிறாள். அந்தப் பக்கமாக இவர்கள் போய்க் கொண்டிருந்தனர். 'ஓகோ... கௌசல்யைக்குத்தான் முதல் வணக்கம்' என்று இப்போது நினைத்தார்கள்.

ஏனெனில்," அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். இதில் 'அன்னை' தானே முதலில் வருகிறது! ஆதலால் தாயாரைத் தான் முதலில் வணங்க வேண்டுமென்று இராமர் நினைக்கிறார் போலிருக்கிறது" என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால், இராமர் தாயையும் தாண்டி அப்பால் போகிறார்.

குலகுரு வசிஷ்டர் அடுத்தாற் போல் இருக்கிறார். 'குரு வணக்கம் முதலில் என்று இராமர் நினைக்கிறார் போலிருக்கிறது' என்று எல்லோரும் நினைத்தார்கள். அதுவும் தவறாகப் போயிற்று. இராமர் வசிஷ்டரையும் வணங்காமல் மேற்கொண்டு செல்கிறார்.

இதைப் பார்க்கிறார் விசுவாமித்திரர். கொஞ்சம் நிமிர்ந்து உட்காருகிறார். அவர் முகத்திலே பெருமிதம்.

'அவர்களுக்கு திருமணம் செய்து வைத்ததே நாம் தானே! ஆகவே நம்மிடம் முதலில் ஆசீர்வாதம் வாங்க வேண்டும் என்பதற்காகத்தான் இங்கே வருகிறார்கள் போலிருக்கிறது!' என்று விசுவாமித்திரர் நினைத்தார்.

ஆனால், அவரும் ஏமாந்து விட்டார். இராமரும் சீதையும் அவரையும் தாண்டிச் சென்றனர்.

சரி... அப்படியானால் யாரைத்தான் அவர்கள் முதலில் வணங்கப் போகிறார்கள்? தூரத்தில் ஒரு அம்மா நின்று கொண்டிருந்தார். அவரது காலில் இருவரும் விழுந்து வணங்கினர். யார் அந்த அம்மா? அதுதான் கைகேயி. இராமர் மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்த கைகேயி.

கம்பர் தம்முடைய இராமாயணத்தில் இராமன் கைகேயியை வணங்கியதை மட்டும்தான் குறிப்பிட்டுள்ளார்.. அதை மட்டும் வைத்துக் கொண்டு அங்கே என்ன நடந்திருக்கும் என்பதை இப்படி அழகாகப் படம் பிடித்துக் காட்டி இதற்கு ஓர் அர்த்தமும் கூறியிருக்கிறார்கள்.

அதாவது இராமனின் செய்கை, இராமன் கைகேயியைப் பார்த்து இப்படிச் சொல்வது போல் இருந்ததாம்.

"என் அவதாரத்தின் இரகசியம் உனக்குத் தெரியும்! சீதையினை இராவணன் தூக்கிக் கொண்டு போக வேண்டும். அதைக் காரணமாக வைத்து இராவணாவதம் நடைபெற வேண்டும். எனவே, நான் என் பங்கை செய்து முடித்து விட்டேன். இனிமேல் உன் பங்கை நீ செய்ய வேண்டும். எங்களைக் காட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதற்காகத்தான் உனக்கு முதல் வணக்கம்!'' என்று சொல்வது போல் இருந்ததாம்.

கம்பர் எழுதிய ஒரு விடயத்தைப் பெரியவர்கள் எவ்வளவு அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் பார்த்தீர்களா?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# எந்த இனத்தவராயினும் இலங்கையர் என்ற உணர்வுடன் செயற்பட வேண்டும்

## அமைச்சர் திஸ்ஸ கரலியத்த

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்த சர்வதேச நாடுகள் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸகரலியத்த தெரிவித்துள்ளார்.

எப்.ஆர். பிரெண்ட் பவுண்டேசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் உரை நிகழ்த்துகையில்,

அந்த அளவிற்கு இது ஒரு சிறப்பான விழாவாக அமைந்துள்ளது.இதனை ஏற்பாடு செய்த இந் நிறுவனத்தினருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இவர்களைப்போன்று ஏனையவர்களும் யாழ்.மாவட்ட மாணவர்கள் மீது அக்கறையுடன் செயற்பட்டால் அதுவே இம்மாணவர்களுக்குப் பயனுள்ளதாக அமையும். நீண்ட காலமாக இருந்த கசப்பான உணர்வுகளை நாம் மறந்து செயற்பட வேண்டும்.

எந்த மொழியைப் பேசினாலும் எந்த மதத்தைச் சார்ந்தவராயினும் நாம் இலங்கையர் என்ற ஒற்றுமையுடன் செயற்படவேண்டும்.

உலகம் முழுவதும் சிறுவர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றது. சில நாடுகள் சிறுவர்களுக்கெதிரான விடயங்களை ஊடகங்கள் வெளியிடுவதையும் தடுத்து வருகின்றனர்.

எமது நாட்டிலும் சிறுவர்கள் தொடர்பாக சில பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன.

இச்சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கு பெற்றோர்களது கடமையும் மிகவும் முக்கியமானது. தமது பிள்ளைகள் தொடர்பாக பெற்றோர்கள் அக்கறை செலுத்த வேண் டும்.

பெற்றோர்கள் இல்லாத குழந்தைகளை நாம் கவனிக்காமல் இருந்துவிட முடியாது. எதிர்காலத்தில் குழந்தைகள் தொடர்பாக சட்டங்கள் கொண்டு வரப்படும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிறுவர்களுக்கான அமைப்புக்களை உருவாக்கி உதவி வருகிறார். கடந்த 30 வருடங்களாக நாட்டில் இருந்த நிலைமை மீண்டும் ஏற்படாத வகையில் தடுக்க வேண்டும்.

இலங்கையின் பொருளாதாரத்தினை பாதிக்கும் வகையில் சர்வதேச நாடுகள் பல்வேறு வழிகளிலும் செயற்பட்டு வருகின்றன. அதனைத்தடுக்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றது. அண்மையில் நான் முல்லைத்தீவுக்கு விஜயம் செய்திருந்தேன். அங்கு 56 விதவை பெண்களுக்கு உதவிகளை வழங்கியதுடன் ஜனாதிபதியின் பிறந்ததினத்தை முன்னிட்டு பல சிறுவர்களுக்கு வங்கிக்கணக்குகளையும் ஆரம்பித்துகொடுத்துள்ளேன். எதிர்வரும் 10ஆம் திகதி முல்லைத்தீவிலும் இதுபோன்ற விழா ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளோம். அடுத்த ஆண்டு மகளிர் தின விழாவினை யாழ்.குடாநாட்டில் கொண்டாடுவதற்கும் தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, சிறுவர் அதிகாரசபைத் தலைவர் அனோமா திஸாநாயக்க, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கிளிநொச்சி மாவட்ட இராணுவத்தளபதி பிரிகேடியர் பொஸ்தா என பலர் கலந்து கொண்டனர்.

(அ-6)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 130 |
| உருளைக்கிழங்கு | 85 | 110 | 80 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 120 |
| தக்காளி | 80 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 40 | 30 |
| கோவா | 35 | 60 | 40 |
| கரட் | 100 | 120 | 60 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 40 | 60 | 30 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 90 | 60 | 90 |
| பெரிய வெங்காயம் | 85 | 70 | 80 |
| பாகற்காய் | -- | 180 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 60 | 30 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 60 |
| பயற்றங்காய் | 50 | 120 | 100 |
| லீக்ஸ் | 20 | 40 | 30 |
| பீற்றூட் | 15 | 30 | 20 |
| கறிமிளகாய் | 120 | 120 | 60 |
| முருங்கைக்காய் | 40 | 90 | 50 |
| போஞ்சி | -- | 140 | 100 |
| கத்தரிதம்புள்ள | -- | 100 | 90 |
| கீரை - 1 பிடி | 15 | 40 | 20 |
| தேசிக்காய் | 260 | 180 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 30 | 30 |

## இராசி பலன்

**09.11.2011**
**(ஐப்பசி 23, புதன்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு**
**சதுர்த்தசி பின்னிரவு 12.28 மணிவரை**
**அச்சுவினி பின்னிரவு 5.37 மணிவரை**
**இராகுகாலம் 12.05-1.35 மணிவரை**
**சுபநேரம் 4.35-6.05 மணிவரை**
**திருமூலர் குருபூசை.**

**மேடம்** நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்,திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றம் செய்யும் சூழ்நிலை அமையலாம், வேலைச் சுமை கூடும், சிந்தனை மிகுதியான நாள்.

**இடபம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு உட்பட நேரிடலாம், பயணங்களால் சற்று அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் கிடைக்கலாம்.

**மிதுனம்** இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் வெற்றியளிக்கும்.

**கடகம்** தூர தேசச் செய்திகளால் அனுகூலமுண்டு, நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் அதிகரிக்கும், கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**சிங்கம்** திடீர் பயணங்களால் அனுகூலமுண்டு, தந்தை வழி உறவினர்களால் ஏற்றம் காண்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்களில் உருவான மனஸ்தாபங்கள் விலகும், போசன சுகமுண்டு.

**கன்னி** கௌரவக்குறைவான நாள், பிரயாணங்களில் கவனம் தேவை, உத்தியோகத்தில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, போசன சுகமுண்டு, மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**துலாம்** எடுத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும், நண்பர்கள் மூலம் நன்மைகள் நடைபெறலாம், பொது நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்** ஆரோக்கியமான நாள், பக்கத்தில் இருப்பவர்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு நல்குவர், உடன்பிறப்புக்கள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்ட முன்வருவர், போசன சுகமுண்டு.

**தனுசு** வியாபார விருத்தியுண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், மைத்துனர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**மகரம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளை கூறலாம், பெற்றோர் நலனில் கூடிய அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்** பயணங்களால் நன்மையுண்டு, வேலையில் சிறுசிறு மன உலைச்சல்கள் ஏற்படலாம், உடன் பிறப்புக்களின் குணத்தை அறிந்து நடந்து கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்** தன வரவு திருப்தி தரும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்து மகிழ்வீர்கள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், வாக்கு மேன்மையுண்டு.

வளவன்

# நிரந்தர நியமனம் வழங்குவதில் தாமதம் ஏற்படின் போராட்டத்தில் குதிக்க நேரிடும்

## யாழ்.தொண்டர் ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

நிரந்தர நியமனம் வழங்க காலதாமதம் ஏற்படுமாயின் போராட்டங்களில் ஈடுபட வேண்டி ஏற்படும் என யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள உயர் கல்வி நிறுவன மண்டபத்தில் நேற்று காலை இடம்பெற்ற தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் யாழ். மாவட்டதிலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட போது 52 தொண்டர் ஆசிரியர்களுக்கு பணிபுரிந்த காலத்தைக் கருத்திற் கொண்டு நியமனங்கள் வழங்கப்படவில்லை.

எனினும் இந்த 52 தொண்டர் ஆசிரியர்கள் கடந்த 2007, 2009 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நேர்முகத் தேர்வுக்கு தோற்றியிருந்தனர். ஆனால் இந்த தொண்டர் ஆசிரியர்கள் கடந்த 2004 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை அரச பாடசாலைகளில் எதுவித வேதனமும் இன்றி பணிபுரிந்து வருகின்றனர்.

இதுதவிர தமக்கான நிரந்தர நியமனங்களைப் பெற்றுத்தர வேண்டும் என அமைச்சரிடமும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடமும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் மகஜர்களை கையளித்தனர். இருப்பினும் இதுவரை நிரந்த நியமனங்கள் வழங்கப்படவில்லை.

கல்வித் தகைமைகளை பெற்றிருந்தும் இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாததன் காரணத்தினால் போராட்டங்களில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளோம்.

யாழ். மாவட்டத்தில் ஐந்து வலயங்கள் உள்ள பாடசாலைகளில் இதுவரை காலமும் நாம் பணி புரிந்து வருகின்றோம். கடந்த காலங்களில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நாடளாவிய ரீதியில் நியமனங்கள் வழங்கப்பட்ட போதும் எமக்கான நியமனங்கள் வழங்கப்படாததனால் மிகுந்த மன வேதனைக்குள்ளாகியுள்ளோம் என யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-6-3)

## ஒளி விழா

(கரவெட்டி)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் ஒளிவிழா நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் தேவராணி நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ஜே.ஜே. மறின் அடிகளார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமராட்சி கல்வி வலய கிறிஸ்தவ ஆசிரிய ஆலோசகர் திருமதி கொறின் மன்மதநாயகம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-24)




# றோலர் படகு மூலமான மீன்பிடியை உடனடியாக இரத்து செய்யவேண்டும்

## பாதிக்கப்பட்ட மீனவர்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

குருநகர் மீனவர்களின் றோலர் தொழிலினால் தமது கடற்தொழில் வலைகள் அழிக்கப்பட்டுள்ளதாக ஏனைய மீனவர்கள், கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரனிடம் முறையிட்டனர்.

நேற்று காலை மீனவர்களினால் இந்த முறைப்பாடு அவருடைய அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது.

கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சரின் கட்டளைக்கு பின்பும் கடற்படையின் உதவியுடன் இப்பிரதேச மீனவர்கள் சிலர் றோலர் தொழிலில் ஈடுபடுவதை தடை செய்யமுடியாமல் உள்ளதாக பிரதிப் பணிப்பாளர் ரவீந்திரன் சுட்டிக்காட்டியதுடன் இதனை உடனடியாக தடை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.குருநகர் மீனவர் சங்கத்திற் குட்பட்ட சிலரால் கடற்தொழிலுக்கு தடை செய்யப்பட்ட தொழில் முறையான றோலர் தொழில் மேற்கொள்ளப்படுவதாக அச்சங்கத்திற்குட்பட்ட சிறு தொழிலாளர்கள் சுட்டிக்காடினர்.

மேலும் இந்த றோலர் தொழிலாளர்களால் தமது சிறுதொழில் அழிக்கப்படுவதாகவும் இத்தொழிலாளர்கள் றோலர் தொழிலில் ஈடுபடும் பொழுது தாம் தொழில் செய்ய முடியாமல் உள்ளதாகவும் சுட்டிக்காட்டினர்.

மேலும் தமக்கு ஏற்பட்ட அழிவுகளையும் வலைகளுக்கு ஏற்பட்ட சேதங்களையும் சுட்டிக்காட்டுவதற்காக கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்திற்கு சேதமடைந்த வலைகளையும் எடுத்து வந்திருந்தனர்.

கடற்தொழில் அமைச்சர் கடந்த 23 ஆம் திகதியில் இருந்து இத்தொழிலை யாழ். மாவட்டத்தில் பொலிஸ் படையணியினை உருவாக்கி தடைசெய்யுமாறு கட்டளையிட்ட பின்னர் அப்பகுதி மீனவர் சங்கப் பிரதிநிதிகள் புதிய றோலர் படகுகளைக் கொள்வனவு செய்தமையினையும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் சுட்டிக்காட்டி தமக்குரிய இழப்பீடுகளைத் தருமாறு கோரினர்.

இதற்குப் பதிலளித்த கடற்தொழில் நீரியல் வளப் பிரதிப் பணிப்பாளர் ரவீந்திரன் அமைச்சரின் கட்டளைக்கு அமைய நடவடிக்கை எடுத்தும் இதனைக் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் அப்பகுதிக் கடற்படையின் அனுமதியுடன் குறித்த மீனவர்கள் இத்தொழிலை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

குறித்த பகுதியைச் சேர்ந்த இந்த மீனவர்களின் சட்ட முரணான செயலில் பாதிக்கப்படும் ஏனைய மீனவர்களின் கோரிக்கை நியாயமானது என்றார்.

மேலும் இதற்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (அ-3-6)

## சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(சாவகச்சேரி)

நாவற்குழியில் கடந்த 2ம் திகதி 13 வயது பாடசாலை மாணவி பாடசாலையில் இருந்து வீட்டிற்கு வரும்போது தென்பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் சேஷ்டைபுரிந்த குற்றச்சாட்டில் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா குறித்த நபரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-3-29)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினால் இளம் பெண்கள் எதிர்கொள்ளும் மாதவிடாய் சம்பந்தமான பிரச்சினைகள் எனும் தலைப்பிலான கருத்துரையொன்று இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்லைக்கழக கலைப்பீட புவியியல்துறை விரிவுரை மண்டபத்தில் வைத்தியகலாநிதி ஜி.பவானியினால் (பெண்நோயியல் நிபுணர்) ஆற்றப்படவுள்ளது என யாழ். விஞ்ஞான சங்கத்தின் பிரிவு பி இன் அவைத் தலைவர் திருமதி க. சந்திரசேகர் கேட்டுக் கொள்கின்றார். (அ)

## வெள்ள வாய்க்கால் துப்புரவு பணி ஆரம்பம்

வடமராட்சி பிரதேசத்தில் உள்ள வெள்ள வாய்க்கால் கழிவுகளை அகற்றும் பணி நேற்று முன்தினம் தொடக்கம் துரிதமாக நடை பெற்று வருகின்றது.

வடமராட்சி பிரதேசத்தில் 750,751 வீதிகளும் மற்றும் ஏனைய வீதிகளிலும் வெள்ள வாய்க்கால் புனரமைக்கப்படாமையால் வெள்ளநீர் வீதிக்கு மேல் தேங்குகின்றதுடன் கழிவுப்பொருட்களும் ஆங்காங்கே காணப்பட்டன.

இதையடுத்து தற்பொழுது வீதிஅதிகார சபையினால் வெள்ளவாய்க்கால்களை புனரமைக்கும் பணி அல்வாய், இலகடிப் பகுதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வெள்ளவாய்க்காலை துப்புரவு செய்யும்படி அண்மையில் வலம்புரி பத்திரிகையில் சுட்டிக்காட்டி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-3-24)










எப்.அர் ரெண்ட் பவுண்டேசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தினம் நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறுவர்களின் கலை நிகழ்வுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பாடசாலை மட்டங்களில் நடத்தப்பட்ட சிறுவர்களுக்கான போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)





பிரபல சட்ட மேதை, வழக்கறிஞர் அமரர் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் 110 ஆவது பிறந் தினமான நேற்று குருநகரில் அமைந்துள்ள அவரது உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தப் பட்டது. இதில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி மலர் மாலை அணிவிப்பதையும்யாழ். மாந கர சபை உறுப்பினர் பரஞ்சோதி உரையாற்று வதையும் பிரமுகர்கள் அருகில் அமர்ந் திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

# தேசத்திற்கு மகுடம் தமிழ்மொழி பயிற்சி

தேசிய மொழிகள் மற்றும் பயிற்சி யளிப்பு நிறுவனத்தின் ஊடாக நடத் தப்படும் 10 நாட்களுக்கான தமிழ் மொழி பாடநெறிகள் நாளை முதல் அநுராதபுர அரச அதிகாரிகளுக் காக முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிகள் அடுத் தாண்டு ஜனவரி 31 ஆம் திகதிவரை முன்னெடுக்கப்படும் என தேசிய மொழிகள் மற்றும் பயிற்சியளிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் பிரசாத் ஹேரத் தெரிவித்துள்ளார்.

குறித்த தமிழ் மொழிப் பயிற்சி நட வடிக்கை தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் ஆலோ சனைக்கமைய நடத்தப்படவுள்ளது.

தேசத்திற்கு மகுடம் தேசிய அபி விருத்தி வேலைத்திட்டத்திற்கு அமை வாக இடம்பெறும் குறித்த பயிற்சி நெறிகளில் அனைத்து பிரதேச செயலாளர் காரியாலயங்கள் உள்ள டங்கும் விதத்தில் 10 பாடநெறிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, கொழும்பு லேடி ரிச்வே சிறுவர் மருத்துவமனை தாதியர் களுக்கும் 10 நாட்களுக்கான தமிழ் மொழிப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 12 ஆம் திகதி வரை இடம்பெறும் குறித்த பயிற்சி நெறி களில் 200 இற்கும் அதிகமான தாதியர்கள் உள்வாங்கப்பட்டுள்ள னர். (அ-2)

# மாநகரசபைகளில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடில்லை

## மேயர் முஸம்மில் தெரிவிப்பு

மாநகர சபைகளை பொறுத்த வகையில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடில்லையென கொழு ம்பு மேயர் ஏ.ஜே.எம். முஸம்மில் மாநகரசபையின் நேற்று நடை பெற்ற முதலாவது கூட்டத்தில் கூறி யதைத் தொடர்ந்து இரு பகுதி அங் கத்தவர்களுக்குமிடையில் ஒரு சுமுக நிலை காணப்பட்டது.

நாங்கள் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். எனவே நாம் அவர்களின் நலனுக்காக ஒற்றுமையாக உழைக்க வேண்டும் என முஸம்மில் கூறினார்.

கொழும்பு நகரை அழகுபடுத் தும் விடயத்தில் மத்திய அரசாங்கத் துடன் இணைந்து செயற்பட தயாரா கவுள்ளதாகவும் கடந்த சில நாட் களில் நடந்த விடயங்களையிட்டு கவலை தெரிவித்த அவர் அவற்றை மறந்து யாவரும் ஒற்றுமையாக இயங்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் மிலிந்த மொறகொட மேயரின் நல்ல செயற் பாடுகளுக்கு அரசாங்கத்தில் ஆத ரவு கிடைக்குமென்று தனதுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணி யின் அங்கத்தவரான மனோ கணே சன் பேசும் போது, மாநகரசபையை ஆள்வதற்கான பணியாணையை மக்கள் முஸம்மிலுக்கு வழங்கியுள் ளமையால் அவரே கொழும்பு மாநக ரசபையை ஆளவேண்டும். மாநகர சபையில் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளுக்கு சம அந்தஸ்து வழங் கப்பட வேண்டுமென அவர் குறிப் பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினரான சுனில் வட்டகல பேசுகையில்,

கொழும்பில் வெள்ளம் ஏற்படு வதை தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென வும் முச்சக்கரவண்டி உரிமையாளர் களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப் பட வேண்டுமெனவும் கூறினார். ஊழலுக்கு எதிராகப் போராடும் தனது கட்சியின் கொள்கையை தான் முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# தரம் குறைந்த பெற்றோலை விற்பனை செய்ய முயற்சிக்காதீர்

## ஐ.தே.க.கோரிக்கை

(கொழும்பு)

கொள்வனவு செய்யப்பட்ட தரம் குறைந்த பெற்றோலின் எஞ்சிய தொகையான 2 ஆயிரத்து 600 மெற்றிக் தொன்னை விற்பனை செய்வதற்கான கேள்வி கோரல் கோரப்பட்டுள்ளது.

இதனை உடனடியாக அரசாங் கம் இரத்து செய்ய வேண்டும் என ஐ.தே. கட்சியின் ஊடகப் பேச்சாள ரும் எம்.பி.யுமான கயந்த கரு ணாதிலக தெரிவித்தார். இதனால் ஏற்கனவே பாதிப்படைந்த அனை வருக்கும் நட்டஈடு வழங்க வேண்டு மென்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் உரையாற் றும் போதே ஐ.தே.கட்சி ஜயந்த கரு ணாதிலக இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில், கடந்த காலத்தில் பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்டு விநியோ கிக்கப்பட்ட பெற்றோலை பாவித்த வர்கள் பாதிக்கப்பட்டனர்.

அத்தோடு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பாவிக்கப்பட்ட பம் பிகளும் பழுதடைந்தன. இது தொடர் பில் ஏற்கனவே நாம் மக்களுக்கு உண்மையை வெளியிட்டோம்.

இதனால் விற்பனை நிறுத்தப் பட்டு 2ஆயிரத்து 600 தொன் பெற் றோல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் எஞ்சியது. இத னைக் கொள்வனவு செய்த நிறுவ னத்திற்கே திருப்பியனுப்பி நட்ட ஈட்டை பெறுவோம் என அமைச்சர் சுசில்பிரேமஜயந்த அறிவித்ததோடு பாதிக்கப்பட்டவர்களுக்கு விநி யோகத்திற்கு அனுமதி வழங்கியவ ர்களிடமிருந்து பணம் அறவிட்டு நட்டஈடு வழங்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆனால், எஞ்சிய தரம் குறை ந்த பெற்றோலை விற்பனை செய் வதற்காக கேள்விகோரல் விளம் பரங்கள் பத்திரிகைகளில் பிரசுரிக் கப்பட்டுள்ளன.

அத்தோடு இவ்விளம்பரத்தில் விற்பனை செய்யப்பட்ட பின்னர் அதற்கான பொறுப்பை பெற்றோ லியக்கூட்டுத்தாபனம் ஏற்கமாட்டா தென்றும் இவ் விளம்பரத்தில் தெரி விக்கப்பட்டுள்ளது.

இது மீண்டும் நாட்டு மக்களை நெருக்கடிக்குள் தள்ளுவதாக அமை யும். எனவே, அரசாங்கம் இக் கேள்வி கோரலை இரத்துச்செய்ய வேண்டும். ஏற்கனவே பாதிக்கப்பட்ட 3 ஆயிரம் பேரில் 125 பேருக்கு மட்டுமே நட்ட ஈடு வழங்கப்பட்டுள் ளது. அதுவும்குறிப் பிட்ட சிலரே தெரிவு செய்யப்பட்டுள்ள னர். அவர்களுக்கு ரூபா 10 ஆயிரம் வீதமே வழங்கப் பட்டுள்ளது.

எனவே தரம் குறைந்த பெற் றோலை நாட்டுக் குள் விற்பனை செய்து மக்களை நெருக்கடிக்குள் தள்ளிவிட வேண் டாமென அரசாங் கத்தை வலியுறுத் துகின்றோம் என் றும் அவர் தெரி வித்தார். (அ-2)

# மேல் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் தொடர்பாக விசாரணை

(கொழும்பு)

மேல் மாகாண நன்னடத்தை மற்றும்சிறுவர் பாதுகாப்பு திணைக் களம் தொடர்பாக கிடைக்கப் பெற் றுள்ள முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்துவதற்கு சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவ கார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக மேல் மாகாண சுகாதார மற்றும் நன்னடத்தை அமை ச்சர் ஜகத் அங்கவேவுடன் கலந்து ரையாடவுள்ளதாக அமைச்சர் திஸ்ஸ கரலியத்த குறிப்பிட்டார்.

மேல் மாகாண நன்னடத்தை ஆணையாளர் அலுவலகம் தொடர் பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக நன்னடத்தை மற் றும் சிறுவர் பாதுகாப்பு திணைக் களம் குறிப்பிட்டுள்ளது.

சிறுவர் இல்லங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை கள் மற்றும் சிறுவர் இல்லங்களு க்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் தொட ர்பாகவே இந்த முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது. (அ-2)


**We are expanding & invites applications from suitably qualified for the position of "Sales Executives"**

**Suitable candidate should poses;**

- Good communication skills in English as well as Tamil
-Working experience on machinery
-Physics knowledge- G.C.E A/L
-Riding or Driving license

*An attractive remuneration package for the ideal candidate & forward your CV within 7days to*

**CMC Engineering Export GmbH**
**No.346, Nawala Road, Rajagiriya.**
**Tel:-011 2806776-9, Fax:-011 2806780**
**E.mail:-colombo@cmc.slt.lk**

(6757)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



07.11.2011 அன்று கொழும்பு BMICH இல் உயர் தேசிய ஆங் கில டிப்ளோமா (HNDE) பட்டம் பெற்ற

**திருமதி கமலாதேவி புவனேந்திரன்**

அவர்கள் மேலும் பல பட் டங்கள் பெற்று வாழ்வில் இன்பமுடன் வாழ எமது வாழ்த்துக்கள்.

(அ/4927)

வாழ்த்துவோர்:-
நடராஜா விஜயலட்சுமி குடும்பத்தினர், வீரபத்திரர் கோவிலடி, சாரையடி, புலோலி தெற்கு, புலோலி.

# பிரதி எதிர்க்கட்சி தலைவர் ஒருவரை நியமித்தது சட்டத்தை மீறும் செயல்

(கொழும்பு)

பிரதி எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரை செயற்குழு நியமித்துள்ள நிலையில் எதிர்க் கட்சித் தலைவரின் அதிகாரங்கள் வேறு ஒருவரிடம் கையளிக்கப்பட்டுள்ளமை கட்சி யின் யாப்பை மீறும் செயலாகும் என தென் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி மைத் திரி குணரத்தின சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் தீர்மானத்திற்கு அமைய பிரதி எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச நியமிக்கப் பட்டார்.

இவ்வாறு பிரதித் தலைவர் ஒருவர் நிய மிக்கப்பட்டுள்ள நிலையில் பதில் எதிர்க்கட்சித் தலைவராக வேறொருவர் நியமிக்கப்பட்டதன் மூலம் கட்சியின் தலைமைத்துவம் கட்சியின் கட்சியின் யாப்பை மீறியுள்ளதாக தென் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி சுட்டிக் காட்டினார். (அ-2)

# இலாபத்தில் இயங்கும் தனியார் நிறுவனங்களை கையகப்படுத்தக்கூடாது

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

60 இற்கும் மேற்பட்ட அரச மற்றும் அரச துறையின் பங்கைக்கொண்ட நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கும் போது இலாபத்தில் இயங்கும் தனியார் வர்த்தகர்களை கையேற் பது ஜனநாயக விரோத செயல் என்று ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் ஊடகப்பேச்சாளர் கயந்த கருணாதிலக இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இலங்கையில் 60 இற்கும் மேற்பட்டஅரச மற்றும் அரசதுறையின் பங்கைக்கொண்ட நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கிவருகின்றன.

இந்த நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன என்பதை விட நட்டமாக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கமுடியும்.

குறிப்பாக மக்களின் வாழ்க்கையை பாதிக்கக்கூடிய பெற்றோலிய கூட்டுத்தாபனம், துறைமுகம், மின்சாரசபை என்பவற்றை கூற முடியும்.

இந்தநிலையில் அரசாங்கம் தமது அரசி யல் நலன் மற்றும் அரசியல் பழிவாங்கலை முன்னிலைப்படுத்தி இந்த மக்கள் விரோத செயலை மேற்கொள்வதாகவே கருதமுடியும்.

எனவே இந்தச்சட்டமூலத்தை தமது கட்சி எதிர்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.(அ-2)

# பட்டங்களை வழங்குவதற்கான அனுமதி கோருகின்றன உயர்கல்வி நிறுவனங்கள்

## உயர்கல்வி அமைச்சு தெரிவிப்பு

பட்டங்களை வழங்குவதற்கான அனு மதி கோரி தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உயர்கல்வி நிறுவனங்கள் பல விண்ணப் பங்களை சமர்ப்பித்துள்ளதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனங்களின் தரத்தை ஆராய் ந்து பட்டங்களை வழங்குவதற்கான அனும தியை பெற்றுக்கொடுப்பதாக அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயவர்த்தன தெரி வித்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் பரிந்துரைகளை செயற்படுத்தும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு மாத்திரமே பட்டங்களை வழங்குவதற்கான அனுமதி கிடைக்கும் என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உயர் கல்வி நிறுவனங்களின் விண்ணப்பங்கள் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஒன்பது உயர்கல்வி நிறு வனங்களுக்கு பட்டம் வழங்குவதற்கான அனு மதியை அரசாங்கம் வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வாக்காளர் இடாப்பு மீளாய்வு

யாழ்.மாவட்ட செயலத்தினால் வாக்காளர் இடாப்பு மீளாய்வு செய்யப்பட்டதற்கமைவாக யாழ். மாவட்ட தேர்தல் அலுவலகத்தினால் 41 ஆயிரத்து 715 வாக்காளர்களை பதிவு நீக்குவதற் கும் 16 ஆயிரத்து 999 வாக்காளர்களைச் சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. மேலும் கோரிக்கையை முன்வைப்ப தற்குரிய காலம் கடந்த 21 ஆம் திகதியில் இருந்து எதிர்வரும் 30 ஆம் திகதி புதன் கிழமை வரை வழங்கப்பட்டுள்ளது.

இதற்குரிய படிவங்கள், புத்தகங்கள் காட் சிப்படுத்துவதற்காக அந்தந்தப் பிரதேச செயலர்களுக்கும் கிராம அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யத் தவறியவர்கள் தங்கள் பகுதி கிராம அலுவலர் ஊடாக குறித்த காலப்பகுதிக்குள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவ ட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார். (அ-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

அனுமதிப் பத்திரம் இன்றி அரச சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நான்கு பேர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 4 மாத சாதாரண சிறைத் தண்டனையும் இருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபரா்தமும் செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனையும் மற்றைய ஒருவருக்கு ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத் தத் தவறின் ஒருமாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

யாழ்.நகர்ப்பகுதியில் குப்பை கொட்டிய குற்றச்சாட்டின் பேரில் 8 நபர்கள் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 8 பேருக்குத் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் தலா ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

மது அருந்திவிட்டு பொது மக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் இரு நபர்கள் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் இருவருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் தலா ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-3)

* * * * * *

இடுப்புப்பட்டி அணியாது மோட்டார் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

மது போதையிலும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியும் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 6 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

மது போதையில் மோட்டார் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கியதுடன் சாரதி அனுமதிப் பத்திரத்தை 6 மாதத்திற்கு மன்றில் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டார்.

* * * * * *

மது போதையில் மோட்டார் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.


வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்ததுடன் சாரதி அனுமதிப் பத்திரத்தை 2 மாதத்திற்கு மன்றில் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டார்.

* * * * * *

காப்புறுதிப் பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவை இன்றியும் மது போதையிலும் மோட்டார் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 13 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 3 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-3-29)





யாழ். இந்து மகளிர் கல்லூரியில் மரபு வழி ஆற்றுகைக் கழக ஆரம்ப விழாவும் இந்து நங்கை வெளியீட்டு விழாவும் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் முதற்பிரதியை கஜமுகன் ஹாட்வெயர் உரிமையாளர் இ.எஸ்.பி. நாகரட்ணம் பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

# பொதுநலவாய மாநாட்டில் இலங்கையின் போர்க்குற்றம் புறந்தள்ளப்பட்டுள்ளது

அவுஸ்திரேலியாவில் அண்மையில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் அரசியல் தலைவர்களின் மாநாட்டில் இலங்கைத் தீவில் இடம்பெற்ற போரின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பான கேள்விகள் புறந்தள்ளப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் மல்கொலிம் பிரஸெர் Malcolm Fraser குற்றம் சுமத்தியுள்ளார்.

பொதுநலவாய நாடுகளின்


மைக்கேல் கிர்பை

இழக்கப்பட்ட வாய்ப்பு எனும் தலைப்பில் அவுஸ்திரேலியாவின் ஸ்ரைற்ஸ் ரைம்ஸ் (Straits Times) இதழின் அனைத்துலகப் பார்வைப் பகுதியில் அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் (Malcolm Fraser) எழுதிய கட்டுரையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் போர்க்குற்ற விவகாரம் தொடர்பாக பொதுநலவாய நாடுகள் விவாதிக்கப் பின்னிற்பதானது அதற்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் பொதுநலவாய நாடுகளை கட்டுக்கோப்புடனும் தீர்மான சக்தியுடனும் ஒருங்கிணைக்கும் விவகாரமாக இருத்தல் வேண்டும். மனித உரிமை மீறல்கள் உலகில் எங்கேனும் எப்போதேனும் நடைபெற்றால் அதற்குரிய பொறுப்புக் கூறலை வலியுறுத்தும் போராட்டத்தில் முதல் இடத்தில் பொதுநலவாயநாடுகள் செயற்பட்டிருக்க வேண்டும். அதற்கான வாய்ப்பு தற்போது இழக்கப்பட்டுவிட்டது.

தென்னாபிரிக்காவில் நிறவெறி அடக்குமுறைக் காலத்தில் அதற்கு எதிரான காத்திரமான நடவடிக்கைகளை பொதுநலவாய நாடுகள் எடுத்துள்ளன. பெரும்பாலான உறுப்பு நாடுகள் அனைத்துலக குற்றவியல் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உடன்பட்டு கையெழுத்திட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் உருவாக்கத்திற்குப் பின்னர் அனைத்துலக நீதி நடவடிக்கைக் கட்டமைப்பில் தோன்றிய நிறுவனம் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றமாகும்.

அண்மையில் 54 நாடுகளின் பிரதிநிதிகள் குறிப்பாக அரசாங்கங்களின் தலைவர்கள் பங்கேற்ற பொதுநலவாய நாடுகளின் இந்த ஆண்டுக்கான மாநாடு நடைபெற்றது. பொதுநலவாயநாடுகளின் கூட்டமைப்பினை வலுப்படுத்துதல், அதன் செயலகத்தை வலுப்படுத்துதல் மற்றும் மனித உரிமை விவகாரங்களில் அணுகுமுறை மாற்றத்தினை ஏற்படுத்துவது தொடர்பான தலைசிறந்த நிபுணர்கள் குழு அறிக்கை மீது கவனம் குவிக்கப்பட்டிருந்தது.


முன்னாள் அவுஸ்திரேலிய உச்ச நீதிமன்ற நீதியாளர் மைக்கேல் கிர்பை (Michael Kirby) முன்னாள் பிரித்தானிய வெளிவிவகாரச் செயலாளர் மல்கொலிம் றிவ்கின்ட் (Malcolm Rifkind), முன்னாள் மலேசிய பிரதமர் அப்துல்லா அஹமட் படாவ (Tun Abdullah Ahmad Badawi), மொசாம்பிக்கின் முன்னாள் முதற் பெண்ணும் நெல்சன் மண்டேலா அவர்களின் துணைவியுமான கிரக மகேல் (Graca Machel) ஆகியோர் உட்பட்ட பலர் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

ஆனால், மனித உரிமை ஆணையாளர் நியமனம் மூலம் உறுப்பு நாடுகளின் மனித உரிமை சார்ந்த விவகாரங்களைக் கண்காணிப்பது மற்றும் அறிக்கையிடுவது தொடர்பாக தலைசிறந்த நிபுணர்கள் குழு அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ள அடிப்படைப் பரிந்துரைகளை பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் புறந்தள்ளியுள்ளனர். மனித உரிமைகள் தொடர்பான நடைமுறைகளில் வளர்ச்சியடைந்த மற்றும் வளர்முக நாடுகளில் பின்பற்றப்படும் நடைமுறைகளில் பல்வேறு வழிகளிலும் முன்னேற்றங்கள் அவசியம்.

துரதிர்ஷ்டவசமாக சில ஆபிரிக்க அரசாங்கங்கள், அவ்வறிக்கை வளர்முக நாடுகளைச் சுட்டுவதாகக் கருதுகின்றன. ஆனால், குறிப்பாக செப்டெம்பர் 11 பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பின் மனித உரிமைப் பாதுகாப்பு பெரிதும் மீறப்பட்டுள்ள புறநிலையில் அறிக்கையின் பரிந்துரைகள் பல வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் பொருந்தும்.

சிறுபான்மை இனங்கள் தொடர்பான பொதுநலவாய உறுப்பு நாடுகளின் அணுகுமுறையிலும் முன்னேற்றங்கள் அவசியம். இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான நிலைமைகளும் பல நாடுகளில் மோசமாகவுள்ளன. தமது சொந்த நாடுகளில் பாரியளவிலான இடம்பெயர்ந்தோர் முகாம்களைக் கொண்டிருக்கின்றன. இப்பிரச்சினைகள் மீது அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நடைமுறைகள் தரமுயர்த்தப்பட வேண்டும். வெளிப்படைத் தன்மை மற்றும் குறிப்பிட்ட சில நாடுகளில் அறிவு விவாதத்தின் தரத்தினை உயர்த்தும் வகையில் முன்னேற்றங்கள் அவசியம். அதிகமான நாடுகளில் இனவாதம் மீண்டும் தலைதூக்கும் நிலை தோன்றியுள்ளது..


மல் கொலிம் பிரஸெர்

பொதுநலவாய நாடுகளின் கூட்டத்திற்கான இரண்டாவது பெரிய விவகாரமாக இலங்கைத் தீவின் உள்நாட்டுப் போரின் இறுதியில் இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட போர் மீறல்கள் அமைந்திருந்தன. ஆனால் அந்தக் கேள்வியும் நடைமுறையில் கிட்டத்தட்டப் புறந்தள்ளப்பட்டது.

பாரிய போர்க்குற்றங்கள் நிகழ்ந்திருப்பதாக குறிப்பாக முரண்

**மனித உரிமைகள், பொதுநலவாய நாடுகளை கட்டுக்கோப்புடனும் தீர்மான சக்தியுடனும் ஒருங்கிணைக்கும் விவகாரமாக இருத்தல் வேண்டும். மனித உரிமை மீறல்கள் உலகில் எங்கேனும் எப்போதேனும் நடைபெற்றால் அதற்குரிய பொறுப்புக் கூறலை வலியுறுத்தும் போராட்டத்தில் முதல் இடத்தில் பொதுநலவாய நாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். அதற்கான வாய்ப்பு தற்போது இழக்கப்பட்டு விட்டது.**

பாட்டின் இறுதி 2 தொடக்கம் 3 ஆண்டுகளில் பாரிய மீறல்கள் நடைபெற்றிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேறொரு தனியான, சுதந்திரமான அறிக்கையில் அனைத்துலக முரண்பாட்டுக் குழுவும் இம்முடிவிற்கே வந்திருந்தது.

உண்மையில் இருதரப்பு மீறல்கள் மீதான அனைத்துலக் விசாரணைகளை முன்னெடுக்கக்கூடிய போதிய


ஸ்ரீபன் ஹாபர்

ஆதாரங்கள் உள்ளன. அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஆனால், இந்த விவகாரம் பொதுநலவாய நாடுகளின் கூட் டமைப்பினால் அல்லாது இருதரப்பினாலும் தனிப்பட்ட முறையில் கையாளப்பட வேண்டும் என பொதுநலவாய நாடுகள் பரிந்துரைத்துள்ளன.

இலங்கையின் போர்க்குற்ற விவகாரம் தொடர்பாக பொதுநலவாய நாடுகள் விவாதிக்கப் பின்னிற்பதானது அதற்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். பல வாரங்களுக்கு முன்னர், கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹாபர் (Stephen Harper) இலங்கை அரசாங்கத்தின் செயல் குறைபாடுகளைக் கடுமையாகச் சாடினார். பொதுநலவாய நாடுகளின் அடுத்த கூட்டம் அங்கு நடைபெறுமாயின் அதில் தான் பங்கேற்கப் போவதில்லை எனக் கடுமையான தொனியில் எச்சரித்திருந்தார்.

அடுத்த கூட்டத்திற்கான நேரம் வரும் போது இந்த முடிவை எடுக்கும் ஒரே தலைவராக கனேடியப் பிரதமர் மட்டும் இருக்கப் போவதில்லை.

தென்னாபிரிக்காவில் நிறவெறி அடக்கு முறைக் காலத்தில் அதற்கெதிரான காத்திரமான நடவடிக்கைகளை பொதுநலவாய நாடுகள் எடுத்துள்ளன.

பெரும்பாலான உறுப்பு நாடுகள் அனைத்துலக குற்றவியல் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உடன்பட்டு கையெழுத்திட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் உருவாக்கத்திற்குப் பின்னர் அனைத்துலக நீதி நட்வடிக்கைக் கட்டமைப்பில் தோன்றிய நிறுவனம் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றமாகும்.

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற கூட்டத்தில் தலைவர்கள் வழங்கிய பங்களிப்பிற்கு மேலான நலன்களைப் பெறுவதற்கு உறுப்பு நாடுகளின் மக்கள் உரித்துடையவர்கள். அனைத்துலக ரீதியில் முக்கிய கட்டமைப்பாக பொதுநலவாய நாடுகளின் கூட்டமைப்பு உருவாக வேண்டுமென்ற அதன் தலைவர்களின் விருப்பு நிறைவேற வேண்டுமாயின் மாறுபட்ட பக்குவம் கொண்ட அதிக கூட்டிசைவான செயற்றிறன் கொண்ட தலைமைத்துவம் அவசியம்.

தலை சிறந்த நிபுணர்கள் குழு பரிந்துரைத்தது போன்ற மனித உரிமைகள் ஆணையாளர் அவசியமாகும்.

ஆனால் அனைத்திற்கும் மேலாக முரண்பாட்டுச் சிக்கல்கள் எழும் போது ஒதுங்கிக் கொள்ளாத உண்மையில் அடிப்படையில் நோக்கங்கள் அமைவதற்கு உறுதியுடன் செயற்படக்கூடிய தலைவர்கள் அவசியம். (பொங்குதமிழ்)

# மீள்குடியேற்ற செயற்பாட்டில் தமிழ் கட்சிகள் பூரணமாக ஒத்துழைக்கவில்லை

## விமர்சனங்களையே முன்வைத்தனர் என்கின்றார் அமைச்சர் வீரக்கோன்



வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள் குடியேற்றம் உள்ளிட்ட முக்கிய செயற்பாடுகளுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க்கட்சிகள் நாங்கள் எதிர்பார்க்கும் ஒத்துழைப்பை வழங்குவதில்லை.

அவர்கள் எப்பொழுதும் விமர்சனங்களையே முன்வைத்து வருகின்றனர். அதனை விடுத்து அரசாங்கத்திடம் யோசனைகளை யாவது முன்வைக்கலாம் என்று மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டும். அவ்வாறு ஆதரவு வழங்குவது அவர்களின் கடமையாகும். அது எவ்வாறெனினும் அரசாங்கம் தனது கடமையை முடியுமானவரை சிறப்பாக முன்னெடுக்கும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

வடக்கின் மீள் குடியேற்ற நிலைமைகள் எவ்வாறு உள்ளன என்பது தொடர்பிலும் மீள்குடியேற்றப்படவுள்ள மக்கள் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனரா? என்பது குறித்தும் விபரிக்கையிலேயே அமைச்சர் குணரட்ன வீரக்கோன் மேற்கண்ட விடயங்களை கூறினார்.

அமைச்சர் இந்த விடயங்கள் குறித்து மேலும் கூறியதாவது,

வடக்கில் மீள்குடியேற்றப்பட்டுள்ள பகுதிகளில் மழை காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டும் இடம் பெயர்ந்தும் சிரமங்களை எதிர்கொள்வதாக கூறுவதை ஏற்க முடியாது.

வழமையான மழை வீழ்ச்சியே வடக்கில் பதிவாகியுள்ளது. மாறாக வெள்ள நிலைமை எங்கும் ஏற்படவில்லை. இந்நிலையில் மக்கள் பாரியளவில் பாதிப்படையவில்லை என்பதனை குறிப்பிட வேண்டும். ஒரு வேளை வெள்ளம் ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்பட்டால் தேவையான ஏற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கும்.

இதேவேளை வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள்குடியேற்றம் உள்ளிட்ட முக்கிய செயற்பாடுகளுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகள் நாங்கள் எதிர்பார்க்கும் ஒத்துழைப்பை வழங்குவதில்லை என்பதனை இந்த இடத்தில் குறிப்பிட வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. இந்நிலையில் தமது மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படும் போது அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கடமையாகும்.

ஆனால், கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் கட்சிகள் அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சித்துக் கொண்டே இருக்கின்றன. அவரவர் தமது கடமையை செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் போது தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதனை மக்கள் தீர்மானிப்பார்கள்.

இது தொடர்பில் அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஒத்திவைப்புவேளை விவாதத்தின் போது நான் விடயங்களை முன்வைத்தேன். எமது செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கூட்டமைப்பினரிடம் கோரிக்கை விடுத்தேன்.

எது எவ்வாறெனினும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கும். வடக்கில் மீள்குடியேற்ற செயற்பாடுகளை முன்னெடுக்கவும் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு உதவிகளை வழங்கவும் தேவையான நகர்வுகளை முன்னெடுக்கும் எனத் தெரிவித்தார். (அ-2)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

விரிவுரையாளர்(வலிகாம வலய முன்னாள் ஆங்கில பாட ஆசிய ஆலோசகரும்) விஸ்வ மகாதேவன் எழுதிய **கல்வி முகாமைத்துவம்–சுதந்திர இலங்கையின் கல்வி நிர்வாக மாற்றம் (இரு மொழிகளில்)** எனும் நூலின் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யா/ பண்ணாகம்மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நூலிற்கான அறிமுக உரையினை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிக்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் நிகழ்த்த, நூல் வெளியீட்டினையும் நூல் ஆய்வினையும் பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் விரிவுரையாளரும் இந்து கலாசாரதுறை அமைச்சின் செயலாளருமான சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் ஆற்றுவார். (அ-2-17)

## அடிக்கல்நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கட்டைப்பிராய் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்தில் பஞ்சதல இராஜ கோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் விழா நாளை வியாழக்கிழமை 8.20 மணிக்கு நடைபெறவுள்ளது.

பக்தர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ-3-136)

# இளைஞர்கள் சமூகத்திற்கு பாரமாக இருக்காது தொழிலில் ஈடுபடவேண்டும்

## உயர்கல்வி அமைச்சர் அறிவுரை

(கொழும்பு)

அரச தொழில் உலகில் நிலையானது அல்லவென உயர்கல்வியமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

உலகில் எந்தவொரு வளர்ச்சியடைந்த நாட்டிலும் அரச சேவையாளர்கள் ஒரு சத வீதத்தினரே இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர், யுவதிகள் சிரமம் பாராது செய்தித்தாள்களில் வெளியாகும் தொழில் வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்து அதன் குறை நிறைகளை பாராது தொழில்களில் ஈடுபடுமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கிடைக்கும் தொழிலில் கூடிய அனுகூலங்களை எதிர்பார்க்காது ஆரம்பத்தில் கடின உழைப்புக்களை வெளிக்காட்டுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார். வீட்டிற்கும் சமூகத்திற்கும் பாரமாக இளைஞர்கள் இருப்பதை விடுத்து தொழில்வாய்ப்புகளில் ஈடுபடுகின்றமை நன்மை பயக்கும் என உயர்கல்வியமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை சர்வதேச ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளில் அரச தொழிலில் ஈடுபடுபவர்கள் ஒரு சதமானவர்களே தொழில் புரிகின்றனர்.

எனினும் இலங்கையில் அந்த தொகை 14 சத வீதமாக இருப்பதாக அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று இலங்கையில் இருந்து யப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு செல்வதாக கூறும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உள்ளிட்டோர் அங்கு தனியார் துறை தொழில்களிலேயே ஈடுபடுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ-2)

# சரத் என் சில்வா தனது நியாயத்தை நிரூபிக்க முன்வரவேண்டும்

(கொழும்பு)


முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தாம் நிரபராதி என்று நிரூபிக்க வேண்டுமானால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முன்னாள் சாட்சியமளிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. சரத் என் சில்வாவினால் பழிவாங்கப்பட்டதாக கூறப்படும் முன்னாள் நீதிபதிகள் சிலர் இந்தச் சவாலை முன்வைத்துள்ளனர்.

முன்னாள் நீதிபதியான சி.டி. குணதிலக என்பவர் இது தொடர்பில் கொழும்பில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தகவல் வெளியிட்டுள்ளார்.

கடந்த 1999 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை சரத் என் சில்வாவினால் சுமார் 40 நீதிபதிகள் பழிவாங்கப்பட்டனர்.

இதனால் பலர் வெளிநாடுகளுக்கு சென்று விட்டனர். சிலர் மன நோய்களுக்கு ஆளாகினர்.

இந்த நிலையில் முன்னாள் நீதிபதிகளுக்கு எதிராக நாடாளுமன்ற தெரிவுக் குழுவை அமைக்க முடியாது என்ற வாதத்தை விடுத்து தமது நியாயத்தை நிரூபிக்க சரத் என் சில்வா முன்வர வேண்டும் என்று முன்னாள் நீதிபதிகள் கோரியுள்ளனர். (அ-2)



கிளிநொச்சி ஜனாதிபதி செயலகத்தால் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு அண்மையில் அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் ஜனாதிபதி செயலகத்திலிருந்து வருகை தந்திருந்த அதிகாரி ஒருவர் மாணவிக்கு கொப்பிகள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம்:– மல்லாவி செய்தியாளர்)

# திருமலை நோக்கி கடல்வழி விமான சேவை ஆரம்பம்

(கொழும்பு)

உல்லாச பிரயாணிகளின் வருகையை அதிகரிக்கும் முகமாக ஸ்ரீலங்கன் விமான சேவையானது கடல் வழி விமான சேவையை ஆரம்பிக்கவுள்ளது. இதன் பரீட்சார்த்த சேவையானது நேற்று முன்தினம் காலை கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வெலகம்பே ஹோட்டல் நிறுவனத்தின் ஏற்பாட்டின் பெயரில் இந்த பரீட்சார்த்த சேவை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து காலை 10.30 இற்கு புறப்பட்ட விமானம் காலை 11.16 மணிக்கு திருகோண[illegible] உட்துறைமுகக் கடற்பரப்பில் தரையிறங்கியது.

திருகோணமலைக்கும் நாட்டின் ஏனைய பிரதான நகரங்களுக்கும் உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் பயண நேரத்தை மட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த கடல் விமான சேவை ஆரம்பிக்கப் படுவதாக விமான சேவை நிறுவனத்தின் விமான வாடகை சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் திட்டப்பணிப்பாளர் சஞ்சீவ ஜெயதிலக தெரிவித்தார்.

இந்த விமான சேவையின் ஊடாக ஒரு தடவையில் 15 பயணிகள் பயணிக்க முடியும் என்றும் பயணத்திற்கான ஒரு வழிக் கட்டணம் 15 ஆயிரம் ரூபாவாக இருக்குமென்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

# குருவின் பார்வையில்



ஆன்மீகம் 28

## சுதந்திரம்

சுதந்திரம் என்றால், அரசியல் சுதந்திரம், பொருளாதார சுதந்திரம், உடல் நிலையில் சுதந்திரம் எனப் பலவிதமாக எண்ணுகிறோம். ஆனால், இவற்றின் மூலம் மனிதனின் அனுபவத்தில் எந்த விதமான சுதந்திரமும் ஏற்படாது. இதுபோன்ற சுதந்திரத்திற்கான கட்டுப்பாடுகள் நமக்குள் இருக்கும் போது நாம் அவற்றையே முக்கியமாக நினைத்துச் செயற்படுவோம். அது கிடைத்துவிட்டால் இன்னொரு கட்டுப்பாடு வரும். அந்தக் கட்டுப்பாடும் கூட நமக்குப் பாதிப்பாகவே இருக்கும்.

நாம் ஒரு சிறிய அறையில் இருக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம், அந்த அறையிலிருந்து வெளிவர முடியாத நிலையிலிருக்கிறோம் என்றால் அதை கட்டுப்பாடாக நினைக்கிறோம். கட்டுப்பாடாக நினைப்பதால், அதை உடைத்துக் கொண்டு வெளியே வரவே விரும்புகிறோம். வெளியே அதைவிட இன்னும் கொஞ்சம் பெரிய அறை கிடைக்கிறது. அங்கிருக்கிறது சுதந்திரமாகத் தெரிகிறது. ஆனால், சிறிது நாட்களுக்குப் பிறகு அதையும் ஒரு பெரிய கட்டுப்பாடாக எண்ணுகிறீர்கள் அந்த அறையையும் உடைத்துக் கொண்டு இன்னும் கொஞ்சம் பெரிய அறைக்குச் செல்கிறீர்கள். சிறிது காலத்திற்கு அது சுதந்திரமாய்த் தெரிகிறது. பின்னர் அதுவும் கட்டுப்பாடாய்த் தெரிகிறது.

சுதந்திரம் தேடுதல் என்றால், அல்லது சுதந்திரம் இல்லாத சூழ்நிலை என்றால், நாம் ஒரு கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறோம் என்றே பொருள். மனிதனுக்குக் கட்டுப்பாட்டை உடைக்க வேண்டும் என்ற ஆர் வம் எப்போதும் இருக்கிறது. மனித னின் உயிர்த் தன்மைக்குள்ளேயே இந்த ஆர்வம் புதைந்து இருக்கிறது. எந்த ஒரு கட்டுப் பாட்டையும் அது விரும்புவ தில்லை. அதைத் தாண்டிப் போக வேண் டும் என்பதே மனிதனின் ஆர்வம். அப் படிப் பார்தால், நம் உடல் என்பதே ஒரு கட்டுப்பாடுதான், பொருள் தன்மை என்பதே கட்டுப்பாடுதான், மனம் என்பதே கட்டுப்பாடுதான், இவற்றையெல்லாம் தாண்டிப் போகவில்லையென்றால், சுதந்திரம் என்பதே இல்லை.

சுதந்திம் என்ற வார்த்தையின் மூல வார்த்தை சமஸ்கிருத மொழியில் "ஸ்வா" "தந்திரம்" என்றிருக்கிறது. "ஸ்வா" என்றால் நாம். நாம் என்றால் அது அகங்கார நிலையில் இல்லை, உணர்வு நிலையில் இல்லை, எண்ணமாய் இல்லை, உடல் நிலையில் இல்லை. இது அடிப்படையான நான் என்ற தன்மை, அதன் தந்திரம். நான் என்று எதைச் சொல்கிறோமோ அது எல்லையில்லாதது. எல்லையில்லாமல் போக வேண்டும் என்ற ஆர்வம் இருப்பதனால், மனிதனால் ஒரிடத்தில் நிலையாய் இருக்க முடியவில்லை. எந்தக் கட்டுப்பாடாக இருந்தாலும், அதைத் தாண்டிச் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது.

கட்டுப்பாடுகளைத் தாண்டிச் செல்ல வேண்டும் என்ற ஆர்வம்தான் மனிதனின் ஆசைக்கு அடிப்படை. உங்கள் வாழ்வில் நீங்கள் எந்தக் கட்டத்தில் இருந்தாலும் அதைத் தாண்டிச் செல்ல வேண்டும் என்ற ஆசை எப்போதும் உங்களுக்குள் இருக்கிறது. இதுதான் உங்கள் ஆசையின் அடிப்படை, ஸ்வதந்திரம் என்றால், உங்களுக்குள் இருக்கின்ற நான் எனும் எல்லையில்லாத் தன்மை அதன் உண்மையான நிலைக்குப்போக முயற்சி செய்கிறது. அந்த எல்லையில்லாத் தன்மைக்கு இந்த உடலும் மனமும் கட்டுப்பாடாக இருக்கிறது.

உடல்,மனம் கடந்து மனிதன் வாழ்க்கையை உணரத்தொடங்குவதைத் தியானம் என்கிறோம். மனிதன் தியான நிலயில் இருந்தால், முழுமையான ஸ்வதந்திரத்தை உணர முடியும். ஸ்வ-தந்திரம் என்றால், உயிரின் தந்திரம். இந்தத் தந்திரத்துடன் நாம் விழிப்புணர்வாக நடந்து கொள்வதை ஆன்மீகம் என்கிறோம். கோயிலுக்குச் சென்று அது வேண்டும், இது வேண்டும் என்பது ஆன்மீகமில்லை. உடல் தந்திரத்தில் சிக்கிப்போகாமல், மனதின் தந்திரத்தில் சிக்கிப் போகாமல், உயிருக்கு அடிப்படையான ஸ்வ-தந்திரத்தில் இருக்கும் போதுதான் அது உண்மையான சுதந்திரம்.

சாதரணமாக, தனக்கு விருப்பமானதை செய்துகொள்வதை சுதந்திரம் என்று கருதிக் கொள்கிறார்கள். உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்வதெல்லாம் சுதந்திரமில்லை. விருப்பம் என்பதே மிக ஆழமான கட்டுப்பாட்டிலிருந்து வந்ததுதான். நீங்கள் சாப்பிட வேண்டும், பலவிதமான இன்பங்களை உணரவேண்டும் போன்ற தேவைகள் உங்கள் சுதந்திரத்தால் வரவில்லை. மிக ஆழமான கட்டுப்பாட்டினால் வந்திருக்கிறது. உடல் நிலையில் பலவிதமான கட்டுப்பாடுகள் உள்ளன, மன நிலையில் பலவிதமான கட்டுப்பாடுகள் உள்ளன. இந்தக் கட்டுப்பாட்டிற்கும் இந்தக் கட்டுப்பாடுகளினால் உருவான நிர்ப்பந்தங்களுக்கும் சரணடைவதை சுதந்திரம் என்று மக்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சுதந்திரம் என்றால், உங்களுக்கென எந்தத் தேவையுமில்லை. சூழ்நிலைக்கு எது தேவையோ அதை ஆனந்தமாகச் செய்கிறீர்கள். உங்கள் நிலை இப்படி இருந்தால், இதுதான் சுதந்திரம். நான் இதைத்தான் செய்வேன், அதைத்தான் செய்வேன் என்றால், அது சுதந்திரம் இல்லை. அது மிக ஆழமான நிர்ப்பந்தம். இந்த நிர்ப்பந்தத்தில் இருக்கும் போது நம் செயல்கள் சூழ்நிலைக்கு ஏற்றவாறு இருக்காது. இது நம் வாழ்வில் பலவிதமான பாதிப்புகளை உருவாக்க வாய்ப்புள்ளது. மனிதனுடைய பாதிப்புகளுக்கு எல்லாமே அடிப்படை, நிர்ப்பந்தத்தின் காரண மாக உள்நிலைக்கும் வெளிச் சூழ்நிலைக்கும் ஒத்து வராத செயல்களைச் செய்வதுதான் சுதந்திரம் என்றால், உயிர்த் தன்மைக்கு அடிப்படையான தன்மையுடன் ஒன்றியிருக்க வேண்டும். நீங்கள் நினைத்ததையெல்லாம் செய்வது சுதந்திரம் இல்லை. இந்த உயிருக்கு அடிப்படையான நான் என்ற தன்மை தந்திரத்துடன், அதாவது ஸ்வ-தந்திரத்தில் இருந்தால் மட்டுமே அது சுதந்திரம். (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# நாட்டாரியல்

## ஒடுக்கப்பட்ட மக்களின் சின்னஞ்சிறு கடவுளர் வழிபாடு

## பெருந்தோட்ட மக்களின் மத வழிபாடு தொடர்பான சமூகவியல் ஆய்வு

ரா.நித்தியானந்தன் B.A.(Hons),M.Phil

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

01

### அறிமுகம்

இலங்கையின் மலையகம் என்றும் பெருந்தோட்டம் என்றும் அழைக்கப்படும் மத்திய மலைநாட்டு தேயிலைத் தோட்டம் சார்ந்த மற்றும் தாழ்நிலங்களின் றப்பர் தோட்ட பிரதேசங்கள் இந்திய தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களாகும். இம்மக்கள் இரண்டு பிரிவினர்களாக அல்லது இரண்டு வர்க்கங்களாக இங்கு வாழ்கின்றனர். ஒரு பிரிவினர் நகர்ப்புறம் சார்ந்த இந்திய வம்சாவழித் தமிழர் மற்றப் பிரிவினர் இம்மக்களில் பெரும்பான்மையிரான மக்களாகிய தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களாவர். இவ்விரு சாரரும் ஏதோ ஒரு வகையில் 1830 களுக்குப் பின் தமிழ் நாட்டின் பல பிரதேசங்களில் இருந்து அழைத்து வரப்பட்டு இலங்கையில் குடியமர்த்தப்பட்டவர்கள். ஆனால், அடிப்படையில் இப்பிரதேச நகர்ப்புறத் தமிழர்களுக்கும் தோட்டப்புறத் தமிழ் மக்களுக்கும் இடையில் கலாசார, பண்பாட்டு அம்சங்களில் ஒத்த பண்புகள் காணப்பட்டாலும் அம்மக்களின் தெய்வ வழிபாட்டு அம்சங்களில் துல்லியமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. நகர்ப்புறத் தமிழர்கள் பெருந் தெய்வங்களை வழிபடுகின்ற அதேசமயம் பெருந்தோட்ட மக்கள் சிறுதெய்வ வழிபாட்டிற்கு முக்கிய இடமளிக்கின்றனர். அதற்கான சமூகவியற் காரணம் கண்டறியப்பட வேண்டிய ஒன்றாகும். மனித சமுதாயம் தம் அறிவியற் கோட்பாடுகளுக்கு, அதன் தர்ம நியாயங்களுக்கு தமது வாழ்க்கைப் பிரச்சினைகளூடாக நியாயம் கற்பித்துக் கொண்டு நகரங்களிலும், கிராமங்களிலும் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறது. அந்த அறிவியலின் அடையாளம் தானே மதம். அது நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கும் என்பதும் அதற்குக் கடவுள் துணையிருப்பார் என்பதும் சராசரி மனிதர்களின் நம்பிக்கை. ஆனால், பல சந்தர்ப்பங்களில் இந்நடைமுறைகள் தோற்றுப் போகின்றன. மதிப்பிழக்கின்றன. சமூக, பொருளாதார அடிப்படையில் அதன் கருது கோள்கள் முரணுறுகின்றன. எனவே இந்த முரண்பாடுகள், ஏமாற்றங்கள் புதிய கடவுள்களின் புனைவுகளை, புதிய மதங்களின் தோற்றங்களை உலகுக்கு கொண்டு வந்து விடுகின்றன. இதுதான் மதங்களின் தோற்றத்தில் உலகில் நடந்தது.

ஒரு சமூகத்தளம் இன்னுமொரு சமூகமாக உருப்பெறுகின்றபோது, தாம் இதுவரை கொண்டிருந்த உற்பத்தி உறவுகளில் இருந்து விடபடுகின்ற போது, புதிய கடவுள்களும் (ஒரே மதத்திற்குள்) வழிபாட்டு முறைகளும் தோற்றம் பெற்று விடுகின்றன. எனவே, மதத்தின் வழிபாட்டு முறைகள், கடவுள் என்பன சமுதாய அமைப்பிற்கேற்ப மாறுபடக் கூடியன என்பது இயல்பானது. எனவே புதிய தெய்வங்கள், வழிபாட்டு முறைகள் அதன் புதிய சமுதாய நெறிமுறைகளை சார்ந்திருப்பதால், அவை இதுவரை இருந்த மரபுசார் மதத் தன்மைகளுடன் மாறுபடவும் கூடும்.

எனவே இந் நூற்றாண்டின் "அமெரிக்க மனிதநேய வாதிகளின்" கொள்கையின்படி சமயத்தின் உத்தி (கடவுள்) என்பது சமுதாய உள்ளடக்கத்தின் வெளிப்படையின்றி வேறல்ல. இவ் விடத்தில் கடவுள் வழிபாட்டு அணுகு முறைகள் ஓர் இயல்புநவிச்சியாக இயற்கைக்கால மனிதனின் வழி பாட்டு முறைகளை இங்கு மீள எண்ணத் தூண்டுகின்றன. எனவே மனித சமுதாய இயல்புநவிச்சி கடவுள் பற்றிய பல புனைவுகளை மீண்டும் மீண்டும் எம்முன் கொண்டு வருகின்றன. நீண்டகாலமாக கடவுள் பற்றிய புனைவகள் இப்படித்தான் தோன்றி வந்துள்ளன. எனவே கடவுள் என்பது பௌதீக ரீதியான, சமூகத்தின் சார்பு நிலைக் கொள்கைகளே. அவை எல்லா இடங்களிலும் எல்லாக் காலகட்டங்களிலும் ஒரே மாதிரியாக இருப்பதும் இல்லை.

(தொடரும்)

# எட்டாமிடக் கிரகத்தில் ஏற்படும் கஷ்டங்கள் என்ன?

"என்ன சேர் நீங்க, 9 ஆயிரம் கேட்டால் 8 ஆயிரம் தாறீங்கள்! 8 உதவாது சேர் இல்லாட்டி 2 தாள் என்றாலும் குறைத்து தாருங்கள் சேர்!"

இது ஏஜென்டு பாஷாபாய்!

ஆம்.

உண்மைதானா?

தீன்-தேரோ, ஆட்-அட்டாராவைக் கடைப்பிடிப்பவர்கள் ஆயிற்றே!

ஏன்? நமக்கு மட்டும் என்ன?

எட்டாவது திதியான அட்டமி என்றால் அலறுகிறோம் அல்லவா?

அட்டமி என்றால் கஷ்டங்களே ஏற்படும் என்று சொல்வதில்லையா?

கிருஷ்ணன் 8 ஆவது பிறப்பு!

என்ன செய்தான், தாய் தந்தையர்களுக்கு?

மாமனைக் கொன்றான்,

திருடினான்,

தூது சென்றான், பாரதப் போரில் அவன் தான் முக்கிய அங்கம் வகித்தான். அவனோடு அந்த யுகமே அழிந்தது!

எண்சோதிடப்படியும் 8 ஆம் எண்

## ஜோதிடக் களம்

சனிக்கு வருகின்றது.

8 ஆம் எண் உள்ள வீட்டுக்கு குடி போகவேமாட்டேன் என்கிறார் நண்பர்.

லக்கினத்திற்கு 8 ஆவது வீடு ஆயுட்ஸ்தானம் என ஜோதிடர்கள் கூறுகின்றார்கள்.

அந்த வீட்டுக்குடையவன் எங்கிருந்தாலும் எந்தக் கிரகத்துடன் சேர்ந்தாலும் ஜோதிடர்களுக்கு பிடிப்பதில்லை.

8 ஆம் இடத்தில் சூரியன் முதல் கேது வரையுள்ள கிரகங்கள் என்ன பலன் ஏற்படுத்துவார்கள் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா?

### சூரியன்

நல்ல நண்பர்களை இழப்பார்கள். சமயத்திற்கு யாரும் உதவிக்கு வரமாட்டார்கள். பூர்வீக சொத்து, தகப்பனார் வகை உறவினர் பிரயோசனம் அற்றுப் போகும், காலமெல்லாம் உழைத்தாலும் செல்வம் சேருவது துர்லபம்.

மத்திய ஆயுள் பெற்ற இவர்களது உடல் மெலிந்தும் பார்வை குறைந்தும் இருக்கும்.

### சந்திரன்

ஆஸ்துமா, மார்புச்சளி, ஜலதோஷம் போன்ற நோய்கள் இவர்களுக்கு ஏற்படும். சந்திரன் 3 க்கு உடையவனாக வந்து 8 ஆம் இடத்தில் நின்ற ஒருவருக்கு இருக்கின்றது.

இவ்வித நோய்கள் இல்லை என்றாலும் எப்போதும் ஏதாவது ஒரு நோய் இவர்களுக்கு இருப்பது போன்ற தோற்றம் இருக்கும். இவர்களுக்கும் மத்திய ஆயுளே சொல்ல வேண்டும்.

### செவ்வாய்

8 ஆம் இடத்தில் செவ்வாய் நின்றால் உடலில் ஏதாவது ஒரு அங்கம் குறையலாம். அல்லது அதிகமாகவும் இருக்கலாம். செவ்வாய் குணகாரகன் ஆகையால் 8 ஆம் இடம் பெற்றுவிட்டால், தானமும் குடும்பமும் முன்னேற்றம் அடைவதில்லை. (நேர்மையைக் கடைப்பிடிப்பவர்களுக்குத்தான்)

எப்போதும் கடன் கொஞ்சமாவது இருந்து கொண்டே இருக்கும். இவர்களது பேச்சு, சுபாவம் யாருக்கும் பிடிக்காமலும் போகலாம். ஆயுள் மந்தம் தான்.

### புதன்

8 ஆம் இடத்தில் புதன் இருந்தால் ஆயுளை வளர்க்கிறான். சுமார் 80 வயது.

அரசாங்கத் தலைவன், ஒரு கட்சித் தலைவன், அல்லது தொழில் தலைவன் அதாவது, எதில் இருந்தாலும் தலைவன் தான். ஜாதகர், குடும்ப பராமரிப்பு பிரமாதமாக நடத்தி வருவார். நல்ல பெயரும் புகழும் உண்டு.

### குரு

8 ஆம் இடத்தில் இருந் தாலும் ஆயுள் விருத்தி தான். சுபக்கிரகம் இல்லையா? அது தான்! ஆனால், அவனது சுபகாரகங்கள் அனைத்தும் போச்சு! அற்பத்தனமாகக்கூட சில நேரங்களில் நடந்து கொள்வார்கள். பாவ காரியங்களை செய்வதில் பற்றுள்ளவர்கள். லக்கினாதிபதி வலுப்பெற்றிருந்தால் பாவ காரியங்கள் செய்வாரோடு இணங்கியிருப்பார்கள்.


© Drdha Monge

இவர் செய்வதில்லை. ஆனால் அவர்களுக்கு இவர்களது ஆசி உண்டு. பணம் உண்டு மேலும் கவலையே இல்லை.

### சுக்கிரன்

நிறைய பணம் சம்பாதிக்கலாம். செல்வந்தராகலாம். எதிலாவது தலைவராகலாம். நீண்ட ஆயுளையும் பெறுவார். இது ஒரு சுபக்கிரகம் ஆயிற்றே! ஆனால் காரக பலன் குறையும்.

### சனி

கண்டிப்பாக இவன் 8 இல் இருக்க கூடாது! மகர, கும்ப லக்கினங்களில் பிறந்திருந்தால் சனி எட்டாம் ஆம் இடம் பெற்றாலும் நன்மையே! பசி பொறுக்க மாட்டார்கள்.

குட்ரயக்தி அதிகம் பெற்றவர். சுத்தமில்லாமல் நடந்து கொள்வார்கள்.

குடும்பம் வறுமை அடையும், மூல ரோகம் வரலாம். ஆனால், சனியுடன் வேறு கிரகம் சேர்ந்தால் நன்மை ஏற் பட்டு விடும்.

### இராகு

ஏனைய பாவ கிரகங்களுக்கு சொன்னது போல் அல்லாது ஆயுள் தீர்க்கமுண்டு.

கபட மனம் கொண்டவர்கள். கால்களில் அல்லது தொடைகளில் வலு குன்றியிருப்பர், குறைந்த குழந்தைகள் இருக்கலாம், வாயு சம்பந்தமான நோய்களுக்கு ஆளாகலாம்.

### கேது

8 ஆம் இடத்தில் கேது இருந்தால் இராகுவைப் போல் அல்ல.

குடும்பத்தில் இருந்தும் தன்னை அன்பாக நேசிப்பவர் இடத்தில் இருந்தும் பிரிந்து வாழும் சூழல் உண்டாகும். பிறரது கண்ணுக்கு பரிதாபமாக தோன்றும் வாழ்க்கை வாழ்பவர்.

அடிக்கடி சிறு சண்டைகளும் காரியத் தடைகளும் ஏற்படும். மத்திய ஆயுளாகையால் சுமார் 65 வயது என்று சொல்லலாம்.

# அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து பொதுநலவாய சம்மேளனத்தில் முறையீடு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தினால் துன்புறுத்தப்படுவதாக கூறி ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பொதுநலவாய நாடுகளின் நாடாளுமனற் சம்மேளனத்திடம் முறையிட்டுள்ளார்.

அனோமா கடகே என்ற நாடாளுமன்ற உறுப்பினரே இந்த முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

அரசாங்கம் புதிய ஒழுங்குகளை அறிமுகப்படுத்தி எதிர்க்கட்சியினரின் எதிர்ப்பை அடக்க முற்படுவதாக அவர் தமது முறைப்பாட்டில் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை கொண்டுள்ள அரசாங்கம் ஐக்கிய தேசிய கட்சியின் வர்த்தக தலைவர்கள் மற்றும் நீதித்துறையை சேர்ந்தவர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது தனியார் துறை நிறுவனங்களை கையகப்படும் சட்ட மூலத்தை நிறைவேற்ற முனைகின்றது என்று அனோமா கமகே குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் கையகப்படுத்தவுள்ள 37 தனியார் நிறுவனங்களின் வரிசையில் அனோமா கமகேயின் செவனகல சீனி தொழிற்சாலையும் உள்ளடங்குகின்றது.

இந்த நிலையில் பொதுநலவாய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் ஒருவரை நியமிக்காமை காரணமாகவே இவ்வாறான மனித உரிமை மீறல்களை இலங்கை அரசாங்கம் மேற்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை முன்னாள் நாடாளுதன்ற உறுப்பினரும் இராணுவ தளபதியுமான சரத் பொன்சேகா தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஜெயலத் ஜெயவர்த்தன கடந்த சில நாட்களுக்கு முன்னர் பாப்பரசரிடமும் கோரிக்கை மனு ஒன்றை கையளித்தார். (அ-2)

# தொழில் துறையினரின் சுகாதார நிலைமையை மேம்படுத்த திட்டம்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

நாட்டில் உள்ள தொழில்துறையினரின் சுகாதார நிலைமையை மேம்படுத்தும் பொருட்டு சுகாதார அமைச்சு புதிய வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சின் மேலதிக செயலாளர் பாலித மஹிபால இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தொழில் ரீதியாக ஏற்படக்கூடிய நோய்கள் மற்றும் விபத்துக்கள் தொடர்பாக இதன் போது கவனம் செலுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக சுகாதார அமைப்பின் தரவுகளில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் இந்த நிலை 80 சதவீதம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாட்டில் உள்ள பல்வேறு தொழில்துறையில் ஈடுபடுபவர்களின் சுகாதார நிலைமைய மேம்படுத்துவதற்கு புதிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க, பியகம சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் காலி உள்ளிட்ட பிராந்தியங்களில் முதற்கட்ட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் பாலித மஹிபால குறிப்பிட்டுள்ளார். (அ-2)


# தேசிய தரைத்தோற்ற வரைபு வெளியிடப்படும்

இலங்கையின் தேசிய தரைத்தோற்ற வரைபு எதிர்வரும் 15 ஆம் திகதி வெளியிடப் படும். இதற்கான விசேட அங்குரார்ப்பண நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பண்டார நாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில்நடைபெறவுள்ளது என்று விமல் வீரவன்ச தெரிவித்தா.

நேற்றுநிர்மாணத்துறைபொறியியல்சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கேட்போர் கூட்டத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ)

# ஈழக் கனவு காணும் சர்வதேசத்தை முறியடிக்கும் சக்தி ஜனாதிபதிக்குண்டு

## அமைச்சர் மைத்திரிபால புகழாரம்



(கொழும்பு)

ஈழக் கனவு காணும் சர்வதேச சமூகத்துடன் போராட்டம் நடத்த வேண்டியுள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் நடத்தப்பட்ட போர் வெற்றியடைந்த போதிலும் ஈழக்கனவு காணும் சர்வதேச சக்திகளுடனான போராட்டம் ஓயவில்லை.

பிரபாகரனுடன் ஆயுதங்களை கொண்டு போராட்டம் நடத்திய போதிலும் தற்போது புத்தியை கொண்டு போராட்டம் நடத்த வேண்டியுள்ளது.

அந்த போராட்டத்தை நடத்தக் கூடிய மூளை ஆற்றல் ஜனாதிபதியிடம் காணப்படுகின்றது.

யட்டிநுவர பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பல்கலையில் பகிடிவதையில் ஈடுபட்ட மாணவர்கள் மூவர் இடைநீக்கம்

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் கல்வி கற்கும் அக்கரைப்பற்றைச் சேர்ந்த 3 மாணவர்கள் பகிடிவதையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நீண்ட நாட்களாக பல தீய செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளதை அவதானித்து வந்த பல்கலைக்கழகம் கடந்த ஒக்டோபர் 6 ஆம் திகதி அக்பர் ஹோல் எனும் அறையொன்றில் 8 மாணவர்களை பூட்டி வைத்து அடித்ததாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் முறையிட்டுள்ளனர்.

அவர்கள் வழங்கிய குற்றச்சாட்டின் காரணமாக இம் மாணவர்கள் மூவரும் 3 வார காலங்களுக்கு இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனால் இவர்களின் கல்வி நடவடிக்கை ஒரு வருட காலம் பாதிப்படையலாம் என நம்பப்படுகின்றது.

இவர்களின் செயற்பாடுகளை தொடர்ந்து அவதானிப்பதற்கு பல்கலைக்கழகம் போதிய செயற்பாடுகளை செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# பாலியல் மருந்துகளை உட்கொள்வது குறித்து சரியான அவதானம் அவசியம்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பாலியல் செயற்பாட்டைத் தூண்டும் மருந்து வகைகளை உட்கொள்ளுவதில் அவதானம் அவசியமென சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

பாலியல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் என விளம்பரப்படுத்தப்பட்டு பல்வேறு பெயர்களில் மாத்திரைகள் மற்றும் அவற்றுடன் தொடர்பான மருந்துகள் சந்தையில் விற்பனை செய்யப்படுவதாக சுகாதார அமைச்சின் வாசனைத் திரவியம் மற்றும் ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை சுட்டிக் காட்டியுள்ளது.

இவ்வாறான 50 இற்கும் மேற்பட்ட மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் 6 வகையான மருந்துப் பொருட்களே அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஔடத ஒழுங்கு அதிகாரசபை சுட்டிக்காட்டுகின்றது.

வைத்தியர்களின் ஆலோசனை இன்றி உட்கொள்ளும் ஒரு சில பாலியல் செயற்பாட்டைத் தூண்டும் மருந்துகளால் மனச் சோர்வு, வாந்தி , குருதி அமுக்கம், மாரடைப்பு, நரம்புக் கோளாறுகள், வலிக்குணம் குறிகள் , நிறைகுறைவு, வயிற்று வலி போன்ற பக்க விளைவுகள் ஏற்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சு இலங்கை மருந்துகளை உட்கொள்ளும் முன் வைத்தியர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு மக்களை அறிவுறுத்தியுள்ளது. (அ-2)

# ஏறாவூர் கலவாய் பகுதியில் போர் தளபாடங்கள் மீட்பு

(கொழும்பு)

ஏறாவூர் கலவாய் பிரதேசத்தில் உள்ள பாடசாலைக்கு அருகில் இருந்த போர் தளபாடங்கள் சிலவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று மதியம் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் இந்த தளபாடங்கள் மீட்கப்பட்டதாக ஏறாவூர் பொலிஸாரால் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதற்கமைய 4 கைக்குண்டுகள், 3அமுக்கவெடிகள், 2 அருள்ரக குண்டுகள், ரி56 ரக துப்பாக்கிகளுக்கான தோட்டாக்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸாரினால் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.11 09

★1793-கிறிஸ்தவ மதகுரு வில்லியம் கோரி, கல்கத்தா வந்து சேர்ந்தார்.

★1799-பிரெஞ்சுப் புரட்சி முடிவுக்கு வந்தது. நெப்போலியன் பொனபார்ட் பிரான்சைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான்.

★1872-மசாசுசெட்ஸ் மாநிலத்தில் பொஸ்டன் நகரில் களஞ்சிய சாலை ஒன்றில் ஏற்பட்ட தீ பரவியதில் பொஸ்டனின் பெரும் பகுதி அழிந்தது. 776 கட்டடங்கள் அழிந்து 20 பேர் உயிரிழந்தனர்.

★1887-ஐக்கிய அமெரிக்கா ஹவாயின் பேர்ல் துறைமுகத்தின் உரிமையைப் பெற்றது.

★1888-கிழிப்பர் ஜேக் மேரி, ஜேன் கெலியைக் கொன்றான். இதுவே அவனது கடைசிக் கொலையாகும்.

★1913-மகாத்மாகாந்தி கைது செய்யப்பட்டு 9 மாதச் சிறைத் தண்டனையடைந்தார்.

★1937-ஜப்பானியப் படைகள் சீனாவின் ஷங்காய் நகரைக் கைப்பற்றினர்.

★1938-நாசி இட்லரின் யூதப் பகைமைக் கொள்கையின் ஒரு பகுதியாக ஜேர்மனியில் கிறிஸ்டல் இரவு நிகழ்வு இடம்பெற்றது. 90 யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 25 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டு நாசி வதை முகாம்களில் அடைக்கப்பட்டனர்.

★1953-கம்போடியா பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.

★1963-ஜப்பானில் மீக் என்ற இடத்தில் நிலக்கரிச் சுரங்கத்தில் இடம்பெற்ற விபத்தில் 458 பேர் உயிரிழந்தனர்.

★1963-ஜப்பான் யோகோஹாமா என்ற இடத்தில் மூன்று தொடரூந்துகள் மோதியதில் 160 பேர் உயிரிழந்தனர்.

★1967-நாசா நிறுவனம் கேப் கென்னடி தளத்தில் இருந்து ஆளில்லா அப்பல்லோ 4 விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பியது.

★1985-சதுரங்க உலகக் கிண்ணப் போட்டியில் காரி கஸ்பரோவ் அனத்தோலி கார்ப்பொவைத் தோற்கடித்து உலகின் முதலாவது வயது குறைந்த சதுரங்க வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

★1989-பனிப்போர்: கம்யூனிசக் கிழக்கு ஜேர்மனி பேர்லின் சுவரைத் திறந்து விட்டதில் பலர் மேற்கு ஜேர்மனிக்குள் செல்ல ஆரம்பித்தனர்.

★1990-நேபாளத்தில் புதிய மக்களாட்சி அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

★1994-டார்ம்ஸ்டாட்டியம் (Darmstadtium) என்ற தனிமம் கண்டுபிடிக்கப்பட்டது.

★2000-உத்தராஞ்சல் மாநிலம், இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தில் இருந்து பிரிக்கப்பட்டது.

★2005-வீனஸ் எக்ஸ்பிரஸ் என்ற ஐரோப்பாவின் விண்கலம் கசகஸ்தானில் இருந்து ஏவப்பட்டது.

★2005-ஜோர்தானின் அம்மான் நகரில் மூன்று விடுதிகளில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 56 பேர் கொல்லப்பட்டனர்.

### இறப்புக்கள்

★1918-கியோம் அப்போலினேர், பிரெஞ்சுக் கவிஞர் (பி.1880)


★1970-சார்லஸ் டிகோல், பிரெஞ்சுத் தளபதி, அரசியல்வாதி (பி.1890)

★2005-கே.ஆர்.நாராயணன், இந்தியக் குடியரசுத் தலைவர். (பி.1921)

★2006-வல்லிக்கண்ணன், தமிழ் எழுத்தாளர். (பி.1920)

### சிறப்பு நாள்

★கம்போடியா- சுதந்திர தினம் (1953)



★1921-அல்பேர்ட் ஐன்ஸ்டீன் ஒளியின் விளைவை விளக்கியமைக்காக இயற்பியலுக்கான நோபல் பரிசைப் பெற்றார்.

# கயிறே என் கதை கேள்!

# முருகன் சொல்லும் கண்ணீர்

## உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுப் பார்க்கும் என்னுடைய கேள்விகள் தொடர்கின்றன!

கேள்வி :18) "நீதிபதிகளும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல; அவர்களும் மனிதர்களே! " - சட்ட ரீதியான, நீதி வழியிலான அற்புதமான இந்தக் கருத்தை பல வழிகளில் உச்ச நீதிமன்ற நீதிபதிகளே பதிவு செய்து இருக்கிறார்கள். "மிகவும் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட பொய்ச்சாட்சியங்களின் அடிப்படையில் அப்பாவிகள் தண்டிக்கப்பட்ட வாய்ப்பு துளி அளவும் இல்லை என்று சொல்லிவிட முடியாது. போதுமான அடிப்படைகளும், ஆதாரங்களும் இருக்கும் பட்சத்தில் நீதிமன்றத் தீர்ப்புகளையும், நீதிபதிகளின் முடிவுகளையும் மறுக்கவோ விமர்சிக்கவோ சம்பந்தப்பட்ட அனைவருக்கும் சட்டபடி உரிமை உண்டு!" என்றும் உச்ச நீதி மன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. இந்த வழக்கில் சி.பி.ஐ.யினர் சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள சட்ட விதியினை அடிப்படையாகக் கொண்டும், தான் நாங்கள் நிரபராதிகள் என்று வலியுறுத்துகிறோம். எமக்கு இழைக்கப்பட்டு இருக்கின்ற அநீதிகளையும், சித்திரவதைகளையும் நாங்கள் வெளியே சொல்வதைக்கூட உங்களால் ஏற்க முடியவில்லை. "தூக்கில் போடு" எனக் குரல் எழுப்புகிறீர்கள்.உங்கள் தலைவி சோனியாகாந்தி அவர்களே எங்களை மன்னிக்கச் சொன்ன பிறகும் நீங்கள் உடன்பட மறுக்கின்றீர்களே... அப்படி என்றால்,உங்களுக்கு இருக்கும் நாட்டுப்பற்று சோனியா காந்தி அவர்களுக்கு இல்லை என்று தானே சொல்ல விரும்புகிறீர்கள்? எங்களை மன்னித்து தண்டனையைக் குறைக்கும் படி பரிந்துரை செய்தது சோனியா காந்தியின் தனிப்பட்ட விடயம் என்று மேடைக்கு மேடை பேசுகிறீர்கள். நாட்டு நலனைவிட, சட்டத்தைவிட சோனியா காந்தி அவர்களுக்கு தனிப்பட்ட உணர்வும், உணர்ச்சியுமே முக்கியம் என்று நீங்கள் பிரச்சாரம் செய்வது உங்களுக்கே தகுமா? ராஜீவ்காந்தியை தனு ஒரு முறைதான் கொலை செய்தார்.

ஆனால், பரபரப்பு அரசியலுக்குத் தேவைப்படும் போதெல்லாம், அந்த உடலை எடுத்து வைத்து ஆராய்ச்சி என்ற பெயரில் நீங்கள் 20 வருடங்களுக்கும் மேலாகக் கொலை செய்கிறீர்களே... இது என்ன நியாயம்?

19) எமக்கு மரண தண்டனை வழங்கிய தலைமை நீதிபதி அவர்கள் 2.9.2011 அன்று இணையத்தளத்தில் தனது மனசாட்சியை இறக்கி வைத்தார். அதில், நாங்கள் அப்பாவிகளாக, நிரபராதிகளாக இருந்திருக்க வாய்ப்பு உண்டு எனச்சொல்லி இருக்கிறார். எமக்குத் தூக்குத்தண்டனை வழங்கியது தவறு என்கிறார். எம்மை தூக்கில் போட்டுக் கொன்றால், 2000 வருடங்களுக்கு முன் நிரபராதியான ஏசுவை சிலுவையில் அறைந்து கொன்றது போன்ற பெரும் தவறினை இப்போது செய்தது போலாகிவிடும் என்று மனசு துடிக்கச் சொல்லி இருக்கிறார். எமக்கு தீர்ப்பு எழுதிய நீதிபதியின் மனக் குரலைவிட, எங்கள் தரப்பின் நியாயத்துக்கு வேறென்ன பிடிமானம் வேண்டும்? சி.பி.ஐ சொல்வதை நம்பும் நீங்கள்- அந்த நீதிபதியின் ஆன்ம அலறலை மட்டும் ஏன் நம்ப மறுக்கிறீர்கள்? உங்களின் சந்தேகத்துக்கு ஆதாரம் தான் என்ன? "இலங்கைத் தமிழர்கள் இப்படித்தான் செய்வார்கள், என்கிற கருத்தா? இல்லை", "குற்றவாளிகளாக நாங்கள் அடையாளப்படுத்தப்பட்ட போது ஏற்பட்ட வெறுப்பா?"

20) கேரளாவைச் சேர்ந்த மெர்வின் என்ற பெண்ணின் கணவர் பாபு எலியாஸ் அரபு நாட்டில் இருந்தார். அவரை நெல்லையைச் சேர்ந்த இரண்டு பேர் கொலை செய்து விட்டனர். கொலையாளிகளுக்கு சட்டப்படி மன்னிப்பு வழங்கி இரு உயிர்களையும் காப்பாற்ற மெர்வின், "கொலைக்கு கொலைதான் தீர்வா? இரண்டு பேரின் உயிர்களை எடுப்பதால் என் கணவரின் உயிர் திரும்பக்கிடைத்து விடுமா?" என அவர் எழுப்பிய மனிதநேயக்குரலே நீதியின் கவனத்தைத் திருப்பி, அந்தக் கொலைகாரர்களைக் காப்பாற்றியது. சோனியாகாந்தி அவர்களுக்கு மெர்வின் ஒரு கடிதம் எழுதினார். "மிகச் சாதாரண பெண்மணியான நானே இரண்டு உயிர்கள் வாழ்வதற்கு காரணமாக இருக்கிறேன். மிக உயரிய இடத்தில் இருக்கும் நீங்கள் உங்கள் கணவரின் கொலை வழக்கில் சிக்கி இருப்பவர்களுக்காக நிச்சயம் மனம் இரங்க முடியும்" என அதில் கோரிக்கை வைத்தார். அந்த நியத்தை படித்த பிறகு தான் சோனியா காந்தி அவர்கள் ஜனாதிபதி அவர்களுக்கு கடிதம் எழுதினார். எமக்கான தண்டனையைக் குறைக்கப் பரிந்துரை செய்தார். அதன் பேரில் நளினிக்கு மட்டும் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. எமது தண்டனை கடந்த 10 வருட காலமாக அப்படியே இருக்கிறது. எங்களின் தண்டனைக் குறைப் புக்காக சோனியா காந்தி அவர்கள் கடிதம் கொடுத்த போது அமைதியாக இருந்த நீங்கள், 10 வருடங்கள்க்



ழித்து எம்மைத்தூக்கில் போட்டு சாகடிக்கும் படி உண்ணாவிரதம் இருக்கிறீர்கள். காரணம் தேசபக்தி என்கிறீர்கள்... ராஜீவ் காந்தியை மட்டும் அல்லாது சம்பவ இடத்தில் இருந்த 17 பேர்களையும் கொலை செய்தோம் என்கிறீர்கள்... அவர்களின் குடும்பங்களைத் திரட்டி வந்து எமக்கு எதிராகக் கொடி பிடிக்க வைக்கிறீர்கள். எங்களைக் காவு வாங்குவதற்காக இறந்தவர்களின் குடும்பத் தவர்களிடத்தில் பழைய வருத்தங்களைக் கிளறுகிறீர்களே... இது தான் உங்கள் மனச்சாட்சியின் மகத்துவமா?

21) உச்ச நீதிமன்றம் முடிவு செய்து விட்ட ஒரே காரணத்தினாலேயே சட்டக் கயிறு எங்களின் கழுத்தை இறுக்க வேண்டும் எனப் போராட்டம் நடத்தும் நீங்கள், இரண்டு விடயங்களில் உச்ச நீதிமன்ற முடிவுக்கே எதிராக நிற்கிறீர்கள் என்பதை உணருங்கள்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் (தடா) வராது என்றும், ராஜீவ் காந்தி கொலை நாட்டுக்கு எதிரான குற்றம் அல்ல என்றும், அது ஒரு பயங்கரவாதச் செயல் அல்ல என்றும் 21.5.91 அன்று ஸ்ரீபெரும்புதூர் சம்பவ இடத்தில் கொல்லப்பட்ட ராஜீவ் காந்தியைத் தவிர மற்ற எந்த நபருடைய இறப்புக்கும் நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல என்றும் உறுதியான வார்த்தைகளால் உச்ச நீதிமன்றம் சொன்ன தீர்ப்பினை நீங்கள் உணர மறுப்பது ஏன்?

நீதிமன்றத் தீர்ப்புகளில் கூட உங்களுக்கு உகந்தது என்பதை மட்டுமே எடுத்து வைத்துப் பேசுகிறார்களே... இது தான் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் நீதிக்குக் கொடுக்கும் மரியாதையா? உச்ச நீதி மன்றத் தீர்ப்பு வார்த்தைகளை மறுத்துவிட்டு 17 பேர்களின் குடும்பங்களைத் திரட்டி வந்து போராட்டம் நடத்தும் புண்ணிய வான்களே... நீங்கள் செய்வது நீதிமன்ற அவமதிப்பு இல்லையா?

கொலைகாரர்களுக்கு ராஜீவ் காந்தியை கொல்ல வேண்டும் என்பது மட்டும் தான் குறிக்கோள். சமபவத்தை நிகழ்த்தினால் எத்தனை பேர் சாவார்கள் என்பதை அவர்கள் சட்டை செய்திருக்க மாட்டார்கள். ஆனால், ராஜீவ் காந்தியோடு மட்டும் அல்லாது, இன்னும் பலரைச் சாகடிக்கிற சதித் திட்டத்தோடு கொலையாளிகள் வந்ததாக அர்த்தமற்ற அரசியல் கூச்சல் போடுகிறீர்கள். "உங்கள் குடும்பத்தினரைக் கொன்றவர்கள் இவர்கள் தான்... அவர்கள் தப்பிக்கலாமா? இறந்தவர்களின் ஆத்மா சாந்தி அடைய வேண்டுமானால், கொலைகாரர்கள் தூக்கில் போடப்பட வேண்டும்?" என

**12**

எம்மைக் கைகாட்டி உணர்ச்சியைக் கிளப்புகிறீர்கள் உங்களின் அரசியலுக்கு உறவுகளை இழந்தவர்களின் பரிதவிப்பை ஊறுகாயாகப் பயன்படுத்துகிறீர்கள். உங்களின் மனச்சாட்சியை தொட்டுச் சொல்லுங்கள்... உங்களில் எத்தனை பேர் அந்த 17 பேர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் சொல்லப் போனீர்கள்? அந்தக் குடும்பங்களின் நல்லது கெட்டதுகளில் நீங்கள் எத்தனை பேர் பங்கெடுத்தீர்கள்? "எங்கள் தலைவர் ராஜீவ் காந்தியைப் பார்க்க வந்ததால்தானே உங்களுக்கு இந்த நிலை. உங்களின் கஷ்டங்களில் இனி நாங்கள் உடன் இருக்கிறோம்?" என உளமார்ந்த ஆறுதலை உங்களில் எத்தனை பேர் சொன்னீர்கள்? அந்தத் துயர சம்பவத்தில் தன் உறவைப்பறிகொடுத்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் இன்றைக்கு வாழவே வழி இல்லாமல், அனுதினமும் அல்லாடித் தவப்பது உங்களுக்குத் தெரியுமா? அவருடைய பெயரை நான் சொல்லப் போவதில்லை. 17 பேர்களின் குடும்பங்களைத் திரட்டி வந்து தெருவில் நின்றீர்களே... அதேபோல், நான் கோடிட்டுக் காட்டும் அந்தக் குடும்பஸ்தனையும் தேடுங்கள். அப்படி ஒருவர் உங்களின் கண்ணுக்குத் தெரியாவிட்டால், அப்போது கேளுங்கள், காங்கிரஸ் கட்சியின் மிகக் கொடூர அரசியலை அம்பலம் ஆக்கும் விதமாக அந்த கஷ்ட ஜீவனக் காரரை உங்களின் கண் முன்னால் நிறுத்துகிறேன். ராஜீவ் காந்தி கொலைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தை, அதுவும் காங்கிரஸ் குடும்பத்தை வாழ வைக்க தெரியாத நீங்கள் எங்களை சாகடிப்பதற்காக அவர்களின் கைகளைப்பிடித்து அழைத்து வாருகிறீர்கள்... இது எவ்வளவு பெரிய மோசமான காரியம்?

22) இத்தனை கேள்விகள் உங்களுக்குப் போதும். நான் வரிசைப்பட வைத்திருக்கும் அத்தனை கேள்விகளையும் அலசி ஆராய்ந்தவர்களாகச் சொல்லுங்கள். நாங்கள் குற்றவாளிகளா? ராஜீவைக் கொலை செய்யும் சதி உண்மையிலேயே நாங்கள் நிகழ்த்தியவர்கள் தானா? விசாரணை அதிகாரிகள் போகிற போக்கில் எங்கள் வயிற்றில் அடித்த நிகழ்வு தானே இது. எங்களைத் தூக்கில் போடுவதால் என்ன நிகழ்ந்து விடப்போகிறது? மரணப் போர்வை போர்த்தியபடி தானே இத்தனை நாட்களும் நாங்கள் வாடிக்கிடக்கிறோம். 21 வருடங்களாக அடைக்கப்பட்டுக் கிடக்கும் எங்களின் நியாயம் நிச்சயம் உங்களின் நெஞ்சத்து நீதிபதியை கருணை கொள்ள வைத்திருக்கும் என்பது எமது நம்பிக்கை.

இதற்குப் பின்னரும் "நீங்கள் தான் குற்றவாளிகள். உங்களைத் தூக்கில் போடுவது தான் ஒரே தீர்வு!" என நீங்கள் உறுதியாக நின்றால், அதை தைரியத்தோடு ஏற்றுக்கொள்ள தயார். அதற்கு முன் உங்களிடத்தில் ஒரு கோரிக்கை... மன்னிக்கிற மனோபாவத்துக்கும், உயரிய எண்ணங்களுக்கும் நீங்கள் வளராவிட்டாலும்,விஞ்ஞானம் இன்றைக்கு பெரிய அளவில் வளர்ந்து விட்டது. துல்லியமாக உண்மைகளைக் கண்டறியும் விஞ்ஞானப் பரிசோதனைகள் வந்துவிட்டன. ஒருவனை அந்த விசாரணைக்கு உட்படுத்தினால்,பால்ய கால நினைவுகளைகூட அவனது மூளைச் சேமிப்பில் இருந்து எடுக்க முடியும் என்கிறார்கள். அத்தகைய சோதனைக்கு நீங்கள் என்னை உட்படுத்த வேண்டும். என்னைக்காப்பாற்றக் கோரி உங்களிடம் கதறினால்தானே தவறு. கடைசியாக என்னை ஒரு முறை விசாரிக்கச் சொல்கிறேன். என் மனக்கிடக்கையில் சொல்லமுடியாமல் கிடக்கும் ஆயிரமாயிரம் எண்ணங்களை அந்த விசாரணை முடிவில் அறிந்து கொள்ளுங்கள். மனிதர்களின் விசாரணையில் எமக்கு சம்மதம் இல்லை. விஞ்ஞானமும் எங்களின் ரணமான மனதோடு சில மணிநேரங்கள் விளையாடிப் பார்க்கட்டும். மரணத்துக்கு முந்தைய ஒப்புதல் வாக்கு மூலமாக அதுவே மாறட்டும். அதைக் கேட்கிற உளத் துணிச்சலும் உண்மையைத் தாங்கிக் கொள்ளும் பக்குவமும் உங்களுக்கு இருந்தால், அந்த இறுதி வார்த்தைகளைக் கேளுங்கள். அதன் பிறகு நீங்கள் என்னைத் தூக்கில் போட்டுக் கொன்றாலும் சரி... வெட்டி வைத்து தின்றாலும் சரி!

ஜூனியர் விகடன்

# இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான வயோதிபர்கள் அநாதரவு– பெரேரா

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான வயோதிபர்கள் அவர்களது பிள்ளைகளினதோ அல்லது உறவினர்களினதோ உதவிகள் இன்றி அநாதரவாக வாழ்வதாக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

அதனை கவனத்தில் கொண்டு இம்முறை வரவு–செலவுத் திட்டத்தில் 80 வயதிற்கு மேலானவர்களுக்கு உதவித்தொகையொன்றை வழங்குவதற்கான யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

பிள்ளைகளின் அன்பு, அரவணைப்பு இல்லாமல் 6 ஆயிரத்து 579 வயோதிபர்கள் 154 வயோதிபர் இல்லங்களில் காலத்தைக் கழித்து வருகின்றனர். பிள்ளைகளின் அரவணைப்பில்லாமல் நாளொன்றுக்கு மூன்று பெற்றோர் வீதம் நடுத்தெருவிற்குக் தள்ளப்படுகின்றனர்.

எவரது அரவணைப்பும் இல்லாமல் நாடு முழுவதும் 2 இலட்சத்திற்கு மேலான வயோதிபர்கள் காலத்தைக் கழிக்கின்றனர். பிள்ளைகளிடமிருந்து பராமரிப்புக் கோரி ஒரு வருடத்திற்கு 300 இற்கு மேலான பெற்றோர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இவ்வனைத்து முறைப்பாடுகளும் வயோதிபர் செயலகத்தின் பராமரிப்பு சபைக்கு முன்வைத்து உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என்றார். (அ–2)

# நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் குறித்த சட்டமூலம் நாடாளுமன்றில்

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறும் வர்த்தகங்கள் மற்றும் உடைமைகளை மீளமைப்பது குறித்து தயாரிக்கப்பட்ட சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்தச் சட்டமூலத்தின் மீதான விவாதம் இன்று இடம்பெறும் என ஆளும் கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நட்டத்தில் இயங்கும் வர்த்தக நடவடிக்கைகளை அரசிற்கு கையேற்கும் சட்டமூலம் பிரதமர் டி.எம். ஜயரட்னவினால் மன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, அந்தச் சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் நிலைப்பாடு சபாநாயகரினால் நேற்று சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்கீழ் குறை வருமானத்தில் இயங்குவதாக கூறப்படும் 37 வர்த்தக நடவடிக்கைகளை அரசிற்கு கையேற்க திட்டமிடப்பட்டுள்ளது.

செவனகல மற்றும் பெலவத்தை சீனி தொழிற்சாலைகளும் இதில் உள்ளடங்குகின்றன.

இந்த நிலையில் நாடாளுமன்றில் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் தொடர்பாக மேலும் பொதுமக்களின் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என சில அரசியல் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. (அ–2)

# மாமனாரின் தாக்குதலில் மருமகன் உயிரிழந்தார்

(கொழும்பு)

மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையிலான குடும்பத் தகராறில் மருமகன் பரிதாபகரமாக பலியான சம்பவம் ஒன்று ரம்புக்கன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யட்டகம பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது ரம்புக்கன் பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய கலகெதரகே தொட் சுமித் தரங்க என்பவர் பலியாகியுள்ளதுடன் பலியானவரின் மாமனாரான சந்தேக நபர் காயமடைந்த நிலையில் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பலியானவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கேகாலை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகின்றார். (அ–2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## சளித் தொல்லை, ஜலதோஷம், இருமல், ஆஸ்துமா போன்றவற்றிற்கு மூலிகை மருத்துவம்

இந்நோய்கள் தோன்றுவதற்கு பல காரணங்கள் இருந்தாலும் மழைக்காலத்திலும் குளிர்காலத்திலும் இந்நோய்களின் தாக்கம் அதிகரித்தே காணப்படுகின்றது. மழைக்காலங்களில் உடலில் எதிர்ப்புச்சக்தி இல்லாதவர்களுக்கும் ஏற்கனவே உடலில் அலர்ஜி (ஒவ்வாமை) உடையவர்களுக்கும் ஆஸ்துமா, இருமல் வர வாய்ப்பதிகம் உண்டு.



தூதுவளை

அதிகம் குளிர்ச்சி தரும் உணவுகளையும் அதிகம் சூட்டைத் தரும் உணவுகளையும் மாறி மாறி சாப்பிடுதல், குளிர் காற்றில் அதிகம் அலைதல், வெயிலில் அதிகமாக அலைதல், பனியில் படுத்துத்தூங்குதல், புகைபிடித்தல் மற்றும் சிலருக்கு சில பூக்களின் மகரந்தத் தூள் வாசனைகள் ஒவ்வாமையை ஏற்படுத்தி இருமலை உண்டாக்கும். குடற்பூச்சிகளுக்கு ஒழுங்காக புழுக்கொல்லி (Vermifuge) சிகிச்சை எடுக்காமல் விடுவதாலும் பலதரப்பட்ட தொழிற்சாலைகளின் புகைகளை சுவாசித்தல் போன்ற காரணிகளுடன் உடலுக்கு ஆகாத உணவுகள், உடலுக்கு ஆகாத செய்கைகள் என்பவற்றினாலும் ஆஸ்துமாநோய் ஏற்படுகின்றது.

### மூலிகை மருத்துவ முறைகள்

❖ சுடுநீரேஅருந்தவேண்டும். சுடவைத்த நீரில் சஞ்சீவி இலைகளை அல்லது நீலகிரி தைலம் 20 துளிகள் இட்டு சுடவைத்தளள தண்ணீரில் கழுத்து வரை குளிக்கலாம்.

❖ கைப்பிடி அளவு முசுமுசுக்கை இலைகள் பறித்து தண்ணீரில் கழுவி அத்துடன் வேர்கொம்பு, மிளகு, சீரகம் ஒவ்வொன்றிலும் சிறிதளவு எடுத்து தூளாக்கி முசுமுசுக்கை இலைகளுடன் பிசரி காலை, மாலை ஒருவாரம் சாப்பிட்டுவர சளி சம்பந்தமான நோய்கள் அகலும்.

❖ இரவு படுக்க முன் சிறிய வெங்காயத்தில் பெரிதாக ஒன்றை எடுத்து மென்று தின்றுவிட்டு ஒரு டம்ளர் சுடுநீர் அருந்தினால் காலையில் சளிகுறையும். இம்மாதிரி அடுத்தடுத்த நாளும் சப்பிட வேண்டும்.

❖ சுக்கு (வேர்க்கொம்பை) உலர்த்தி, தோல் சுரண்டி பொடித்து அரித்து வைத்துக் கொள்ளவும். 2–4 கிராம் பொடியை தேனில் குழைத்து காலை, மாலை 3 நாட்கள் சாப்பிட்டு வர சளி குணமாகும்.

❖ ஒரு மண்சட்டியில் ஒரு டம்ளர் தண்ணீர்விட்டு துணியில் வேடுகட்டி துணிமேல் ஒருபிடி அளவு ஆடாதோடை இலைகளை கிள்ளிப்போட்டு வேகவைத்த பின் இலைகளை கசக்கி பிழிந்த சாறு எடுத்து ஒரு வேளைக்கு 4 தேக்கரண்டி வீதம் காலை, மாலை பருகி வர வேண்டும். இவ்வாறு தினமும் புதிய சாறு எடுத்து 3 நாட்கள் குடித்துவர சளி குணமாகும்.

❖ அதிமதுர வேரின் (தமிழ் மருந்துக் கடைகளில் வாங்கலாம்) சிறு குச்சியை வாயில் போட்டு அடக்கிக் கொண்டு எச்சிலை மட்டும் விழுங்கி வர கடுமையான இருமல் நீங்கும்.

❖ நான்கு மிளகும் ஒரு கைபிடி கருந்துளசி இலைகளும் சேர்த்து 250 மில்லி நீர் விட்டு 1/4 பங்காக வற்றக் காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை, மாலை தொடர்ந்து 5 நாட்கள் வரை அருந்தலாம்.

❖ இஞ்சி சாறு ஒரு மில்லி, தேன் 10 மில்லி, சின்னவெங்காய சாறு 10 மில்லி அளவு கலந்து தினமும் காலையில் வெறும் வயிற்றில் தொடர்ந்து 7 நாட்கள் வரை அருந்த இருமல், ஆஸ்துமா குறையும். குழந்தைகளுக்கு ஒவ்வொன்றும் 5 மில்லியாக குறைத்து அருந்தலாம்.



வேர்க்கொம்பு

❖ பூண்டுச்சாறு 10 மில்லி யுடன் தேன் 10 மில்லி கலந்து தினமும் காலையில் அருந்த இருமல் தணியும்.

❖ முசுமுசுக்கை இலையை இரண்டு கைப்பிடி அளவு எடுத்து இட்லிமாவுடன் சேர்த்து அரைத்து அத்துடன் பூண்டு, இஞ்சி, வெங்காயம் சேர்த்து இட்லி செய்து வாரத்தில் 3 அல்லது 4 நாட்கள் தொடர்ந்து 9 வாரம் மேற்படி பயன்படுத்தலாம்.

❖ கைப்பிடி புதினா இலைகளை ஒரு சட்டியில் போட்டு ஒரு டம்ளர் தண்ணீர் விட்டு மூடி கொதிக்க வைத்து வடி கட்டிய கசாயத்தில் 1/2 எலுமிச்சைப்பழச் சாறும் ஒரு மேசைக்கரண்டி தேனும் கலந்து தொடர்ந்து சில நாட்களுக்கு குடிக்க சளி வெகுவாக குறையும்.

❖ தூதுவளை இலைகளை பிடுங்கி நடு நரம்பில் இருக்கும் முட்களை சீவி சம்பல் செய்து சாப்பிட சளி, இருமல் தணியும்.

❖ தூதுவளை இலைகளை நன்கு கழுவி நடுநரம்பு முட்களை சீவி சிறுக சிறுக அரிந்து, நெய்யில் வதக்கி, வெங்காயம் சேர்த்து தாளித்து 2 மேசைக்கரண்டி அளவு அருந்த ஆஸ்துமா குணமாகும்.



முசுமுசுக்கை

❖ தோல் நீக்கிய உலர்ந்த சிற்றரத்தை 100 கிராம், கற்கண்டு 100 கிராம் தனியாக பொடித்து, அரித்து ஒன்றாக கலந்து வைத்துக் கொண்டு 2-4 கிராம் அளவு வாயிலிட்டு ஒரு டம்ளர் பால் குடிக்க இருமல், சளி நீங்கும்.

❖ குழந்தைகளுக்கு ஏற்படும் இருமல் நிலைமைகளில் வெற்றிலை அல்லது சீந்தில் இலைகளை வாட்டி தாங்கக்கூடிய சூட்டில் மார்பில் ஒற்றடம் கொடுக்கலாம். அல்லது வெற்றிலைச்சாறு 10 மில்லி, இஞ்சிச்சாறு 5 மில்லி சேர்த்து தேனும் 5 மில்லி அளவு கலந்து இருமல், சளி மூக்கடைப்பு நோய்களுக்கு வழங்கலாம்.

திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

❖ முடிதும்பை செடியினை வேருடன் பிடுங்கி வேரை மட்டும் வெட்டி கழுவி சுத்தம் செய்து சிறுக அரிந்து 40 கிராம் அளவு ஒரு மண்சட்டியில் போட்டு 160 மில்லி நீர் சேர்த்து 30 மில்லியாக சுண்டக்காய்ச்சி ஒரு வேளை மட்டும் உட்கொண்டுவர தலைப் பாரம், ஒற்றைத் தலைவலி தீரும்.

❖ தலையில் நீர் கோர்த்தலுக்கு தும்பை மலர்களை சேகரித்து கழுவி நிழலில் உலர்த்தி 100 கிராம் அளவு பூக்களை 700 மில்லி நல்லெண்ணெயில் இட்டுக்காய்ச்சி தைலம் தயாரித்து வாரம்தோறும் முழுகி வர எல்லாவித நீரேற்றத் தலை நோய்களும் தீரும். நீரேறிக்கனத்து தலை தூக்க முடியாத தலைவலியும் மண்டைக்கனமும் நீங்கும்.

(தொடரும்)

# இலங்கை பல்கலையில் கல்வி கற்க நூறு வெளிநாட்டு மாணவர்களே விண்ணப்பம்

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட வெளிநாட்டு மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்க அரசாங்கம் முன்வந்த போதிலும் இதுவரை சுமார் 100 பேர் மாத்திரமே விண்ணப்பித்திருப்பதாக அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு மாணவர்களுக்கான அனுமதியை ஒரு சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மருத்துவ மற்றும் பல் மருத்துவ பாடநெறிகளுக்கு கட்டணமாக வெளிநாட்டு மாணவர்களிடம் 12 ஆயிரம் அமெரிக்க டொலர் அறவிடப்படுகிறது. தாதியியல் போன்ற துணை மருத்துவ பாடநெறிகளுக்கு 10 ஆயிரம் டொலர்களும் சட்டப் பாடநெறிக்கு 5 ஆயிரம் டொலர்களும் முகாமைத்துவ பாடநெறிக்கு 4 ஆயிரம் டொலர்களும் பொறியியல், கட்டட வடிவமைப்பு பாடநெறிக்கு 8 ஆயிரம் அமெரிக்க டொலர்களும் அறவிடப்படுகின்றன.

வெளிநாட்டு மாணவர்களின் பிரதிபலிப்பு குறித்து உயர் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரட்ண தெரிவிக்கையில், இதுவரை சுமார் 100 வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாக தெரிவித்தார்.

பெரும்பாலானவர்கள் மருத்துவம் மற்றும் பொறியியல் பாடநெறிகளுக்கு விண்ணப்பித்திருப்பதாக்வும் அவர் கூறினார்.

இந்தளவு அதிக எண்ணிக்கையில் வெளிநாட்டு மாணவர்களுக்கு இலங்கை அனுமதி வழங்க முன்வந்தமை இதுவே முதல் தடவை என அவர் கூறினார்.

ஆரம்பத்தில் மாணவர் பிரதிபலிப்பு குறைவாக இருக்கலாம். ஆனால், பின்னர் அது முன்னேற்றமடையும் என அவர் தெரிவித்தார். அதேவேளை, இலங்கை தனியாக 100 வெளிநாட்டு மாணவர்களுக்கு பட்டப் பாடநெறிகளுக்கான புலமைப்பரிசில் வழங்குவதாகவும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதர்கங்கள் மூலம் 5 மாணவர்கள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

(அ-2)

# எதிர்க்கட்சி பிரதி தலைவர் நியமிக்கப்பட்டமை தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது

## கரு ஜயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சி பதில் தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டமை தொடர்பில் தாம் அறிந்திருக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவிக்கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க சர்வதேச ஜனநாயக மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வெளிநாடு செல்லவுள்ளார்.

அவர் வெளிநாட்டில் தங்கியிருக்கும் கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சி பதில் தலைவராக செயற்படுவதற்கு எதிர்க்கட்சி பிரதம கொறடா ஜோன் அமரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார் என செய்திகள் வெளியாகின.

நேற்று முதல் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்படும் வகையில் ரணில் விக்ரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது அந்த கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவிடம் ஊடகவியலாளர்கள் இது தொடர்பில் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த கரு ஜயசூரிய, எதிர்க் கட்சி பதில் தலைவரின் நியமனம் குறித்து தாம் பத்திரிகையில் வெளியான செய்திகளில் ஒரு பகுதியை வாசித்ததாகவும் எவர் நியமிக்கப்பட்டாலும் அவருக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார்.

(அ-2)

# இவ்வருடத்திற்குள் முகாம்களை மூடிவிடவே அரசு முனைகின்றது

## அமைச்சர் வீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

இவ்வருடம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கியுள்ள முகாம்கள் அனைத்தையும் மூடிவிடவே அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

தற்போதைய நிலைமையில் இன்னும் 2 ஆயிரம் குடும்பங்களே முகாம்களில் தங்கியுள்ளன என்று மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்தார்.

மீள்குடியேற்றப் பணிகளின் தற்போதைய நிலைமை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், வவுனியா முகாம்களில் 2 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரம் மக்களே இன்னும் தங்கியுள்ளனர். அவர்களை இந்த வருட இறுதிக்குள் மீள்குடியேற்றிவிட முடியும் என்று நம்புகின்றோம்.

அதாவது, இவ்வருடம் மேற்குறித்த திகதிக்குள் அனைத்து மக்களையும் மீள்குடியேற்றிவிட முடியும் எனும் நம்பிக்கையிலேயே நாங்கள் செயற்பட்டு வருகின்றோம்.

மக்களை முடியுமானவரை விரைவில் மீள்குடியேற்ற வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். ஆனால், நிலக்கண்ணி வெடிகளே அதற்கு தடையாகவுள்ளன.

எனினும் நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றமையினால் விரைவில் மீள்குடியேற்றத்தை முடித்து விடலாம் என்று நம்புகின்றோம்.

இதேவேளை, முல்லைத்தீவு கோம்பாவில் பகுதியில் ஆயிரம் வீடுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலைமையில் 200 வீடுகள் அமைக்கப்பட்டுவிட்டன. அங்கு மக்கள் குடியேற்றப்படுவர்.

மேலும் மீள்குடியேற்ற அமைச்சின் செயற்பாடுகள் விரைவில் முடிவுக்கு வந்து விடாது. அடுத்த வருடத்துக்காக 480 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு எம்மால் வழங்க முடியுமான அனைத்து உதவிகளையும் நாங்கள் வழங்குவோம் என்றார்.

(அ-2)

# இந்திய மீனவர்களை நாம் தாக்கவில்லை

## அடித்துக்கூறுகிறார் கோசல வர்ணகுலசூரிய

(கொழும்பு)

தாம் ஒருபோதும் இந்தியக் கடற்றொழிலாளர்களை தாக்கியது கிடையாது. அவ்வாறு தாக்கியதாக பொய்ப் பிரசாரங்களே மேற்கொள்ளப்பட்டு வருகிறது என இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

கடந்த 6 ஆம் திகதி அதிகாலை கச்சதீவுப் பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய கடற்றொழிலாளர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கியதாக வெளியான செய்தி குறித்து கருத்துரைத்த இலங்கைக் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்திருக்கிறார்.

தமது கடற்படையினர் இந்தியக் கடற்றொழிலாளர்களைத் தாக்கவில்லை எனவும் அவ்வாறு தாக்கியதாக பொய்ப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமது படையினர் இந்தியக் கடற்றொழிலாளர்களைத் தாக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் கோசல வர்ணகுலசூரிய குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று கடந்த காலங்களிலும் இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்தபோது அவர்க்ளைக் கைது செய்து சட்டத்தின் அடிப்படையிலேயே நடவடிக்கைகளை முன்னெடுத்தோம்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீனவ கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

(அ-2)

# கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது இந்திய மீனவர்களுக்கு அறிவுறுத்து

(இராமநாதபுரம்)

கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது. எல்லையைத் தாண்டாதீர் என இந்திய கடலோரக் காவல் படையினர் இராமேஸ்வரம் மண்டபம் மீனவர்களுக்கு துண்டுப்பிரசுரம் விநியோகித்து வருகின்றனர்.

இராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் மீனவர்கள் அவ்வப்போது இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு பலியாகி வருகின்றனர். கச்சதீவு அருகே மீன்பிடிப்பதால் தாக்குவதாக இலங்கை கடற்படையினர் கூறி வருகின்றனர். இந்நிலையில் மீனவர்கள் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து இந்திய கடலோரக் காவல் படையினர் துண்டுப் பிரசுரம் விநியோகித்து வருகின்றனர்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வானிலை அறிக்கையை தினமும் கூர்ந்து கவனியுங்கள். லைப் ஜாக்கெட், வாக்கி டாக்கி, விசில், மிதவை கட்டை ஆகியவற்றை உடன் எடுத்துச் செல்ல வேண்டும். எல்லைப் பகுதியைத் தாண்டி மீன் பிடிக்காதீர்கள். ஏனெனில், கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது. இதைக் கண்டறிய எல்லைக்குரிய வரைபடத்தை உடன் வைத்துக் கொள்ளுங்கள்.

ஆபத்துக் காலங்களில் அவசர உதவிக்கு தூத்துக்குடி, சென்னை, மண்டபத்தில் உள் கடலோரக் காவல் படையினரை அழைத்துக் கொள்ளலாம். அவசரத்துக்கு 1554, 107 அல்லது 108 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம். சட்டத்துக்குப் புறம்பாக எல்லை தாண்டி ஆபத்தில் சிக்கினால் இந்த எண்களுக்கு அழைத்தாலும் எங்களால் காப்பாற்ற இயலாது. இவ்வாறு அந்த துண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

(அ-2)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தில் கடமையாற்றும் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலை ஆசிரியர்களுக்கான அனர்த்த பாதுகாப்பு கல்வி (முதலுதவி மற்றும் தீப் பாதுகாப்பு பயிற்சி) செயலமர்வு நாளை வியாழக்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மறுநாள் சனிக்கிழமையும் மாங்குளம் ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே, பெயர்கள் குறிப்பிடப்பட்டு பாடசாலைக்கு பெயர் விபரங்கள் அனுப்பப்பட்ட ஆசிரியர்களை தவறாது செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

*******

துணுக்காய் கல்வி வலய க.பொ.த.(உ/த) ஆசிரியர்களுக்கான செய்யுள் இலக்கண செயலமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை வவுனியா தெற்கு மாகாண முதன்மை நிலை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் க.பொ.த.உயர்தரத்தில் தமிழ் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்கப்பட்டுள்ளது.

*******

துணுக்காய் கல்வி வலய ஆசிரியர்களுக்கான தரவட்ட செயலமர்வு (உள சமூக செயற்பாடு-சகபாடிக்குழுக் கலந்துரையாடல்) எதிர்வரும் 15 ஆம் திகதி பி.ப.ஒரு மணிக்கு மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச்செய[illegible]ர்வில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் பாடசாலையில் காணப்படுகின்ற மாணவர் சம்பந்த[illegible]ன பிரச்சினைகள் (தீர்வுக்காக) இரண்டினை கொண்டு [illegible]ருமாறு துணுக்காய் வலயக் கல்[illegible]ப பணிப்பாளர் த.மேகநாதன் அறிவித்துள்ளார்.

(அ-3-15)

# உலக சமாதானம் வேண்டி ஒரு நிமிட மௌன அஞ்சலி

(கோவை)

உலக சமாதானம் வேண்டி,எதிர்வரும் 11 ஆம் திகதி ஒரு நிமிடம் மௌனமாக இருக்க மனித நேயப் பேரவையின் உலக சமாதான நட்புறவு பூங்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த அமைப்பின் கௌரவத் தலைவராக நோபல் பரிசு பெற்ற நெல்சன் மண்டேலா உள்ளார்.

அமைப்பின் தமிழக பொதுச் செயலர் உமைதாணு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது; பயங்கரவாதம், வேலையில்லாதத் திண்டாட்டம், குழந்தைத் தொழிலாளர் முறை, பெண்களுக்கெதிரான கொடுமைகள், வறுமை, எய்ட்ஸ், போதை மருந்து கடத்தல், வன்முறை, எழுத்தறிவின்மை, சுற்றுப்புறச்சூழல் மாசுபடுத்தல், போர் போன்ற 11 கொடுமைகள் ஒழிய வேண்டும். இதற்காக அனைத்துக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்தவர்கள், பொதுமக்கள் அனைவரும் எதிர்வரும் 11 ஆம் திகதி 11.11 மணிக்கு ஒரு நிமிடம் மௌனம் காப்பதன் மூலம் உலக சமாதான விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். எனவே, இந் நாளில் உலக சமாதானம் காக்க சபதம் ஏற்போம் என அதில் கூறப்பட்டுள்ளது.

(அ-2)

# பின்லேடனைக் கொன்றது போன்று அணுவாயுதங்களை அழிக்க முடியாது

## அமெரிக்காவிற்கு சவால் விடுகின்றார் முஷாரப்

(லண்டன்)

பின்லேடனைக் கொல்ல திடீர் தாக்குதல் நடத்தியது போல பாகிஸ்தான் அணு ஆயுதங்களை அழிக்க அமெரிக்கா உட்பட யாராலும் முடியாது என்று பாகிஸ் தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் கூறியுள்ளார்.

இது குறித்து செய்திச்சனலுக்கு அவர் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் கூறியதாவது,

இராணுவ தளபதியாக இருந்ததை வைத்து சொல்கின்றேன். எனது கணிப்பின் படி பாகிஸ்தானின் அணு ஆயுத நிலைகளை யாரும் நெருங்க முடியாது. ஒசாமா பின்லேடனை கொல்ல நடந்தது போல அமெரிக்கா கூட தாக்குதல் நடத்த முடியாது. அது அவ்வளவு எளிதல்ல.

பாகிஸ்தான் அணு ஆயுதங்கள் நாடு முழுவதிலும் பரவலாகவும் கடும் பாதுகாப்பிலும் இருக்கின்றன. எனவே எந்த நாடும் பாகிஸ்தான் மீது அவ்வளவு எளிதாக தாக்குதல் நடத்தி விட முடியாது. அது மிகவும் சவாலான இலக்காக இருக்கும். அணு ஆயுதங்கள் உள்ள பகுதிகள் நெருங்கக்கூடிய இடங்களல்ல. பாகிஸ்தான் அணு ஆயுதங்கள் அனைத்தும் பழக்கப்பட்டதல்ல.

இந்தியாவுடன் பல முறை மோதல்கள் உருவான சூழ்நிலையில் கூட அணு ஆயுதங்களை பாகிஸ்தான் வீரர்கள் அவற்றை பயன்படுத்த பழகவில்லை. இந்தியாவும் செய்திருக்காது என்று நினைக்கின்றேன். போரை சந்திக்கும் ஏனைய வழிகள் அனைத்திலும் வலிமையுடன் இருக்கும் போது அணு ஆயுத பயிற்சி தேவையில்லை.

ஆப்கானிஸ்தான் இராணுவ வீரர்களுக்கு பாகிஸ்தான் இராணுவம் பயிற்சி அளிப்பதை ஜனாதிபதி ஹமீத் கர்சாய் ஏற்கவில்லை.

அமெரிக்கா, பாகிஸ்தான் இடையே போர் ஏற்பட்டால் பாகிஸ்தானை ஆப்கானிஸ்தான் ஆதரிக்கும் என்று கர்சாய் கூறுவதை நான் நம்பவில்லை என முஷாரப் கூறினார்.

இதற்கிடையே பாகிஸ்தான் அணு ஆயுதங்களை பாதுகாக்க கூடுதலாக 8 ஆயிரம்



பேருக்கு இராணுவம் பயிற்சி அளித்து வருகின்றது. அணு ஆயுதங்களை தீவிரவாதிகள் கைப்பற்றும் ஆபத்து பாகிஸ்தானில் இருப்பதாக அமெரிக்கா தொடர்ந்து அச்சம் தெரிவித்து வருகின்றது. இந்நிலையில் அணு ஆயுத மையங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்க பாகிஸ்தான் நடவடிக்கை எடுத்துள்ளது. (அ-2)

## சிரியாவில் ஏற்பட்ட போராட்டத்தில் இராணுவம் தாக்கி 22 பேர் பலி

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் அசாத் பதவி விலகக் கோரி போராட்டம் நடந்து வருகின்றது. நேற்று முன்தினம் பக்ரீத் பண்டிகை என்பதால் ஹோம்ஸ் நகரில் உள்ள மக்கள் மசூதிகளில் பிரார்த்தனை நடத்திய பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்கள் மீது இராணுவம் ரொக்கெட்டுக்களை வீசி தாக்குதல் நடத்தியது. இதில் 22 பேர் பலியாகினர்.


எங்கள் நகரில் தண்ணீர் விநியோகம். மின் விநியோகம் இல்லை. நாங்கள் போராட்டில் ஈடுபட்டு வருவதால் எங்களை இப்படி எல்லாம் இந்த அரசாங்கம் வஞ்சிக்கின்றது என்று போராட்டக்காரர் உசாமர அல் ஹிம்சி தெரிவித்தார்.

இராணுவ அடக்கு முறைக்கு முடிபுகட்டுவதாகவும் கைதான போராட்டக்காரர்களை விடுவிப்பதாகவும் உறுதி அளித்த ஜனாதிபதி அதன்படி நடக்க தவறிவிட்டதால் அரபு லீக் அமைப்பு அவரச கூட்டத்தை கூட்டி உள்ளது. இந்த கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறும்.

இராணுவத்தின் அடக்குமுறைக்கு இது வரை 4 ஆயிரம் பேர் பலியானதாக சிரிய மனித உரிமைக்குழு தெரிவித்துள்ளது. (அ-2)




# ஜப்பானில் நேற்று நிலநடுக்கம்; மக்கள் வீடுகளை விட்டு ஓட்டம்



ஜப்பானில் கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதி பூகம்பமும் அதை தொடர்ந்து சுனாமியும் ஏற்பட்டது. அதில் 22 ஆயிரம் பேர் பலியாகினர். புகுஷிமா அணு உலையும் பாதிக்கப்பட்டது. அங்கிருந்த அணு உலைகள் வெடித்ததால் கதிர்வீச்சு வெளியானது. அதை குளிர்விக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன் பின்னர் ஜப்பானில் அடிக்கடி நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த நிலையில் நேற்று ஜப்பானின் தெற்கு பகுதியில் உள்ள ஒகினாவா தீவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதனால் பூமி அதிர்ந்தது. வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. எனவே பீதி அடைந்த மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி தெருக்களில் ஓட்டம் பிடித்தனர். சிறிது நேரம் வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.

இதற்கிடையே 6.8 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானதாக அமெரிக்கா மற்றும் ஜப்பான் புவியியல் ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

பூமிக்கு அடியில் 222 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. நிலநடுக்கம் காரணமாக கடலில் வழக்கத்துக்கு மாறாக மிக உயரமான அலைகள் எழும்பின.

எனவே சுனாமி ஏற்படும் என மக்கள் அச்சத்தில் இருந்தனர். ஆனால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை. மேலும் நிலநடுக்கம் காரணமாக ஏற்பட்ட சேத விபரம், உயிர்ச்சேதம் குறித்த தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (அ-2)

# மைக்கல் ஜாக்சனின் மரணத்திற்கு அவரது வைத்தியரின் மருந்தே காரணம்

## நீதிபதிகள் தெரிவிப்பு

(லொஸ் ஏஞ்சல்ஸ்)



பிரபல பொப் பாடகர் மைக்கல் ஜாக்சனின் மரணத்துக்கு அவரது டாக்டர் கான்ராட் முர்ரே தான் காரணம் என லொஸ் ஏஞ்சர்ஸ் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மைக்கல் ஜாக்சன் தூங்குவதற்காக வைத்தியர் கொடுத்த சக்திவாய்ந்த மயக்க மருந்தே அவரது மரணத்துக்கு காரணம் என நீதிபதி தெரிவித்தார்.

வைத்தியருக்கு வழங்கப்படவுள்ள தண்டனை குறித்த விபரம் எதிர்வரும் 29 ஆம் திகதி அறிவிக்கப்படும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கையில் விலங்கு பூட்டப்பட்டு அவர் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார். குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ள வைத்தியர் முர்ரோவுக்கு குறைந்தது 4 வருட சிறை தண்டனை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் அவர் மருத்துவம் செய்வதற்கும் தடை விதிக்கப்படும் என்றும் தெரிய வருகின்றது.

நேற்று முன்தினம் நடந்த நீதிமன்ற விசாரணையை மைக்கல் ஜாக்சன் தாயார் காத்ரின், தங்கை ரெப்பி ஆகியோர் வருந்தினர். அவர்கள் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதை கேட்டதும் மௌனமாக கண்ணீர் விட்டு அழுதனர். மைக்கல் ஜாக்சன் மரணம் குறித்த தீர்ப்பைக் கேட்பதற்காக லொஸ் ஏஞ்சலஸ் நீதிமன்றம் முன்பு அவரது ரசிகர்கள் ஏராளமானோர் காத்திருந்தனர். அவர்கள் இந்தத் தீர்ப்பைக் கேட்டதும் நீதி வென்றது எனக் கோஷமிட்டனர். எனினும் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யவிருப்பதாக முர்ரேவின் வழக்கறிஞர் தெரிவித்தார். (அ-2)

# நைஜீரியாவின் முக்கியமான இடங்களை பயங்கரவாதிகள் தாக்கலாம்-அமெரிக்கா

நைஜீரியா தலைநகர் அபுஜாவில் பிரபல ஹோட்டல்களில் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது. இதையடுத்து நைஜீரியா முழுவதும் பாதுகாப்பு உஷார்படுத்தப்பட்டுள்ளது. நைஜீரியாவில் வடகிழக்கு பகுதியில் உள்ள டமாரு நகரில் கடந்த 5 ஆம் திகதி போகோஹராம் என்ற பயங்கரவாத அமைப்பு நடத்திய வெடி குண்டு தாக்குதல், துப்பாக்கி சூடு சம்பவங்களில் 150 பேர் பலியாயினர்.


இந்நிலையில் பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு நேற்று முன்தினமும் நேற்றும் இந் நாட்டில் விடுமுறை விடப்பட்டுள்ளது. அபுஜாவில் உள்ள அமெரிக்க தூதரகம் அந்நகரிலுள்ள பிரபல ஹோட்டல்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும். அதனால் குறிப்பிட்ட ஹோட்டல்கள் உள்ளிட்ட இடங்களை அமெரிக்க பயணிகள் தவிர்த்து விட வேண்டும் என எச்சரிக்கை வெளியிட்டுள்ளது.

இதனையடுத்து நைஜீரியா முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அபுஜாவில் மட்டும் மசூதிகள், தேவாலயங்கள், ஹோட்டல்கள் என பல இடங்களில் 13 ஆயிரம் பொலிஸார் மற்றும் பயங்கரவாத தடுப்புப் படையினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (அ-2)

# ஈரான் அணுவாயுத தயாரிப்பில் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது

## எகிப்திய பத்திரிகை தகவல்

(கெய்ரோ)



ஈரான் நாடு அணு ஆயுதம் தயாரிப்பதில் இறுதிக் கட்டத்தை எட்டி உள்ளது. இதனால் பாரசீக வளைகுடா பகுதியில் பதற்றம் ஏற்பட்டு உள்ளது. இந்த நிலையில் எங்கள் நாட்டின் மீது கைவைத்தால் தக்க பதிலடி கொடுப்போம் என்று ஈரான் ஜனாதிபதி அகமதி நிஜாத் எச்சரித்து இருக்கின்றார்.

அவர் எகிப்திய பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி அளித்தார் அதில் அவர் கூறியிருப்பதாவது,

ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்காக சர்வதேச ஆதரவை அமெரிக்காவும் இஸ்ரேலும் திரட்டி வருகின்றன. அப்படி ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதற்கு பதிலடி கொடுக்கப்படும். இஸ்ரேலிடம்தான் 300 அணு ஆயுதங்கள் இருக்கின்றன. ஈரான் ஆக்கபூர்வமான பணிகளுக்காக அணுசக்தியை உருவாக்குவதில் ஆர்வம் காட்டி வருகின்றது.

போர்க்களத்தில் இஸ்ரேலையும் மேற்கத்தைய நாடுகளையும் எதிர் கொள்ளும் சக்தி ஈரானுக்கு இருக்கின்றது. ஈரானின் இராணுவ வலிமையைப் பார்த்து அமெரிக்கா பயப்படுகின்றது என அவர் கூறினார். (அ-2)

# பல்கலைக்கழகத்தின் குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை

## சர்வதேச நாணய நிதியம் 30 மில்லியன் வழங்கும் என்கிறார் எஸ்.பி

(கொழும்பு)

எமது நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக் கழகங்களினதும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக சர்வதேச நாணய நிதியத் திடமிருந்து ரூபா 30 பில்லியன் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

இவ்வருட இறுதிக்குள் அனைத்து பல்கலைக்கழகங்களும் கணனிமயப்படுத்தப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வயம்ப பல்கலைக்கழகத்தில் அண்மையில் கட்டடம் ஒன்றை திறந்து வைத்ததோடு விடுதி, கல்விசார் அதிகாரிகளுக்கு வாசஸ்தலம் அமைப்பதற்கான திட்டத்திற்கு அடிக்கல் நாட்டும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தொடர்ந்து உரையாற்றும் போது, வரவு- செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலாக உலக வங்கியாலும் இந்தி யாவினாலும் மற்றும் ஒஸ்ற்றியா, குவைத் நாடுகளின் நிதி உதவிகள் மூலம் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பல வருடங்களுக்கு பின்னர் இவ்வருடம் நேரகாலத்திற்கு பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்க முடிந்தது.

அத்தோடு 6 முதன்மை பல்கலைக்கழங்களை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகளை நாம் மறக்கவில்லை.

இவற்றை தீர்ப்பதற்காக அவை சார்ந்தவர்களுடன் தொடர் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டது.விரைவில் தீர்வுகள் கிடைக்கும். வருகை தரும் விரிவுரையாளர்களுக்கு ஒரு மணித்தியாலக் கொடுப்பனவாக ரூபா 2ஆயிரத்து 500 வழங்கவும் வினாத்தாள் திருத்தும் கொடுப்பனவை நான்கு மடங்காகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

உலகில் உயர் கல்விக்காக குறைந்த நிதியே இங்கு ஒதுக்கப்படுவதாக கூறுகின்றனர் . இதனால் வெளிநாடுகளில் கட்டணம் செலுத்தியே உயர் கல்வியை பெற வேண்டும். இலங்கையில் அனைத்தும் இலவசமாகவே வழங்கப்படுகிறது.

அரசசார்பற்ற பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதற்கென அரசு கொள்கை ரீதியாக



தீர்மானத்தை எடுத்துள்ளது.உலகில் எந்தவொரு நாட்டிலும் அரசாங்காத்தால் மட்டும் உயர்கல்வியை முன்னெடுக்க முடியாது போயுள்ளது.

சீனா,வியட்நாம் போன்ற இடதுசாரி கொள்கையுடைய நாடுகளிலும் அரசசார் பற்ற பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன.

பீஜிங் நகரில் மட்டும் 95 அரச சார்பற்ற பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன. அத்தோடு பல்கலைக்கழகங்களில் கற்கைமொழியாக எதிர்காலத்தில் ஆங்கிலம் கட்டாயமாக்கப்படுமென்றும் அமைச்சர் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கணேச சனசமூக நிலையத்தின் நிலையத் தலைவர் சு.செல்லப்பா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினராக வலிகாமம் தெற்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவயோகம் செல்வவிநாயகர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(அ-2)

# ஒளி விழா

(கரவெட்டி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ஒளிவிழா நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் கிறிஸ்தவ மன்றத் தலைவி ம.இனிதா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை போதகர் த.கிறிஸ்ரிகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (அ-3-24)

# வர்த்தகரிடம் 16 இலட்சம் ரூபா கப்பம் கோரிய மூவர் கைதாகினர்

(கொழும்பு)

ஜப்பானுக்கு தொழில்வாய்ப்புக்காக ஆட்களை அனுப்பும் கிரிபத்கொட பிரதேசத்தை சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம் 16 இலட்சம் ரூபா கப்பம் பெற்ற குற்றச்சாட்டில் கொள்ளையார் குழுவின் மூன்று உறுப்பினர்கள் நேற்று பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜப்பானுக்கு தொழில்வாய்ப்புக்காக அனுப்புவதன் பொருட்டு குறித்த வர்த்தகர் பாலாங்கொட பிரதேசத்தை சேர்ந்தவர்களிடம் பணம் பெற்றுள்ளார்.பணத்தை கொடுத்தவர்கள் மீண்டும் பணத்தை திருப்பிக் கோரியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் தொலைக்காட்சி நடிகர் என்றும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி சந்தேகநபரான நடிகர் தமது பிரதேசத்தை சேர்ந்த மேலும் சிலருடன் சென்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரை கடவத்தை பிரதேசத்தில் வைத்து கடந்த செப்டெம்பர் மாதம் கடத்திச் சென்றுள்ளனர்.

பின்னர் கொள்ளையர்கள் முகவரை ஹிம்புட்டான பிரதேசத்தில் பாழடைந்த வீடு ஒன்றில் மறைத்து வைத்து அவரது குடும்பத்தாரிடம் இருந்து 16 இலட்சம் ரூபாவினை கப்பமாக பெற்றுள்ளார்கள்.

முகவர் விடுக்கப்பட்ட போதிலும் அவரது வாகனம் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

அதனை விடுவிக்க மேலும் 2 இலடசம் கோரப்பட்டுள்ளது.

அந்த வகையில் நேற்று கப்பப் பணத்தை செலுத்த வந்தபோதே கொள்ளையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-2)

# போதைப்பொருள் கடத்தல்காரர்களை கட்டுப்படுத்த விரிவான திட்டம் -இலங்கக்கோன்



(கொழும்பு)

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் சுற்றி வளைப்பு காரணமாக போதைப்பொருள் கடத்தல்காரர்களின் செயற்பாடுகளை கட்டுப் படுத்த முடியாதுள்ளதாக பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களை கண்டு பிடிக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் விரிவான திட்டம் ஒன்றினை செயற்படுத்தியுள்ளதாக பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார்.


இந்த நடவடிக்கைக்கு பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஒத்துழைப்பும் பெறப்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் போதைப்பொருள் சுற்றிவளைப்புக்கான விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ள பலர் கைது செய்யப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வான் மற்றும் கடல் மார்க்கமாக இலங்கைக்குள் போதைப்பொருள் கொண்டு வரப் படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதனிடையே போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான திட்டம் ஒன்றை செயற்படுத்தி உள்ளதாக பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்ககோன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



யாழ். புனித திருமுழுக்கு யோவான் ஆலய இளையோர் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிக்ழ்வு கடந்த 6 ஆம் திகதி ஆலய முன்றலில் நடைபெற்றது. இதில் 25 இற்கும் மேற்பட்டவர்கள் இரத்த தானம் வழங்கினர். இந்த மன்றத்தால் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு வருடந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சுவீகரிப்பு சட்டமூலம் குறித்து மீள்பரிசீலனை செய்யுமாறு பௌத்த மதகுருக்கள் வலியுறுத்தல்

(கொழும்பு)

குறைந்த செயற்பாடுடைய 37 நிறுவனங்களை சுவீகரிக்கும் சர்ச்சைக்குரிய சட்டமூலங்கள் குறித்து மீள்பரிசீலனை செய்யுமாறு மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரர் அதி வண.திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கலதேரர் உட்பட இலங்கையின் முன்னணி பௌத்த மத குருக்கள் கோரியுள்ளனர்.

குறிப்பாக செவனகல சீனித் தொழிற்சாலையை சுவீகரிப்பதற்கான பட்டியலில் இருந்து நீக்குமாறுகோரி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தான் கடிதம் எழுதியிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

வெற்றிகரமான வர்த்தக நிறுவனங்களை ஸ்தாபித்த தொழில்முனைவோரை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், அரசாங்கம் இச்சட்டமூலத்தை மீள்பரிசீலனை செய்யும் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பொருளாதார இலக்கை அடைவதற்கு தனியார் துறையின்ஆதரவு மிக முக்கியமானது என்பதை ஜனாதிபதிக்கு நினைவுபடுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை இச்சட்டமூலத்தை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்யவேண்டும் அல்லது அதில் திருத்தங்களைச் செய்ய வேண்டும் என வண. மாதுலுவாவே சோபிததேரர் உட்பட பல முன்னணி பௌத்த பிக்குகள் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் வலியுறுத்தினர்.

இச்சட்டமூலம் குறித்து வர்த்தகர்கள் உட்பட அனைத்து பிரஜைகளும் கருத்துத் தெரிவிப்பதற்கு உரிய அவகாசம் வழங்கப்பட வேண்டும் என அவர் கூறினார். (அ-2)

சரியாகத் திட்டமிட்டால் முதல் முயற்சியிலேயே பாதித் தூரத்தை நிச்சயம் அடைந்து விடலாம்.

– என்.ஹில்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தமிழ் அரசியல் தலைமைகளின் அடுத்த வியூகம் என்ன?

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமாயின் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு தேர்தல் பிரசாரம் செய்யப்பட்டதற்கு அமைவாக தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்தனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எதிர்பார்த்திராத வெற்றியைப் பெறும் அளவிற்கு தமிழ் மக்கள் உத்வேகத்தோடு வாக்களித்தனர்.

கடந்த காலத் தேர்தல்களை விட, உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிப்பு வீதம் ஐம்பது வீதத்தை எட்டிப்பிடித்தது எனில் அது மகத்தான சாதனை என்லாம். இச் சாதனையின் பின்னணியில் இலங்கை மீதான போர்க் குற்ற விசாரணை இருந்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலின் போது அரசதரப்பு வெற்றி பெற்றால் சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தோடு நடைபெறவுள்ள போர்க் குற்ற விசாரணை தடைப்பட்டுப் போய்விடும்.

அதனைச் செய்வதற்காகவே ஜனாதிபதி தனது பரிவாரங்களுடன் யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டுள்ளார் என மக்கள் கருதினர்.

இந்நிலையில் தமிழ் மக்கள் விறுவிறுப்போடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்தனர். முடிவு; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசும் எதிர்பார்க்காத வகையில் அமைந்திருந்தது.

இத் தேர்தல் முடிவு, தமிழ் மக்கள் அரசியலில் மிகவும் தெளிவாக இருக்கின்றனர் என்பதை வெளிப்படுத்தியது.

இதை மீள நினைவுபடுத்த வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுள்ளது. அதாவது தமிழ் மக்களிடம் இருக்கக்கூடிய அரசியல் தெளிவு மற்றும் அரசு மீதான போர்க் குற்ற விசாரணை தேவையென்ற இறுக்கமான வலியுறுத்தல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் உண்டா?

அல்லது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எந்த விதமான திட்டமிடலும் இன்றி எழுந்தமானமாகச் செயற்படுகின்றதா? என்ற கேள்வி தற்போது ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமெரிக்கப் பயணம் வெற்றி தரவில்லை. முன்னதாக பொதுநலவாய நாடுகளின் கூட்டமும் நாம் எதிர்பார்த்த வண்ணம் அமையவில்லை.

அப்படியானால், இனப்பிரச்சினை நோக்கிய தீர்வுக்கான புதிய வியூகம் அமைக்கப்படுமா? அல்லது வடக்கு மாகாண சபைத் தேர்தலில் எங்களை வெற்றி பெறச் செய்தால் மட்டுமே இனப்பிரச்சினைக்கான தீர்வை காணமுடியும் என்ற பிரசாரம் தொடருமா?

இதற்கான விடை அளிக்கப்பட வேண்டும் என்ற கட்டாயம் எவருக்கும் இல்லையாயினும் தொடர்ந்தும் ஏமாற்றுதலை நீடித்துச் செல்ல முடியாது என்பது நம் முடிவு.

## சிறைச்சாலைகளில் சித்திரவதை

# ஆதாரங்களை முன்வைத்து சனல் 4-ல் வீடியோ வெளியீடு

(லண்டன்)

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிடுக்கு வந்து இரு வருடங்களுக்கு மேலாகியுள்ள நிலையிலும், அங்குள்ள சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் இன்னும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதாக பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கைச் சிறையில் இருந்து தப்பி பின்னர் பிரித்தானியாவில் புகலிடம் கோரிய இரு தமிழர்களின் செவ்விகளையும் சனல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பியுள்ளது.

படைத்தரப்பினரால் தமிழ் இளைஞர்கள் கட்டிவைக்கப்பட்டு வயராலும் மற்றும் கம்பிகளாலும் தாக்கப்படுவதாக இக்காணொளியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் வீடியோவில் விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்தவர் என்ற காரணத்தினால் படைத்தரப்பினரால் கடந்த யூன் மாதம் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவரின் செவ்வியும் இடம்பெற்றுள்ளது.

படைத்தரப்பினர் இரும்புக் கம்பிகளால் தன்னைத் தாக்கியதாகவும், அதன்போது ஏற்பட்ட வலியைத் தாங்க முடியாது இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளதுடன், இக்காயங்களுக்காக தனக்குசிகிச்சைவழங்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், படைத்தரப்பினர் தன்னை தலை கீழாகக் கட்டி தனது தலையை பெற்றோல் ஊற்றப்பட்ட பொலித்தீன் பையால் இறுகக் கட்டி தண்ணீர் தொட்டி ஒன்றில் தன் தலையை மூழ்கப் பண்ணியதாகவும், அப்போது தான் மூச்சுத் திணறி கிட்டத்தட்ட மரணிக்கும் நிலைக்குச் சென்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதே போன்று , தான் கடுமையான சித்திரவதைகளுக்கு உட்பட்டதாகக் குறிப்பிட்டுள்ள மற்றுமொரு தமிழ் இளைஞர், தன்னைக் தலைகீழாகக் கட்டி வைத்து அடித்தபோது தாகம் எடுத்திருந்த நிலையில் தண்ணீர் கேட்ட போது சிறுநீரைப் பருகத் தந்ததாகவும் கூறியுள்ளார். இதனை விட இலங்கையில் இடம்பெற்ற போரின்போது தான் இறந்திருக்கலாம் என எண்ணியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடாக இலங்கை இருக்கின்றபோதிலும், அது அவ்வமைப்பின் சாசனங்களை மீறி மனித குலத்துக்கு எதி ரான பாரிய சித்திரவதைகளை மேற் கொண்டு வருவதாக குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

அதேவேளை பிரித்தானியாவில் உள்ள சுமார் 35 தமிழ் இளைஞர்களை சனல்4 தொலைக்காட்சி இதுவரை தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து இவ்விவகாரம் தொடர்பில் வாக்கு மூலங்களைப் பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இவர்களில் பலர் ஒரே வகையான சித்திரவதை தமக்கு இழைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளனர். ஐ.நாவிடம் சித்திரவதைக்கு எதிரான சர்வதேச மனிதவுரிமை அமைப்புகள் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளது. (எ-5)

# தமிழர்கள் கலாசாரத்தை பேணுவதில் பெரும் இடர்பாடுகளை சந்திக்கின்றனர்

## வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் கலாசாரம் பண்பாட்டை பேணிக்கொள்வது பெரும் பிரச்சினையாக உள்ளதாக வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

மரபு வழி ஆற்றுகைக் கழக ஆரம்ப விழாவும் இந்து நங்கை வெளியீடும் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்த கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு இவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைகளில் இவ்வாறன கலை, கலாசாரா நிகழ்வுகளை நடத்துவதன் மூலம் மாணவர்கள் பல துறைகளிலும் தகைமையுடையவர்களாக தம்மை வளர்த்து கொள்ளக் கூடியதாக அமையும்.

இன்றைய காலகட்டத்தில் உலகில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டவாறு உள்ளது.

குறிப்பாக தமிழர்கள் தமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் பேணிபாது காக்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

இது தவிர மாணவர்கள் தமது கல்வியை சிறப்பான முறையில் பெற்றுக் கொள்வதற்கான வளங்களும் வழிகாட்டல்களுக்கான ஆளணித்துவமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் கழகங்கள், மன்றங்களை உருவாக்கி இவ்வாறன கலை கலாசாரத்தை பிரதிபலிக்கும் நிகழ்வுகளை நடத்த வேண்டும். அதன் மூலம் மாணவர்களின் ஆளுமை மேலும் விருத்தியடையும். ஒழுக்கம் என்பது சமூகத்தில் முக்கியமானது ஆசிரியர்கள் எதிர்கால சந்ததியினருக்கு நல்ல வழி காட்டிகளாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-6)

# யாழ்.கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு பெருமை தேடிக்கொடுத்தோருக்கு கௌரவிப்பு

யாழ்.கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பரிசளிப்பு விழா நேற்றைய தினம் கல்லூரியின் 125ஆவது ஆண்டு ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மேற்படி பாடசாலைக்கு பெருமை தேடித்தந்த மாணவர்களை பாராட்டும் நிகழ்வும் இடம்பெற்றது.

இதற்கமைய இப்பாடசாலையில் இருந்து யாழ்.பல்கலைக்கழக 2010/2011 ஆம்ஆண்டுக்கான தெரிவினை த.தனுசன், இ.கோபிக்கண்ணா, சு.சுகிர்தரூபன், க.ஸ்ரீரூபன், ச.வனுராகினி, த.கிரீந்திரன், இ.பிருந்தா, ஸ்ரீ.பத்மகரன், தே.சோபானா ஆகிய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் கல்வியியற் கல்லூரி 2010/2011 ஆம் ஆண்டுக்கான அனுமதியை நி.தனஞ்செனி, வை.ரம்யா, ந.பாசினி ஆகியோரை பாராட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

விளையாட்டு நிகழ்வில் மாகாண மட்டத்தில் 13 வயது பிரிவினரிடையே நடைபெற்ற 100 மீ, 200மீ, 400மீ ஆகிய போட்டிகளில் சம்பியனாக நா.சுமன், மாவட்ட மட்ட போட்டிகளில் 19 வயது பிரிவினரிடையே நடைபெற்ற 200 மீ போட்டியில் 2 ஆம் இடத்தை ஜெ.மயூரன், 21 வயது பிரிவினரிடையே நடைபெற்ற 200 மீ போட்டியில் 3-ம் இடத்தை தே.சுஜீவனும் பெற்று பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன் 19 வயது பெண்கள் பிரிவினரிடையே நடைபெற்ற கரப்பந்து போட்டியிலும் 3ஆம் இடத்தை பெற்றமையையிட்டு பாராட்டும் நிகழ்வு இடம் பெற்றது.

மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற கவிதை போட்டியில் முதலாம் இடத்தை மு.குயிலரசியும்; தேசிய மட்டத்தில் நடைபெற்ற கவிதை ஆக்கப்போட்டியில் முதலாம் இடத்தை ஜெயவானுஜனும் தேசிய மட்டத்தில் நடைபெற்ற கவிதை ஆக்கத்தில் 3ஆம் இடத்தை செ.சாருண்யாவும் விசேட பரிசில்களை பெற்றமையையிட்டு பாராட்டப்பட்டனர். அத்துடன்பா.அருணன், பா.அஜந்தன், ப.வேணுஜன் ஆகியோர் பிரதம சாரணர் ஆணையாளர் விருதைப் பெற்று பாராட்டுகளை பெற்றனர். (அ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## அன்புதான் வாழ்க்கை



நாம் மற்றவர்களுக்கு செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவி புரிவதும் உலகிற்கு நன்மை செய்வதும் தான்.


அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றை தவிர வேறு எதுவும் நமக்குத் தேவையில்லை. வளர்ச்சி அடைவதும் அன்பு செலுத்துவதுமே வாழ்க்கை. அதுவே வாழ்க்கை நியதி.

மேலைநாட்டு விஞ்ஞானத்தோடு இணைந்த வேதாந்தமும் பிரமச்சரியமும் வாழ்க்கையின் அடிப்படை இலட்சியங்களாக நமக்குத் தேவைப் படுகின்றன.

கல்வி என்பது மூளைக்குள் பல விடயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல. அப்படித் திணிக்கப்படும் அந்த விடயங்கள் வாழ்நாள் முழுவதும் ஜீரணம் ஆகாமல் தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கும்.

அனைத்து தேவைகளையும் துன்பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கின்றது.

# எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு ஆர்டர் ஒஃப் பிரண்ட்ஷிப் விருது



எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு ரஷ்ய நாட்டின் மிக உரிய நட்புறவு விருதான ஆர்டர் ஒஃப் ஃபிரன்ஷிப் வழங்கப்பட்டது.

இந்த விருதைப்பெறும் முதல் இந்திய எழுத்தாளர் ஜெயகாந்தன் ஆவார். இதற்கு முன்னராக பிரபல திரைப்பட இயக்குநர் மிர்ணாள் சென்னுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. ரஷ்ய ஜனாதிபதி டிமித்ரி மெத்வதேவ் பிறப்பித்த உத்தரவின் நகலை இந்தியாவுக்கான ரஷ்ய துணைத்தூதர் நிகோலாய் ஏ லிஸ்தபதோவ் ஜெயகாந்தனிடம் சென்னையில் நேற்று முன்தினம் வழங்கினார்.

இந்த நட்புறவு விருது வழங்கும் விழா சென்னையில் பிரமாண்டமாக நடைபெற்றது. இந்தியாவுக்கான ரஷ்ய தூதர், ரஷ்ய ஜனாதிபதியின் தூதுக்குழுவினர் விழாவில் பங்கேற்றனர்.

இந்தோனேசியா-ரஷ்ய கலாசார மற்றும் நட்புறவு மையத்தின் தலைவராக ஜெயகாந்தன் உள்ளார். இவர் தனது எழுத்துப்பணியோடு இந்திய- ரஷ்ய நாடுகளிடையே உறவை வளர்க்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுவருவதால் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

அவரது நாவலைத்தழுவி எடுக்கப்பட்ட உன்னைப்போல் ஒருவன்(1965) திரைப்படம் ரஷ்ய ஜனாதிபதி விருதைப் பெற்றது.

இந்தோனேசிய - ரஷ்ய கலாசார மற்றும் நட்புறவு மையத்தை அவர் 2006 இல் ஆரம்பித்தார். (அ-2)

# மும்பை- வெனிஸ் துறைமுக ஒப்பந்தத்தால் இருநாடுகளிடையே புரிந்துணர்வு ஏற்படும்

## ஜி.கே.வாசன் தெரிவிப்பு

(சென்னை)

மும்பை வெனிஸ் துறைமுகங்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் இந்தியா- இத்தாலி நாடுகளுக்கிடையிலான உறவு மேம்படும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துதுறை அமைச்சர் ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

மும்பை ஜவஹர்லால் நேரு துறைமுகத்திற்கும் இத்தாலியின் வெனிஸ் துறைமுகத்துக்கும் இடையே சென்னையில் நேற்று முன்தினம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டது.

இத் துறைமுகத்தின் தலைவர் எல். ராதாகிருஷ்ணன், வெனிஸ் துறைமுக ஆணையத்தின் கப்டன் அன்டோறியோ ரெவிடின் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் இந்தியா- இத்தாலி நாடுகளுக்கிடையே வணிக உறவுகள் மேம்படும்.

இதனால் இருநாட்டு பொருளாதாரம் மேலும் வளர்ச்சியடையும். மேலும் இருநாட்டு துறைமுகங்களின் செயற்பாடுகள், நிர்வாகம், கட்டுமானங்கள் மற்றும் மனித வளங்கள் மேம்படும். வெனிஸ் துறைமுகம் ஐரோப்பா கண்டத்தின் துறைமுகம் என்பதால் இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு துறைமுகங்களும் உலகின் முக்கிய துறைமுகங்களாக உருவெடுக்கும் என்றார். (அ-2)

# நியூ சவுத் வேல்ஸ் மாகாண முதல்வர் இந்தியா விஜயம்

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவின் நியூசவுத்வேல்ஸ் மாகாண முதல்வர் பேரி ஓபேரல் எதிர்வரும் 12 இல் இந்தியாவிற்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். அவருடன் தொழில் மற்றும் கல்வித்துறைகள் சார்ந்த பிரதிநிதிகள் குழு ஒன்றும் வருகிறது.

இவர்கள் மும்பை டில்லி பெங்களூர் நகரங்களுக்குச் செல்கிறது. பேரல் தன் பயணத்தில் இரு தரப்பு நிதிச் சேவைகள், உட்கட்டமைப்பு, தகவல்தொழிநுட்பம் மற்றும் கல்வி ஆகியவை குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அவர் கூறுகையில் மாகாணத்தின் பயிற்சி மற்றும் மேல்படிப்பு துறை ஆஸி, மத்திய அரசின் மாணவர் விசாக்கொள்கைகளால் தேவையில்லாமல் பாதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஆஸி, மத்திய அரசிடம் பேசியுள்ளோம். கெடுபிடியான விதிகளை அவர்கள் தளர்த்த வேண்டும் என்றார். (அ-2)



தமிழக முதல்வர் ஜெயலலிதாவை இந்து சமய அறநிலையம் ,சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட மு.பரஞ்சோதி சந்தித்து வாழ்த்து தெரிவிப்பதை படத்தில் காணலாம்.

# சொத்துக்குவிப்பு வழக்கிற்கு ஆஜராகாத ஜெயலலிதா

(சென்னை)

முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில் அவர் நேற்று பெங்களூர் நீதிமன்றில் ஆஜராகவில்லை. இந்நிலையில் ஜெயலலிதா சார்பில் பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரனை திகதியை தள்ளி வைக்கக்கோரி நேற்று மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

மேலும் மனுவில் எதிர்வரும் 22ஆம் திகதி ஜெயலலிதா பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜராவதாகவும் தேவைப்பட்டால் மறுநாள் ஜெயலலிதா ஆஜராவார் எனக் கூறப்பட்டிருந்தது. இதனையடுத்து மனுவை ஏற்றுக் கொண்ட சிறப்பு நீதிமன்றம் எதிர்வரும் 22ஆம் திகதி ஜெயலலிதாவை மீண்டும் ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டது.

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோர் நேற்று நீதிமன்றில் ஆஜரானார்கள்.

(அ-2)

## பாரதச் செய்திகள்



# தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதற்கு கடிதம் மட்டும் எழுதினால் போதுமா?

## விஜயகாந்த் கேள்வி

(சென்னை)



அ.தி.மு.க. வுடன் தே.மு.தி. கவை சேர்த்ததும் பத்திரிகைகள் தான் பிரித்ததும் பத்திரிகைகள் தான் என்று குர்பானி வழங்கும் நிகழ்ச்சியில் அக்கட்சி தலைவர் விஜயகாந்த் உரையாற்றியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு கொடுப்பதே பக்ரீத் பண்டிகையாகும். கடந்த 3 வருடங்களாக பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு குர்பானி வழங்கி வருகிறேன்.

இப்போது மழை வெள்ளத்தால் தமிழக மக்கள் அவதிப்படுகின்றனர். அ.தி.மு.க. ,தி.மு.க. இரண்டு கட்சிகளும் ஒருவர் மீது ஒருவர் குறைகூறி வருகின்றன. அவர்கள் ஆளும்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்திருந்தால் ஏரி, குளங்கள் உடையாது.

அண்ணாநூலகத்தை மாற்ற இருக்கிறார்கள். அண்ணா நூலகம் அருகே அண்ணா பல்கலைக்கழகம் இருக்கிறது. அந்த நூலகத்துக்கு சென்று ஏராளமான மாணவர்கள் படித்து பயன் அடைகின்றனர். அக்கட்டடத்தைவிட வசதி குறைந்த டி.பி.ஐ. வளாகத்தில் உள்ள பழைய கட்டடத்துக்கு நூலகத்தை மாற்ற காரணம் என்ன?

கடந்த உள்ளாட்சிதேர்தலில் மிக்சி, கிரைண்டர், ஆடு, மாடு கிடைக்க வேண்டுமென்றால் அ.தி.மு.க .வுக்கு வாக்களியுங்கள் என்று மக்களை பயமுறுத்தினார். கலைஞரை ஆட்சியில் இருந்து நீக்கவே அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்தேன்.

இப்போதும் எதிர்க்கட்சியாக அல்ல தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுகிறார்கள். இதற்கு முன் ஆண்ட அரசும் இப்போது ஆளும் அரசும் மத்திய அரசுக்கு கடிதம் மட்டுமே எழுதுகின்றன. (அ-2)

## தனித்தெலுங்கானா அமைக்கக்கோரி

# மாணவர் ஒருவர் ஓடும் புகையிரதத்தின் முன் பாய்ந்து தற்கொலை செய்தார்

தெலுங்கானா தனி மாநிலம் அமைக்கக் கோரி ஐதராபாத் உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் கற்று வந்த மாணவர் ஒருவர் ஓடும் புகையிரதம் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் 2 ஆம் ஆண்டு எம்.ஏ.படித்து வந்தவர் நச்சினி நாகேஷ். 30 வயதான இவர் தெலுங்கானா தனிமாநில போராட்டத்தில் தீவிரமாக பங்கெடுத்து வந்தார்.

இந்நிலையில் அடிலாபாத்தில் உள்ள தனது சொந்த ஊரான சிந்தகுடாவில் ஓடும் புகையிரதம் முன்பு பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். தெலுங்கானா மாநிலம் அமைய வேண்டும் என்று கோஷமிட்டபடி அவர் ரயில் முன் பாய்ந்ததாக கூறப்படுகின்றது.

மேலும் அவர் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கும் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தார். அதில் தனித் தெலுங்கானா மாநிலத்தை அமைத்து இப்பகுதி இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு முடிவு கட்டுமாறு அவர் கோரியிருந்தார்.

நாகேஷின் பெற்றோரும் தெலுங்கானா போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.


நாகேஷின் தற்கொலையால் உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் பெரும் சோகம் கவ்வியுள்ளது. மாணவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். ஊர்வலம் செல்ல அவர்கள் முயன்ற போது பொலிஸார் தடுத்தனர் இதனையடுத்து பொலிஸார் மீது அவர்கள் கல்வீசித்தாக்கினர்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து ஐதராபாத் மற்றும் தெலுங்கானா பகுதிகளில் பாதுகாப்பும் கண்காணிப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## அஸ்வினின் 'கரம்போல்' சுழலில்

# மேற்கிந்தியத் தீவுகள் சரிந்தது

# வெற்றி முனைப்பில் இந்தியா



அறிமுக வீரர் அஷ்வினின் சுழலில் சரணடைந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 180 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன்மூலம் 276 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் இந்திய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களை எடுத்தது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 6 ஆம் திகதி டில்லியில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 304 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களைமிழந்து 209 ஓட்டங்களை எடுத்தது.

இதன்மூலம் முதலாவது இன்னிங்ஸில் 95 ஓட்டங்களால் முன்னிலை பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்டுக்களையிழந்து 21 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி அஷ்வினின் கரம்போல் சுழலில் சிக்கி 2-வது இன்னிங்ஸில் சகல விக் கெட்டுக்களையும் இழந்து 180 ஓட்டங் களை எடுத்தது.

இதில் சிவ் நாராயணன் சந்தர்போல் 47 ஓட்டங்களையும் அணித்தலைவர் சமி 37 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 42 ஓட்டங்களையும் எட்வேர்ட்ஸ் 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாடிய ரவிச்சந்திரன் அஷ்வின் 21.3 ஓவர்கள் பந்துவீசி 47 ஓட்டங்களை கொடுத்து 6 விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்தினார். அத்துடன் யாதவ் 2 விக்கெட்டுக்களையும் ஒஜா, இஷாந்த் சர்மா ஆகியோர் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

தொடர்ந்து 276 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்களையிழந்து 152 ஓட்டங்களை எடுத்தது. இதில் வீரேந்திர சேவாக் 55 ஓட்டங்களையும் காம்பீர் 22 ஓட்டங்களையும் எடுத்ததுடன் சச்சின் டெண்டுல்கர் 33 ஓட்டங்களுடனும் ராகுல் டிராவிட் 30 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர்.



டெஸ்ட் அரங்கில் 15 ஆயிரம் ஓட்டங்களை கடந்த மகிழ்ச்சியில் சச்சின்

பந்துவீச்சில் சாமுவேல்ஸ், சமி தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப் போட்டியின் 4-ம் நாள் ஆட்டம் இன்றாகும். இந்நிலையில் இந்திய அணி 2-வது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக் கள் கைவசமுள்ள நிலையில் 124 ஓட்டங்களை எடுக்க வேண்டும்.

**சச்சின் 15 ஆயிரம்**

இப்போட்டியில் 3-ம் நாளான நேற்று இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் 28 ஓட்டங்களைச் சேர்த்த போது டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் 15 ஆயிரம் ஓட்டங்களை எட்டினார்.

இதன் மூலம் டெஸ்ட் அரங்கில் 15 ஆயிரம் ஓட்டங்களை குவித்த முதல் வீரர் என்ற சாதனையை அவர் படைத்தார்.

இதுவரை 182 டெஸ்ட் போட்டிகளில் 300 இன்னிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடியுள்ள சச்சின் டெண்டுல்கர்; 51சதங்கள் உட் பட 15ஆயிரத்து 5 ஓட்டங்களை குவித்துள்ளார். இவருக்கு அடுத்த இடத்தில் இந்திய அணி வீரர் ராகுல் டிராவிட் 158 டெஸ்ட் போட்டியில் 12 ஆயிரத்து 859 ஓட்டங்களை எடுத்துள்ளார்.



சுவிட்சர்லாந்தின் பசல் நகரில் நடந்த சுவிஸ் இன்டோர்ஸ் ஓபன் டென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற மகிழ்ச்சியை, இளம் ரசிகர்களுடன் பகிர்ந்து கொண்ட சுவிட்சர்லாந்து நட்சத்திர வீரர் ரோஜர் பெடரர்.

## முதல் டெஸ்ட் இன்று ஆரம்பம்

தென்னாபிரிக்கா-அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையே 2 டெஸ்ட் போட்டி கொண்ட தொடர் நடைபெறவுள்ளது. இதன் முதல் ஆட்டம் கேப்டவுனில்இன்று இலங்கை நேரப்படி பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகிறது. கேப்டவுன் மைதானம் சுழற் பந்துக்கு சாதகமாக அமைக்கப்பட் டுள்ளது. ஆஸி வீரர் பொன்டிங் கடந்த 2 ஆண்டுகளாக டெஸ்ட் போட்டியில் சதம் அடிக்க வில் லை. இளம் வீரர்கள் தற்போது ஜொலித்து வருவதால் இந்த தொடரில் பொன்டிங் ஓட்டம் குவிக்க வேண்டிய கட்டாயத்தில் களமிறங்குகிறார்.

## இலங்கை அணியில் பெரேரா

இலங்கை-பாகிஸ்தான் அணிகள் இடையே 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடர் நடைபெறவுள்ளது. முதல் ஆட்டம் 11-ம் திகதி நடக்கிறது. இந்நிலையில் காயமடைந்த வேகப்பந்து வீச்சாளர் தம்மிக பிரசாத் நீக்கப் பட்டுள்ளார். அவருக்கு பதிலாக சகல துறை வீரர் திசரா பெரேரா சேர்க்கப்பட்டுள்ளார்.

## ரொனால்டோ ஹட்ரிக் கோல்




ரியல் மட்ரிட் - ஓசானா கால்பந்து அணிகள் லாலிகா நகரில் மோதின. இதில் ரியல் மட்ரிட் அணி 7:1 என்ற போல் கணக்கில் வெற்றி பெற்றது. நட்சத்திர வீரர் கிறிஸ்டியானா ரொனால்டோ ஹாட்ரிக் கோல் அடித்தார்.

## மியன்மார் கால்பந்து அணியின் தடை நீக்கியது பிபா

2014ம் ஆண்டு ஆசிய தகுதி சுற்று கால்பந்து போட்டியில் மியன்மார்- ஓமன் அணிகள் இடையிலான ஆட்டத்தின் போது ரசிகர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர்.

இந்த சம்பவம் காரணமாக மியன்மார் அணிக்கு 2018ம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்து தகுதி போட்டியில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மியன்மாரின் கோரிக்கையை ஏற்று அந்த நாடு உலக கிண்ண தகுதி போட்டியில் பங்கேற்க உலக கால்பந்து சம்மேளனம் (பிபா) விதித்த தடையை நீக்கி இருக்கிறது.

ஆனால் அந்த நாட்டு கால்பந்து சம்மேளனத்துக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தகுதி சுற்று போட்டியை உள்ளூரில் நடத்தாமல் நடுநிலையான இடத்தில் நடத்தவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## நாம் குற்றமே...

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பட்ரிசியாவினால் இராஜாங்கத் திணைக் களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்தக் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் விமர்சனங்கள் குறித்து பசில் ராஜபக்ஷ அதிருப்தி வெளியிட்டதாக புட்டீனாஸ் குறிப்பிட்டுள்ளார். வார்த்தைப் பிரயோகங்களின் போது அமெரிக்கா மிகவும் நிதானமாக செயற்பட வேண்டியது அவசியம் என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இதன்போது பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாவது,

இலங்கை விவகாரங்களை அமெரிக்கா கண்காணித்து வருவதாகவும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. சிறிய நாடு என்ற போதிலும் இலங்கை பெருமைக்குரிய நாடு. இலங்கையின் இறையாண்மையை பாதிக்கும் வகைகளில் செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது.

அமெரிக்கா இலங்கையை நட்பு ரீதியில் அணுக வேண்டும். விமர்சனங்களை வெளியிடுவதனை தவிர்த்து ஆலோசனை வழங்க முடியும்.

நாம் சுத்தமானவர்கள் என்று நான் கூறவில்லை. இந்தியாவுடன் சிறந்த உறவுகள் பேணப்பட்டு வருவதாகவும் இந்தியா இலங்கை விவகாரங்களை கண்காணிக்கவில்லை.

ஊடகங்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படவில்லை. பயங்கரவாத குற்றச்சாட்டுக்களின் பேரில் வர்த்தகர்கள் உள்ளிட்ட பல முக்கி யஸ்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இடம்பெயர் மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு முகாம்களுக்கு ஊடகங்களை அனுமதிக்கவில்லை என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (ச-பா)

## மின்சார சபையின் அறிவிப்பு

இலங்கை மின்சார சபையினால் முன்னர் அறிவிக்கப்பட்டதற்கு அமைவாக இன்றைய மின்வெட்டால் சில பகுதிகளில் மின் தடைப்படாது.

இதன் பிரகாரம் இன்று புன்னாலைக் கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய பிரதேசங்களில் மின் தடை அமுல்படுத்தப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-11)

## புலிகளிடம் மீட்...

தங்கத்தின் அளவு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த பிரதியமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தன, தற்போது 17.34 மெற்றிக் தொன் தங்கம் இருப்பதாகக் கூறினார்.

அனுரகுமார எம்.பி புலிகளிடம் இருந்து மீட்கப்பட்ட தங்கம் தொடர்பில் கேள்வியெழுப்பிய போதே பிரதியமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், 2010 -ம் ஆண்டு யூன் மாதம் வரை மத்திய வங்கிக்கு சொந்தமாக 17.34 மெற்றிக் தொன் தங்கம் இருக்கின்றது.

2010-ம் ஆண்டு யூன் முதல் 2011 யூன் வரை 51 மெற்றிக்தொன் தங்கம் கொள்வனவு செய்யப்பட்ட அதேவேளை 52.39 மெற்றிக் தொன் தங்கம் விற்பனை செய்யப்பட்டது என தெரிவித்தார். (பா)

## தப்பியோடிய படை...

சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு தமிழீழ விடுதலைப்புலிகளை இராணுவம் தோற்கடித்ததன் பின்னர், படையில் இருந்தவர்களை இராணுவம் கலைத்திருக்கவில்லை.

தேசத்தின் மீது அச்சுறுத்தல்கள் நீடிக்க வே செய்வதாகக் கூறி, இலங்கைப் படை மேலும் பெரிதுபடுத்தப்பட்டிருந்தது.

இரண்டு லட்சம் பேருக்கும் அதிகமானோர் புதிதாக இராணுவத்தில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

ஆனாலும் இராணுவத்தில் காணப்படும் நிலைமை தொடர்பில் அதில் உள்ளவர்கள் பலர் மகிழ்ச்சியாக இல்லை என்பது தெளிவாகிறது. சிப்பாய்கள் படையில் இருந்து விலகியோடுதல் என்பதும் அதிக எண்ணிக்கையில் நடந்து வந்துள்ளது.

படையில் இருந்து பல ஆண்டுகள் முன்பே ஓடியவர்களையெல்லாம் சேர்த்துக் கணக்கெடுக்கையில், விலகியோடியவர்களின் மொத்த எண்ணிக்கை 60 ஆயிரமாக உள்ளது என்றும், இவர்களை எல்லாம் தேடிப் பிடித்து கைது செய்யப் போவதாகவும் 12 நாட்கள் முன்புதான் இலங்கை இராணுவம் சார்பாகப் பேசவல்லவர் கூறியிருந்தார். ஆனால், அத்திட்டத்தை இலங்கை இராணுவம் தற்போது கைவிட்டுள்ளதாகத் தெரிகிறது.

விலகியோடியவர்கள் கிட்டத்தட்ட அனைவரின் பெயர்களையுமே இராணுவத்தில் இருந்து நீக்கிவிடப்போவதாக பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ளார்.

விலகியோடியவர்கள் எல்லாம் இனி தங்களை முன்னாள் சிப்பாய்கள் என்று கூறிக்கொள்ளலாம் என்று அவர் கூறினார்.

**TILKO JAFFNA CITY HOTEL**

70/6, K.K.S ROAD, JAFFNA. T.P:0212225969
Web:cityhoteljaffna.com
e-mail:info@hoteljaffna.com

Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non Ac Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers

Await Opening
Special Barbaque at our Garden Cafeteria
Inclusive of Chines/Indian Jaffna Authentic
Variety Cuisine s From our open hot ranga Kitchen

உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள், திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள், வியாபார நிறுவன ஒன்றுகூடல்களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு போதி செய்யப்பட்ட உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...

இந்தியா, சீனா மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...

மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட வுள்ளது.



உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு யாழ் நகரில்...

T.P.:077 6943479
K.Gunaseelan
Marketing Executive

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V. யுடன் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த நாளே முகவரியில் ஒப்படைக்கப்படும்.

MAHARAJA FOOD PRODUCT
மேலதிக விபரங்களுக்கு-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha,
Wellawathte.
T.P:-0112360926,0112359849

கொழும்புக்கான கட்டணம்
ரூபா 200/= மட்டுமே

யாழ்ப்பாணம்
aramex
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825



**இடமாற்றம்**

இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
**நியூ லலீதாஸ் ஜுவல்லறி** ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134



# இலங்கையில் ஏழு...

இலங்கை இராணுவமும்-அரசு ஆதரவு ஆயுதக் குழுக்களும் இந்த இரகசிய முகாம்களை நடத்தியதாகவும்-இதில் சில இன்னமும் செயற்படலாம் என்ற சந்தேகத்தையும் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்தது.

இது போன்ற இடங்களில் சித்திரவதைகள் - சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் போன்றவை நடைபெற்றதாக குற்றம் சாட்டப்படுகிறது. குறிப்பாக 7 முகாம்களின் முகவரியை அம்னெஸ்டி வெளியிட்டுள்ளது.

வவுனியா பூந்தோட்டம் கல்லூரி, வவுனியாவில் இருக்கும் 211ஆவது பிரிகேட்டின் தலைமையகம், வெளிக்குளம் பாடசாலை, புளொட் அமைப்பின் வவுனியா தடுப்பு மையம், ஓமந்தைக்கு 14 மைல்கள் தொலைவில் உள்ள ஐந்து கைவிடப்பட்ட வீடுகள் மற்றும் கட்டிடங்களில் முன்னாள் போராளிகள் 700பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் 80பேர் புலிகளின் முன்னணித் தலைவர்கள் என்றும் 300 பேர் புலிகளின் ஆதரவாக செயல்பட்ட பொதுமக்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர முல்லைத்தீவில் இரண்டு இரகசிய இடங்கள் இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலவும் மனித உரிமை மீறல்கள் குறித்து இந்த அமர்வில் விரிவாக ஆராயப்பட்டது. இந்தக் குழுவின் தலைவரான பெலிஸ்கியர் இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்து பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தார்.

மனித உரிமை மீறல்கள் குறித்த அம்னெஸ்டி உள்ளிட்ட அமைப்புக்கள் அளித்த ஆதாரங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டோர் மீது சுயாதீனமாக மருத்துவபரிசோதனை நடத்தப்படுவதில்லை என்றும் ஐ.நா. வின் சித்திரவதைகளுக்கு எதிரான குழுவின் தலைவர் பொலிஸ் கியர் கூறினார்.

பாரிய மனித உரிமை மீறல்கள் இலங்கையில் இடம் பெற்றதாக தமக்கு பல புகார்கள் வந்ததாக கூறிய அவர்-இப்புகார்களில் பலவந்தமாக காணாமல் போனது, பொலிசாரால் சித்திரவதை செய்யப்பட்டது, பாலியல் தாக்குதல் நடை பெற்றது, மனித உரிமை குறித்த வழக்குகளில் ஆஜராகும் வழக்கறிஞர்களை மிரட்டுவது, சிறையில் நடைபெறும் மரணங்கள் போன்றவை அடங்கும் என்றார்.

இலங்கை அரசு தான் அறிவித்தபடி தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் பெயர் விபரங்களை வெளியிடவில்லை என்றும் ஐ.நா அதிகாரி தெரிவித்தார்.

இந்த ஆண்டின் ஜனவரி மாதம் கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரக அதிகாரிகளிடம் தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் பெயர் விபரங்கள் அரசிடம் இருப்பதாகவும், இதை அவர்களின் உறவினர்கள் பெறலாம் என்று வெளியுறவுத்துறை கூறியிருந்தது.

ஆனால் இது போன்ற விபரங்கள் இருப்பதாக கூறப்பட்டாலும், விபரங்களை பெற முடியவில்லை என்று தன்னார்வ நிறுவனப்பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர் என்றார் பெலிஸ் கியர்.

சித்திரவதை தொடர்பான ஐ.நா. வின் உடன்பாட்டில் சில அம்சங்களில் தனது நாடு கைச்சாத்திடவில்லை என்று இலங்கை அமைச்சரவை ஆலோசகராக தற்போது இருக்கும் அரசின் முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

தமது அலுவலகத்தில் ரகசிய முகாம் ஏதும் செயற்பட வில்லை என்று புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

இந்த அமர்வில் எழுப்பப்பட்ட விடயங்கள் குறித்து இலங்கை அரசு இன்று புதன்கிழமை விரிவாக பதில் அளிக்கும் என்ற எதிர்பார்க்கப் படுகின்றது.

அதே நேரம் விடுதலைப் புலிகள் போரின் இறுதி கட்டத்தில் செய்த தற்கொலைத் தாக்குதல்கள், கட்டாய ஆள்சேர்ப்பு போன்றவை குறித்து ஏற்கெனவே ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களையும் பெலிஸ் கியர் நேற்றைய அமர்வில் பதிவு செய்தார். (ஏ-5,9)

# ஐரோ...

பெறும் உரிமையை குடிமக்கள் அனைவரும் கொண்டுள்ளனர் என்றும், அவை பற்றி சொந்தமாக முடிவுகளை எடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை உள்ளது என்றும் ஐரோப்பிய ஒன்றியம் நம்புவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஊடகங்களை சுதந்திரமாக செயற்பட அனுமதிக்குமாறும் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஏ-5)

# எதிர்த்துக் குரல் கொடுப்போர்...

அதிகாரப் பூர்வ இணையத்தள மான Lankawaynews, சிறிலங்காகார்டியன், சிறிலங்கா மிரர் உள்ளடங்கலாக பல இணையத்தளங்கள் ஒரே நாளில் தடைசெய்யப்பட்டுள்ளதாக ஊடக கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இது ஊடகங்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள மிகக் கொடுமையான நடவடிக்கை என சுதந்திர ஊடக அமைப்பின் அமைப்பாளர் சுனில் ஜெசேகர தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட சில இணையத்தளங்கள் அரசாங்கத்தை அவதூறு செய்யும் வகையிலும், கொலை மிரட்டல் பாணியிலும் தகவல் வெளியிட்டிருந்ததை ஊடக அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையத்தளங்களைப்பதிவு செய்தல் தொடர்பாக எந்தவொரு கலந்துரையாடல்களும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் இந்த அமைச்சால் அறிக்கை வெளியிடப்பட்ட அன்றைய தினமே குறிப்பிட்ட சில இணையத்தளங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன என சுனில் ஜெயசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

தனக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களை நசுக்குவதில் விருப்பம் கொண்டுள்ளமையை, மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இணையத்தளங்களை தடைசெய்ததன் மூலம் மீண்டும் நிரூபித்துள்ளது என சுதந்திர ஊடக அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Lankaenews இணையத்தளத்தை அரசாங்கம் தடைசெய்தமை தொடர்பான தனது அதிருப்தியை கடந்த வாரம் அமெரிக்கா அறிக்கை மூலம் வெளிப்படுத்தியுள்ளது.

எந்தவொரு இணையத்தளங்களையும் பார்வையிடுவது உள்ளடங்கலாக கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம் என்பது சிறிலங்கா அதிகாரிகளால் மதிக்கப்பட வேண்டிய அடிப்படை உரிமை என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் இணையத்தளங்களை முற்ற முழுதாகப் பார்வையிட முடியாமல் தடுப்பதற்கான வளங்கள் அரசாங்கத்திடம் இல்லை என்றும், ஆகவே எந்த வொரு இணையத்தளங்களையும் பார்வையிட வேண்டுமாயின் பதிலியைப் (proxy) பயன்படுத்தி மிக இலகுவாகப் பார்வையிட முடியும் என தகவற் தொழில்நுட்ப வல்லுநர் ஜிகான் மென்டிஸ் சண்டே ரைம்ஸ் பத்திரிகையிடம் தெரிவித்திருந்தார். (ஏ-5)

# சார்க்கில் ஜனாதிபதிக்கு...

உதவி ராஜாங்கச் செயலர் றொபேர்ட் ஓ பிளேக் தலைமை ஏற்கவுள்ளார்.

சார்க் மாநாட்டில் பங்கேற்பதற்காக றொபேர்ட் ஓ பிளேக் நேற்று மாலைதீவு பயணமானார். அவர் எதிர்வரும் 13ஆம் திகதி வரை அங்கு தங்கியிருப்பார் என்று அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சார்க் மாநாட்டில் பங்கேற்பதற்கும் அமெரிக்க குழுவில் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புற்ரெனிசும் இடம்பெறவுள்ளார்.

இந்த மாநாட்டில் பங்கேற்கும் தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் மற்றும் 'அதிகாரிகளுடன் அமெரிக்க அதிகாரிகள் விரிவான பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் ராஜாங்கத் திணைக்களம் கூறியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலர் றொபேர்ட் ஓ பிளேக் சந்தித்து பேசவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை அதனை விரைவில் பகிரங்கப்படுத்துவது, அறிக்கையின் பரிந்துரைகளின் மீதான மேல்நடவடிக்கைகள் குறித்து அவர் வலியுறுத்தவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-பா)

**தவறிவிட்டது**

06.11.2011-ல் இருபாலை V.H. லேனிற்கும் கட்டைப்பிராய்க்கும் இடையில் தே.அ.அ. 750864732V, சாரதி அனுமதிப்பத்திரம், Insurance, ATM Card அடங்கிய Purse ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P.:- 0776095873

**தவறிவிட்டது**

ஞானசேகரம் றெஜி வின்சலஸ் என்பவருடைய அடையாள அட்டை 871822263V கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P.:- 077-0757221 (6763)

**சிங்கள மொழிபெயர்ப்பு**

தமிழ்க் கடிதங்களை சிங்களத்தில் மொழிபெயர்த்து கணனியில் தட்டச்சு செய்து பெறலாம்.
திணைக்களங்களுக்கு விசேட சலுகை உண்டு.
இதுவும் எமது தனித்துவமான சேவையாகும்



**திசைகாட்டி**
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 021 221 9016, 021 491 4527
இணையத்தள முகவரி www.thisaikaddi.lk
(யாழ் நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)
(சி-4930)

யாழ்ப்பாணப் பெருமக்களே
அவுஸ்திரேலியா செல்லலாம். மிகுதியை நேரில் சனி, ஞாயிறு, பொது விடுமுறை நாட்களில் பேசிக் கொள்ளலாமா?



**திசைகாட்டி**
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 021 221 9016, 021 491 4527
இணையத்தள முகவரி www.thisaikaddi.lk
(யாழ் நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)
(சி-4930)

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

A/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் நுழைவு மாணவர், பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர் கலந்துகொள்ளும்

**இலவச ஆங்கில வகுப்பு (English Workshop)**

10.11.2011 வியாழக்கிழமை (போயா விடுமுறை)
பிரிவுகள் : (ஆறு பிரிவுகளில் ஏதாவதொரு பிரிவில் சேரலாம்)
காலை : 8-9.30, 9.30-11, 11-12.30
மாலை 1-2.30, 2.30-4, 4-5.30

இலவச வகுப்பு ஊடாக வார மற்றும் வார இறுதி பயிற்சிநெறியில் சேரலாம்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

இப்பத்திரிகை வலம்புரி அச்சகம் லிமிட்டெட் இனரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.